
பெயர்
இல்லாத
தெரு

# பெயர் இல்லாத தெரு

(துப்பறியும் நாவல்)

ஆசிரியர் :

**தமிழ்வாணன்**

பதிப்பாசிரியர் :

**லேனா தமிழ்வாணன்**, எம்.ஏ.,

**மின்னூலாக்கம் : செல்லா**

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால்பெட்டி எண் : 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி 4342926
தொலைநகல் : 044-4346082

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

# நூல் விபரம்

நூல் தலைப்பு — பெயர் இல்லாத தெரு

ஆசிரியர் — தமிழ்வாணன்

மொழி — தமிழ்

பதிப்பு ஆண்டு — 1966, 1983, 1998

பதிப்பு விபரம் — மூன்றாம் பதிப்பு

உரிமை — மணிமேகலைப் பிரசுரம்

தாளின் தன்மை — 11.2 கி.கி.

நூலின் அளவு — கிரௌன் சைஸ் (12½X18½ செ.மீ.)

அச்சு எழுத்து அளவு — 10 புள்ளி

மொத்த பக்கங்கள் — 128

---

நூலின் விலை — ரூ. 24.00

---

அச்சிட்டோர் — ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ்,
கோடம்பாக்கம், சென்னை-24

நூல் கட்டுமானம் — தையல்

வெளியிட்டோர் — மணிமேகலைப் பிரசுரம்,
சென்னை -17

## விற்பனையாகும் இதர நூல்கள்

| | |
|---|---|
| துப்பாக்கி முனை | 15-50 |
| மறைந்த நகரம் | 38-00 |
| பேய் மழை | 18-00 |
| காபரே கேர்ள் | 6-75 |
| இருண்ட வீடு | 7-50 |
| முரட்டுப் பெண் | 19-00 |
| மீனழகி | 5-75 |
| நடுநிசி நேரம் | 6-25 |
| எல்லாம் தவறு! | 7-00 |
| கண்ணம்மா | 7-50 |
| மஞ்சள் தலையணை | 30-00 |
| மணிமொழி, நீ என்னை மறந்துவிடு! | 48-00 |
| புயல் வீசிய இரவில் | 8-00 |
| என்னுடன் பறந்து வா! | 9-00 |
| மலையில் மறைந்த மனிதன் | 7-25 |
| நடிகையின் உயில் | 6-00 |
| இன்பவல்லி, இதுவா உன் முடிவு? | 7-00 |
| கிழக்கே உதித்த காதல் | 7-75 |
| ஒற்றைக் கண் மனிதன் | 8-50 |
| கவிழ்ந்த கப்பல் | 17-00 |
| கான்ஸ்டபிள் கண்ணம்மா | 12-00 |
| கண்ணில் கலந்த கண்ணே! | 6-25 |
| இரவு மணி இரண்டு | 9-25 |
| மனிதர்கள் இல்லாத தீவு | 8-50 |
| என்னைத் தொடாதே! | 7-25 |
| சிறைக்கு வெளியே | 5-75 |
| இரண்டாவது நிலா | 6-25 |

# விற்பனையாகின்றன!

| | |
|---|---|
| டுவெல்வ்-ஓ-கிளாக் | 15-75 |
| மூடிக் கிடக்குதே உன் நெஞ்சம் | 31-00 |
| சிம்லாவில் கண்ட அழகி | 13-25 |
| பெண்கள் தேடிய புதையல் | 22-50 |
| கடலில் தெரிந்த கை | 19-00 |
| பாலைவனத்தில் பத்து நாட்கள் | 15-00 |
| கைதி நம்பர் 811 | 11-00 |
| இரும்புக் கை மனிதன் | 21-00 |
| மறைந்த விமானம் | 19-50 |
| இன்னுமா உயிரோடு இருக்கிறாய்? | 7-75 |
| மூவரை விழுங்கிய முதலை | 6-00 |
| ஏழரை மணி எக்ஸ்பிரஸ் | 5-90 |
| சுவரில் தெரிந்த நிழல் | 6-90 |
| கடலில் கண்டெடுத்த புதையல் | 9-50 |
| கால்கள் தெரிந்தன! | 11-00 |
| காணக் கிடைக்காத பணம் | 7-75 |
| நிழல் மனிதன் | 35-00 |
| பதினான்காவது மாடி | 6-00 |
| இருளில் வந்த இருவர் | 24-00 |
| என்னைத் தேட வேண்டாம் | 20-00 |
| மருதமலைச் சாரலிலே | 6-00 |
| சீன ஒற்றர்கள் | 7-25 |
| பம்பாய் பைத்தியம் | 7-25 |
| கள்ளனைத் திருத்திய கன்னி | 7-50 |
| மழைக்குப் பின் | 31-00 |
| பேய் பேய்தான் | 27-00 |
| ஆறு அழகிகள் | 9-75 |
| காலடி ஓசை | 5-00 |

# பெயர் இல்லாத தெரு

## 1

கெட்ட பிறகு எல்லாரும் பட்டணத்திற்கு வருவார்கள். கெடாமலேயே பட்டணம் வந்து சேர்ந்துவிட்டான் பெரிய தம்பி! வஞ்சகம் இல்லாமல் வளர்ந்து விட்டிருந்த அவனைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை என்று மற்றவர்கள் எண்ணுவார்கள். உண்மையில் அவன் பெரிய இடத்தில் வளர்ந்தவன்தான். ஆனால் பெரிய இடத்துப் பிள்ளை அல்லன். தாய் தந்தையரை இழந்து, கொஞ்சம் உறவின ரான ஒரு பெரும் பணக்காரரின் வீட்டில் தஞ்சாவூரில் வாழ்ந்து வந்த அவன், படிப்பில் கல்லூரியை எட்டிப் பார்த்தவுடன் விட்டுவிட்டான். அவனுக்குப் படிப்பைவிட, குத்துச்சண்டை பயிலுவதிலும், சினிமா பார்ப்பதிலும், சீட்டு ஆடுவதிலும், வெட்டிப்பேச்சு பேசுவதிலுமாகப் பொழுதைப் போக்குவதில் மிகுந்த இன்பம் உள்ளவன். அவனைப் பார்த்து எல்லாரும் அவன் ஒரு சினிமா நட்சத்திரத்தைப்போல் இருப்பதாகக் கூறினார்கள். இது அவனுடைய கனவுகளை மிகுதியாக்கிவிட்டது. தமிழ்நாட் டின் சிறிய சிறிய ஊர்களிலிருந்து கையில் ஒரு காசுகூட இல்லாமல் சென்னைக்குப் போய்விட்டவர்கள் பலர் இன்று பெரும் பணம் சேர்த்துவிட்டதையும் பெரிய சினிமா நட்சத்திரமாக இருப்பதையும் கதைகதையாகக் கேள்விப்

பட்டான். ஆகையால் அவனும் என்றாவது ஒருநாள். தானே பிழைத்துப் பெரும்பணம் சேர்த்து, சென்னையில் ஒரு பெரிய புள்ளியாக வாழ முடிவு கட்டினான். அதன் விளைவாக ஒரு கைப் பெட்டியில் நான்கு நைலான் சட்டைகளையும் நான்கு நைலான் கால் சட்டைகளையும் மடித்து எடுத்து வைத்துக்கொண்டு, சென்னையில்ஒருவாரம் தள்ளப் போதுமான அளவுக்குப் பணத்தையும் தனது உறவினரிடம் கேட்டு வாங்கிக்கொண்டு வேலை தேடப் போவதாகச் சொல்லிவிட்டுச் சென்னைக்கு வந்துவிட்டான்!

வந்து ஆறு நாட்கள் ஆகிவிட்டன. கையிலிருந்த காசு கரைந்து கொண்டே வந்தது. இருக்கும் காசை இன்னும் இரண்டு நாட்களுக்குச் செலவழித்துவிட்டால் திரும்பிப் போகக்கூடக் கையில் டிக்கெட்டுக்குப் பணம் இல்லை! இந்தியாவில் எத்தனையோ இலட்சம்பேர்கள் டிக்கெட் வாங்காமல் புகைவண்டியில் போகிறார்களாமே, அதைப் போல இவனும் ஏன் தஞ்சாவூரைப் போய்ப் சேர்ந்துவிட முடியாது? இதைப்பற்றி அவன் எண்ணிப் பார்க்காமல் இல்லை. டிக்கெட் வாங்காமல் சென்றால் இவனைப் போன்றவர்கள் மிக உறுதியுடன் பிடிபட்டு விடுவார்கள்! டிக்கெட் சோதகர் இவனைப் போன்றவர்கள் முகத்தைக் கண்டவுடன் உண்மையைப் புரிந்து கொள்வார்கள்! சீர்கெட்டு கையிலிருக்கும் காசை விட்டு பட்டணத்துக்குப் பிழைக்கலாம் என்று வந்த பெரியதம்பி திரும்பவும் தஞ்சாவூருக்குப் போக விரும்பவில்லை எப்படியாவது இங்கேயே தங்கி எக்கேடு கெட்டாவது பணத்தைப் பார்த்துவிட வேண்டும் என்றே பெரியதம்பி முடிவு கொண்டான்!

இப்படி ஒருமுடிவு செய்ததும் அவன்உடலில் உற்சாகம் பிறந்தது. பெட்டியிலிருந்த பணத்தை எடுத்துப் பார்த்தான். ஐம்பது ரூபா இருந்தது. சென்னையில் இருந்த ஒரு பெரிய ஓட்டலில் விலைஉயர்ந்த உணவுவகைகள் விற்கப்

படுவதாகவும் அந்த ஓட்டலில் அழகி ஒருத்தி பாட்டுக் களைப் பாடி உணவு உண்ண வருபவர்களுக்கு இன்னிசை விருந்து கொடுப்பதாகவும் பத்திரிகையில் படித்தான். அந்தப் பெரிய ஓட்டலுக்குச் சென்று நல்ல உணவு வகை களை உண்டுவிட்டு, என்னசெய்வது இனி என்று திட்டமிட முடிவு செய்தான்.

விளக்கு வைக்கும் நேரம் வந்தது. நல்ல உடைகளை அணிந்து எல்லாப் பணத்தையும் கால் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு புறப்பட்டான். புறப்படுமுன் பத்திரி கையைப் பார்த்து அந்தப் பெரிய புகழ்பெற்ற ஓட்டலின் பெயரை நினைவுபடுத்திக் கொண்டான்.

மூன்லைட் ஓட்டல் என்பது அதன் பெயர்.

பெரியதம்பி தான் தங்கியிருந்த எவரெஸ்ட் ஓட்டலி லிருந்து இந்த மூன்லைட் ஓட்டலுக்கு வாடகைக் கார் ஒன்றைப் பிடித்து அதில் சென்றான். சென்னை மவுண்ட் ரோட்டில் ஆயிரம்விளக்குப் பகுதியில் அமைதியான ஓர் இடத்தில் அமைந்திருந்தது மூன்லைட் ஓட்டல். வாடகைக் காரிலிருந்து இறங்கிய பெரியதம்பி, ஓட்டலின்முன் சந்திரனைப் போல் முழுவட்டமாக மாடியின்மீது அமைந் திருந்த விளக்கையே சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந் தான். பிறகு அந்த ஓட்டலுக்குள் மெல்ல நடந்தான். ஓட்டலின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு அவன் உள்ளே நுழைந்தபோது குளுகுளுவென்று ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருந்த அந்த ஓட்டலின் உட்புற அமைப்பையும் அங்கே உட்கார்ந்திருந்தவர்களையும் பார்த்தான். அவனுக்கு இப்போது டோக்கியோவுக்கோ, இலண்ட னுக்கோ, நியூயார்க்குக்கோ வந்துவிட்டதைப் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

உள்ளே சுவர் ஓரங்களில் கண்கூசாத வண்ண விளக்குகள் பார்ப்பவர்கள் மனத்தில் மகிழ்ச்சியைப் பிறப்பித்தன. மேசைகளின்மீது விரிக்கப்பட்டிருந்த தூய வெண்மையான துணிகள் பளிச்சென்று இருந்தன. மேசைகளின்முன் உட்கார்ந்து அழகிய ஆண்களும், கண்களைக் கவரும் பெண்களும் சிரித்துப் பேசிக்கொண்டு உணவு உண்டு கொண்டிருந்தார்கள். சற்றுத் தொலைவில் வட்டமான ஒரு மேடையின்மீது நின்றுகொண்டு அழகே உருவான வடநாட்டுப் பெண் ஒருத்தி, ஆங்கிலப் பாட்டு ஒன்றை அப்போதுதான் பாடத்தொடங்கினாள். அவள் பாடத் தொடங்கியதும், பேசிக்கொண்டிருந்தவர்கள் அமைதியுடன் சாப்பிட்டபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பெரியதம்பி கூட்டத்தின் நடுவில் இருந்த காலி மேசையை நோக்கி நடந்தான். அவன் தன்னந்தனியனாக அந்த மேசையின்முன் உட்கார்ந்து பாட்டுப் பாடும் அந்த அழகியையே பார்த்துக் கொண்டிருந்தான். முன் நாள் அவன் ஓர் ஆங்கிலப் படத்துக்குப் போயிருந்தான். அந்தப் படத்தில் வந்த பாட்டு அது. ஆகையால் அந்தப் பாட்டை அவன் மிகவும் விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தான். எதிர்காலத்தைப் பற்றியோ, என்ன செய்ய வேண்டும் எப்படி வாழவேண்டும், என்ன சாப்பிடவேண்டும் என்பதைப் பற்றியோவெல்லாம் நினைவில் கொள்ளாமல் மெய்மறந்து அவன் உட்கார்ந்திருந்த வேளையில் எதிர்காலம் அவனுக்கு எப்படி இருக்கும் என்பதை ஏதோ ஒன்று முடிவு செய்துவிட்டது! அதை அவன் அறிந்திருந்தால் அப்போதே எழுந்து ஓடியிருப்பான். எதிர்காலத்தை அறியும் சக்தி அவனுக்கு இல்லையே!

# 2

பரிமாறுபவன் வந்து தாழ்மையுடன் அவன் பக்கத்தில் நின்று 'என்ன சாப்பிடப் போகிறீர்கள்?' என்று மெல்லக் கேட்டான்.

உணவுப் பட்டியலையும் அவைகளுக்கு எதிரே போடப் பட்டிருந்த விலைகளையும்பார்த்துவிட்டு, கையில்கொண்டு வந்திருக்கும் பணம் போதாதோ என்று எண்ணியபடி சிறிது நேரம் சிந்தனைசெய்தான். பிறகு படபடவென்று நான்கைந்து உணவு வகைகளின் பெயர்களைச் சொல்லி விட்டு பாட்டுப் பாடிக் கொண்டிருந்த பெண்ணை அவன் பார்த்தான்,

அவள் அடுத்த பாட்டைத் தொடங்க இன்னும் சில விநாடிகள் இருந்தன. ஏற்கெனவே பாடிக் கொண்டிருந்த பாட்டு முடிந்துவிட்டது. கைதட்டல் எழுந்தது. புறப்பட முன்னேற்பாடுடன் இருந்த சிலர், அந்த நேரத்தில் எழுந்து வெளியே சென்றார்கள். அப்படி எழுந்து சென்ற மனிதர் களில் ஒருவன் பெரியதம்பியின் பக்கத்தில்வந்து நின்றான். அவன் கையில் ஓர் அட்டைப்பெட்டி இருந்தது. சிறிய அந்த அட்டைப் பெட்டியை அவன் பெரியதம்பியிடம் கொடுத்துவிட்டு, பெரியதம்பி, 'என்ன இது?' என்று கேட்பதற்குள் அவன் விரைந்து வெளியே போய்க் கொண் டிருந்தான்.

பெட்டியைக் கையில் வாங்கிய பெரியதம்பி, "என்ன இது?" என்று கேட்டான். அந்த மனிதன் விரைந்து வெளியே சென்றுவிட்டதால், "யாரப்பா நீ! எதற்காக இந்தப் பெட்டியை என்னிடம் கொடுத்துவிட்டுப் போகி றாய்?" என்று சற்றுக் கத்தியபடி எழுந்து ஓடினான். அப் போது பெரியதம்பி கால்தவறிக் கீழே விழுந்தான்! அவன்

கையிலிருந்த அட்டைப்பெட்டி நழுவிக் கீழே விழுந்தது. அதன் மூடி திறந்து கொண்டபோது அதிலிருந்து—

குத்துச்சண்டை வீரர்கள் தங்களது கைகளில் அணிந்து கொண்டு குத்துச்சண்டை போடும் தோல் கையுறைகள் இரண்டு வெளியே வந்து விழுந்தன!

கீழே விழுந்த பெரியதம்பியின் முகத்தின் பக்கத்தில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு ஜதை முரட்டு ஷூக்கள் வந்து நின்றன! இரண்டு முரட்டு மனிதர்கள் அவனைக் குனிந்து தூக்கி அவனை நிற்க வைத்தார்கள்.

"நன்றி" என்றான் பெரியதம்பி.

அந்த இரண்டு முரட்டு மனிதர்களும் விலை உயர்ந்த உடைகள் அணிந்து, இரும்புச் சிலைகளைப்போல் காணப் பட்டார்கள். அவர்களில் ஒருவன் கீழே குனிந்து அட்டைப் பெட்டியை எடுத்து அதில் கீழே கிடந்த கையுறைகளை எடுத்துப் போட்டு மூடிப் பெரியதம்பியிடம் கொடுத்தான்.

"அந்த மனிதன் யார் என்று தெரியவில்லை! இந்தப் பெட்டியை என்னிடம் கொடுத்துவிட்டுப் போகிறான்! ஆள் மாறாட்டமாக இருக்கும் என்று நான் நினைக் கிறேன்" என்று சொல்லியபடி பெட்டியைக் கொடுத்து விட்டுச் சென்றவனைப் பிடிக்க வெளியே ஓடினான் பெரிய தம்பி!

அந்த இரண்டு மனிதர்களும் அவன் பின்னாலேயே ஓடிவந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

பெட்டியைக் கொடுத்தவன் மறைந்துவிட்டான்.

பெரியதம்பி அந்த இருவரையும் பார்த்து, "யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்,

இருவரும் பேசாமல் அவனைத் தள்ளிக்கொண்டு சென்று வெளியில் நின்றிருந்த ஒரு பெரிய புதிய காரில் ஏற்றினார்கள். அவனுக்கு இரண்டு பக்கங்களிலும் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

“காரோட்டி அந்தக்காரை விரைவாகச்செலுத்தினான்.

“என்னை நீங்கள் எங்கே அழைத்துச் செல்லுகிறீர்கள்? எனக்கு எதுவும் தெரியவில்லையே!” என்று கத்தினான் பெரியதம்பி!

இரண்டு முரட்டு மனிதர்களும் பேசவில்லை.

நடப்பது நடக்கட்டும். இவர்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒரு வழியாகத் துணிவுடன் பேசாமல் உட்கார்ந்துவிட்டான் பெரியதம்பி.

சென்னையில் இப்படி ஓர் அனுபவம் ஏற்படும் என்றோ முன்பின் தெரியாதவர்களுடன் திடீரென்று அவன் எங் கேயோ பயணம் செய்வான் என்றோ சிறிதும் எதிர்பார்க்க வில்லை!

கார் நீண்ட நேரம் எங்கேயோ சுற்றிக்கொண்டு, பெரிய தம்பிக்குத் தெரியாத ஓர் இடத்துக்குச் சென்றது. சென்னையே அவனுக்குப் புதிது. அதிலும், அவன் பார்க் காத ஓர் இடத்துக்கு இப்போது அவன் சென்றான்.

நீலநிற பங்களா ஒன்றின் முன் கார் நின்றது. பெரிய தம்பியை இருவரும் இறங்கும்படி சாடை காட்டி அவனை இறக்கி அழைத்துச் சென்றார்கள்.

பங்களாவின் மாடிக் கதவு திறந்தது. உள்ளே அந்த மூவரும் சென்றதும் கதவு மூடிக் கொண்டது.

கூடத்தின் நடுவில் உயரமான ஒரு பெரிய சோபாவில் ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். அந்த மனிதரைப் பார்க்க முடியவில்லை. அந்தச் சோபா வேறு பக்கம் திரும்பி இருந்தது. அந்த மனிதரின் வலக்கை மட்டும் தெரிந்தது. அவர் கையில் பளபளவென்று வைர மோதிரங்கள் மின்னின. இரண்டு விரல்களுக்கு இடையில் சிகரெட் ஒன்று புகைந்து கொண்டிருந்தது. சோபாவுக்குக் கீழே அவருடைய கால்கள் மட்டும் தெரிந்தன. பளபளக்கும் ஷூக்கள் விலை உயர்ந்த கால்சட்டையின் முனை—இவைகள் மட்டுமே தெரிந்தன. சோபா உயரமாக இருந்ததால் அவர் தலைகூடப் பின்னால் தெரியவில்லை.

பெரியதம்பியை அழைத்துச் சென்ற இரண்டு மனிதர்களும் பெரியதம்பியை அப்படியே நிற்கும்படி சொல்லி விட்டு, அவன் கையிலிருந்த பெட்டியை மட்டும் வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் இருவரில் ஒருவன் அந்த அட்டைப் பெட்டியைச் சோபாவில் உட்கார்ந்திருந்த மர்ம மனிதரிடம் பக்கவாட்டில் நின்றபடியே கொடுத்தான்.

அந்த மனிதர் அந்தப் பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தார்.

பெரியதம்பியின் மனம் படக்படக் என்று அடித்துக் கொண்டது.

## 3

யார் இந்த மர்ம மனிதர், முகத்தைக் காட்டாமல் ஏன் இப்படி இவர் வேறு பக்கமாகப் பார்த்துக் கொண்டு பெட்டியைச் சோதித்துப் பார்க்கிறார் என்று எண்ணி வியப்படைந்தான் பெரியதம்பி.

சோபாவில் உட்கார்ந்திருந்த மர்ம மனிதர் தன் பக்கத்தில் நின்றவனிடம் ஏதோ சாடை காட்டினார். உடனே அவன் திரும்பிப் பெரியதம்பியைப் பார்த்து முன்னால் வரும்படி சாடை காட்டினான்.

பெரியதம்பி எதையும் ஏற்றுக் கொள்ளத் துணிந்தவனைப்போல் முன்னால் நடந்தான், அந்த மர்மமனிதரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலினால் அவன் சற்று விரைந்து நடந்து முன்னால் வந்து நின்றான்.

சோபாவில் உட்கார்ந்திருந்த அந்த மனிதர் பெரியதம்பியை உற்றுப் பார்த்தார். அவர் பார்த்த பார்வையிலிருந்தே அவர் அவன் எப்படிப்பட்டவன் என்று எடைபோடுவதைப்போல் இருந்தது. அவர் பார்வையில் கருணையோ அன்போ இல்லை. கழுகுப் பார்வை, அது அந்த மனிதருக்கு அறுபது வயது இருக்கும். அவருக்கு வயதானது அவ்வளவாகத் தெரியவில்லை. உரமேறிய வலுவான உடல். அவருடைய சட்டையும் கால்சட்டையும் மடிப்புக் கலையாமல் எடுப்பாக இருந்தன. அவர் சட்டைப் பித்தான்களில் பதிக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த வைரங்கள் பெரிய தம்பியின் கண்களைப் பறித்தன. குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால்தான் குட்டுப்படப் போகிறோம் என்ற எண்ணம் பெரியதம்பியின் மனத்தில் தோன்றியது.

அந்த மனிதர் இப்போது மெல்லச் சிரித்தபடி அவனைப் பார்த்துக் கேட்டார்: ''இந்தப் பெட்டியை உன்னிடம் கொடுத்த மனிதன் யார்? இதை எதற்காக உன்னிடம் அவன் கொடுத்தான்?''

''அந்த மனிதன் யார் என்பது எனக்குத் தெரியாது. அவன் எதற்காக இதை என்னிடம் கொடுத்தான் என்பதும் எனக்குத் தெரியாது. எல்லாம் ஏதோ திரைப்படத்தில்

நடப்பதைப்போல் நடந்திருக்கிறது! இப்போது, நீங்கள் யார் என்பதும் எனக்குத் தெரியாது!" என்றான் பெரிய தம்பி.

மர்மமனிதர் மீண்டும் மெல்லச் சிரித்தார். அவர் சிரித்ததிலிருந்து, அவன் சொல்லியதை அவர் நம்பினாரா இல்லையா என்பது தெரியவில்லை?

அவர் தோற்றம் அவனுக்கு ஒரு சிலந்தியை நினை ஊட்டியது. சிலந்தியின் அச்சம் தரும் வலையில் வந்து சிக்கிய பூச்சி எப்படி அந்தச் சிலந்திக்கு இரையாகிவிடுமோ அப்படித்தான் அவனும் இந்த மர்ம மனிதரின் செயல்களுக்கு இரையாக வேண்டுமா?

"உன் பெயர் என்ன?'' என்று கேட்டார் அந்த மனிதர் அடுத்தபடியாக.

"பெரியதம்பி."

''புலிக்குட்டி இல்லையா உன் பெயர்? ஏன் மறைத்துப் பேசுகிறாய்?'' என்று கத்தினார் அவர்.

"புலிக்குட்டியா? இல்லை. என் பெயர் பெரியதம்பி தான். இப்போதுதான் புரிகிறது புலிக்குட்டி என்பவனைப் பிடித்து வருவதற்குப் பதில் உங்களுடைய ஆட்கள் என்னைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள் என்பது.''

''சென்னையில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

''வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிறேன். போகிற போக்கைப் பார்த்தால் எனக்கு உடனே வேலை கிடைத்துவிடும்போல் இருக்கிறது'' என்றான் பெரியதம்பி.

''உண்மைதான், உனக்கு வேலை கிடைத்துவிட்டது என்னுடன் வா'' என்றார் அந்த மனிதர்.

அந்த மனிதர் சோபாவிலிருந்து எழுந்து நடந்தபோது, அவர் நடையில் ஓர் உறுதி இருந்தது. பின்னால் பெரிய தம்பி நடந்தான். அவனுக்குப் பின்னால் அவனைக் கடத்தி வந்த இருவரும் நடந்தார்கள்.

மாடியை விட்டுக் கீழே இறங்கிச் சென்றார்கள் எல்லா ரும். வீட்டின் பின்பகுதியில் இருந்த ஓர் அறையின் சன்னல் களும் கதவும் மூடப்பட்டிருந்தன. அந்த அறைக்குள் அவர்கள் சென்றார்கள்.

மர்மமனிதர் விளக்கைப் போட்டார். அந்த அறையின் நடுவில் ஒரு பெரிய மேசையின்மீது வெள்ளைத் துணியால் மூடப்பட்ட பிணம் ஒன்று கிடந்தது. அதைப் பார்த்ததும் பெரியதம்பிக்குச் சற்றுத் தாக்குதல் ஏற்பட்டது. இதை விடப் பெரிய தாக்குதலை இன்னும் சில வினாடிகளில் அவன் அடைய இருந்தான்.

மர்மமனிதர் தமது ஆட்களிடம் சாடை காட்டினார். அவர்களில் ஒருவன் முன்னால் வந்து பிணத்தின் முகத்தை மட்டும் விலக்கினான். அடுத்த வினாடி—

பெரியதம்பிக்கு வாய்விட்டுக் கத்தவேண்டும் போலி ருந்தது. அவன் தனது உணர்ச்சிகளை மிக அடக்கிக் கொண்டு அந்தப் பிணத்தைப் பார்த்தான். இறந்து கிடந்த அந்த மனிதன் பெரியதம்பியைப் போலவே இருந்தான்.

அவனால் நம்பவே முடியவில்லை. அவனால் பேசவே முடியவில்லை.

## 4

பெரியதம்பி மின்சார சிகிச்சை பெற்றவனைப்போல் திணறியபடி சிறிது நேரம் நின்றிருந்தான். பிறகு அவன் சொன்னான்: ''மிகவும் அச்சத்திற்கு உரியதாக இருக்கிறது. என்னைப் போலவே இருக்கும் இந்தமனிதன் யார்? எனக்கு எதுவுமே விளங்கவில்லையே''

மர்ம மனிதர் சொன்னார்: ''எங்களுக்குத் தெளிவாக விளங்குகிறது. இந்த மனிதன் பெயர் புலிக்குட்டி! இன்று இவன் ஒரு விபத்திலே இறந்துவிட்டான். இவன் ஓட்டி வந்த கார் விபத்துக்குள்ளாகிவிட்டது இவன் இறந்தது எங்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.''

பெரியதம்பி ஆவலுடன்: ''அப்படியானால் மூன்லைட் ஓட்டலில் இந்த மனிதரிடம் கொடுக்கவேண்டிய பெட்டியைத்தான், அந்த முன்பின் தெரியாத மனிதன் என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றானா?''

''ஆமாம் நீ அந்த அட்டைப் பெட்டியைப் பெற்றுக் கொண்டதும் அமைதியுடன் நீ எழுந்து செல்லாமல் பெட்டியைக் கொடுத்தவனிடமே அதைத் திருப்பிக்கொடுக்க முயன்றதால், என்னுடைய ஆட்கள் உன்னை என்னிடம் அழைத்து வந்தார்கள்! புலிக்குட்டியைப் போலவே நீ இருக்கிறாய் அல்லவா?''

''இப்போது அதற்கு என்ன? நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' என்று கேட்டான் பெரியதம்பி.

''மேலே வா சொல்லுகிறேன்'' என்று சொல்லிவிட்டு மாடிக்கு நடந்தார் அந்த மர்ம மனிதர்.

அந்த இரண்டு மனிதர்களும் பிணத்தின் முகத்தை மூடி விட்டு அறையைச் சாத்திவிட்டு அவனுடன் நடந்தார்கள்.

மாடிக்கு வந்ததும் அந்த மர்ம மனிதர் மீண்டும் சோபாவில் உட்கார்ந்தார். அவர் எதிரே சென்று நின்றான் பெரியதம்பி. அவர் சொன்னார்: "புலிக்குட்டி ஒரு பெரிய குத்துச்சண்டை வீரன். அவன் நாளைய தினம் வல்லவன் என்னும் மற்றொரு குத்துச்சண்டை வீரனுடன் குத்துச் சண்டை செய்வதாக இருந்தது. இந்தக் குத்துச்சண்டையில் யார் வெற்றி பெறுவார்கள்; யார் தோற்றுப்போவார்கள் என்பதை அறிய எல்லோருக்கும் ஆவல் மிகுதியாக இருக்கிறது. குத்துச்சண்டையில் மிகவும் ஊக்கமுள்ள பெரும் பணக்காரர்கள்; நிறைந்த பணத்தைப் பந்தயமாகக் கட்டியிருக்கிறார்கள். புலிக்குட்டி வென்றால் பலர் ஏழையாகி விடுவார்கள் அதைப் போலவே வல்லவன் வென்றால், புலிக்குட்டியின் மீது பணத்தைக்கட்டியவர்கள் பெரும்பணத்தை இழந்து விடுவார்கள்! எது எப்படியானாலும் சரி, இந்தக் குத்துச்சண்டை நடந்தே ஆக வேண்டும். பணம் கட்டியவர்களுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கக் கூடாது!"

பெரியதம்பிக்கு அந்த மனிதர் என்ன சொல்லப் போகிறார் என்பது புரிந்துவிட்டது "புலிக்குட்டிக்குப் பதிலாக என்னை வல்லவனை எதிர்த்துக் குத்துச்சண்டை போடச் சொல்லுகிறீர்களா?'' என்றான் அவன்.

''ஆமாம்'' என்றார் அவர் உற்சாகத்துடன்!

''எனக்குக் குத்துச் சண்டையைப் பற்றித் தெரியுமே தவிர, அவ்வளவாகப் பழக்கமில்லை. வல்லவன் குத்துச் சண்டையில் கைதேர்ந்தவன் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!" என்றான் பெரியதம்பி.

"இன்னும் நல்லதாகிவிட்டது! நீ துன்பம் கொள்ள வேண்டாம். இரண்டாவது ரவுண்டிலேயே நீ தோற்றுப் போய் விழுந்துவிட வேண்டும்! பிறகு நீ எழுந்திருக்கவே கூடாது! புரிகிறதா?''

''இதனால் எனக்கு என்ன இலாபம்?'' என்று கேட்டான் பெரியதம்பி.

''உனக்குப் பத்தாயிரம் ரூபா கிடைக்கும்! பத்தாயிரம் ரூபாயுடன் நீ மறைந்து விடவேண்டும்!''

''உண்மையில் புலிக்குட்டி இறந்துவிட்டபோது, புலிக் குட்டியைப்போல் உள்ள நான் ஆள் மாறாட்டமாகநடிப்பது சட்டப்படி குற்றம் அல்லவா?"

"குற்றம்தான்! ஆனால் இந்த உண்மை நம்மைத்தவிர வேறு எவருக்கும் தெரியாது! குத்துச்சண்டை முடிந்ததும். புலிக்குட்டி காரில் சென்றுவிட்டான். அவன் எங்கே சென் றான் என்று ஒருவருக்கும் தெரியாது" என்று எல்லாரும் பேசிக்கொள்ளும்படி நான் செய்துவிடுகிறேன். உனக்காக ஒரு கார் ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தக் காரில் நீ சென்றுவிடவேண்டும்'' என்றார் அந்த மனிதர்!

பெரியதம்பி சிறிது நேரம் சிந்தித்தான். "உங்களுடைய இந்தத் திட்டத்தை நான் ஏற்காவிட்டால்?" என்று கேட்டான்.

மர்மமனிதர் திரும்பி, அவர் பின்னால் நின்ற இருவரில் ஒருவனைப் பார்த்தார். அந்த மனிதன் உடனே தனதுகால் சட்டைப் பையிலிருந்த துப்பாக்கியையும், அந்தக் கைத்துப் பாக்கியின் நுனியில் மாட்டப்படும் குழாய் போன்ற நீண்ட சைலன்ஸரையும் எடுத்தான். துப்பாக்கியின் குழாயில் அந்தச் சைலன்ஸரைப் பொருத்தினான்.

மர்மமனிதர் சொன்னார்: "இந்தத் துப்பாக்கி வெடித்தால் சோடாப்புட்டியைத் திறப்பது போன்ற ஓசை மட்டுமே கேட்கும். இந்த ஓசை வெளியே கேட்காது. நீ உயிருடன் திரும்பிப் போக முடியாது!"

"உங்கள் திட்டத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் கேட்கும் சில கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லவேண்டும்" என்றான் பெரியதம்பி.

"கேள்."

"புலிக்குட்டி இறந்துவிட்டான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்தும்கூட என்னைப் பார்த்துப் புலிக் குட்டியா என்று நீங்கள் கேட்டீர்களே. அது ஏன்?"

அந்த மனிதர் சிரித்தார், "புலிக்குட்டியைப் போலவே நீ இருந்ததால் இறந்தவன் வேறு மனிதனாக ஏன் இருக்க முடியாது! இதனால் என் ஐயத்தைப் போக்கிக் கொள்ளவே நான் கேட்டேன்" என்றார்.

"உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"அதில் ஒன்றும் குற்றமில்லை. நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். என் பெயர் நிலவளநம்பி. எனக்கு வலப் பக்கம் இருப்பவன் செல்லையா. இடப்பக்கம் இருப்பவன் பெயர் முத்தையா. இன்னும் நீ ஏதாவது கேட்க வேண்டுமா?"

"இன்னும் ஒரே ஒரு கேள்வி. நீங்கள் இந்த வல்லவன் மீது எத்தனை இலட்சங்களைக் கட்டியிருக்கிறீர்கள்!" என்று கேட்டான் பெரியதம்பி.

நிலவளநம்பி இதற்குச் சிறிது நேரம் பதில் சொல்ல வில்லை. பிறகு அதைச் சொல்லுவதால் குற்றமில்லைஎன்று

உணர்ந்தவரைப்போல் "என் சொத்து முழுவதையும் பந்தயம் கட்டியிருக்கிறேன்! ஆகையால் இப்போதே தெளிவுடன் சொல்லுகிறேன். இந்தக் குத்துச் சண்டையில் நீ இரண்டாவது ரவுண்டிலேயே விழுந்துவிடவேண்டும்! இதைத் தவிர வேறு எது நடந்தாலும் உன் உயிர் பறந்து விடும்!"

பெரியதம்பி அவர் சொன்னதைப் புரிந்துகொண்டவனைப்போல் தலையை ஆட்டினான். பிறகு அவன் அந்த அட்டைப் பெட்டியைத் தன்னிடம் கொடுக்கும்படியும், அதில் உள்ள குத்துச் சண்டை உறைகளைத் தான் பயன்படுத்தப் போவதாகவும் சொன்னான்.

நிலவளநம்பி குத்துச்சண்டை உறைகளை அவனிடம் கொடுத்துவிட்டு, முத்தையாவையும் செல்லையாவையும் அழைத்து அவனை அந்தப் பங்களாவிலேயே ஓர் அறையில் பாதுகாப்புடன் பூட்டி வைக்கும்படி சொன்னார்.

பெரியதம்பி இருந்த அறையில் குத்துச்சண்டை பழக மணற்பை ஒன்று கட்டிவிடப்பட்டிருந்தது. மணற்பையைக் குத்தியபடி மீண்டும், குத்துச்சண்டையைப் பழகிக் கொண்டிருந்த பெரியதம்பியின் மனம் எண்ணியது: 'பத்தாயிரம் ரூபா எனக்குப் பெரிய தொகைதான் ஆனால், நிலவளநம்பி நினைப்பதைப்போல் நடக்கப் போவதில்லை! இந்த வல்லவனை எப்படியாவது நான் நாக் அவுட் செய்ய வேண்டும்.

அச்சம் தரும் இந்த முடிவால் ஏற்படப்போகும் விளைவுகளைப்பற்றிப் பெரியதம்பி அப்போது சிந்தித்துப் பார்க்கவில்லை.

# 5

எங்கேயோ கோழிகூவும் ஓசை கேட்டது. விடியும் நேரமாகிவிட்டது என்பதை அரைத்தூக்கத்தில் இருந்த பெரிய தம்பி உணர்ந்து கொண்டு எழுந்து உட்கார்ந்தான். பக்கத்து அறையில் அலாரம் கடிகாரம் அலறும் ஓசை கேட்டது. சிறிது நேரத்தில் அதன் மணியோசை அடங்கி விட்டது.

பெரியதம்பிக்குத் தூக்கம் இப்போது அடியோடு கலைந்துவிட்டது. சன்னலைத் திறந்துவிட்டு வெளியே பார்த்தான். பொழுது பளபளவென்று விடிந்துகொண்டிருந்தது. இன்று அவன் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பம் ஏற்படப் போகிறது என்பதை அவன் உணர்ந்துகொண்டு, எப்படிப்பட்ட சிக்கல் வந்தாலும் எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் எதிர்க்க மிக முன்னேற்பாடுடன் இருந்தான். அவன் முகத்திலே அவனையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

நிலவளநம்பியின் திட்டத்தைத் தவிடுபொடியாக்க அவன் முடிவு செய்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியா, அல்லது முதன் முதலாக அவன் தனது குத்துச் சண்டையின் திறமையைக் காண்பிக்கக் கிடைத்த வாய்ப்பினால் ஏற்பட்ட மகிழ்ச்சியா?

தெரியவில்லை!

அவன் சிந்தனையுடன் நின்று கொண்டிருந்தபோது, அறையின் கதவு திறந்தது. உள்ளே எட்டிப் பார்த்த செல்லையா, "அதற்குள்விழித்துக்கொண்டாயா? வெளியே வா'' என்றான்.

"இரவெல்லாம் சரியாகத் தூங்கவில்லை'' என்றான் பெரியதம்பி.

"இன்னும் நல்லதாகிவிட்டது. குத்துச்சண்டையில் நீ வெற்றி பெறுவதாக இருந்தால் நீ தூங்கியாக வேண்டும். தூங்காததால் நீ தோற்பது மிகவும் எளிது. இதைக் கேட்டால் நிலவளநம்பி மகிழ்ச்சி கொள்வார்!" என்றான் செல்லையா.

இந்த நேரத்தில் மாடிப்படியைக் கடந்து விரைந்து இறங்கி வந்த முத்தையா, "நிலவளநம்பி மேலே காத்திருக்கிறார். உள்ளே பெரியதம்பியை அழைத்து வரும்படி சொன்னார்" என்றான்.

''குத்துச்சண்டை முடியும்வரையில் என்பெயர் பெரிய தம்பி அல்ல, புலிக்குட்டி! இதை மறந்துவிடாதே!'' என்றான் பெரியதம்பி.

மூவரும் மாடிக்குச் சென்றார்கள்.

நிலவளநம்பி, சிரித்த முகத்துடன் பெரியதம்பியை வரவேற்றார். அவனைத் தனக்குமுன் இருந்தநாற்காலியில் உட்காரும்படி சொன்னார்.

பெரியதம்பி உட்கார்ந்தான். அவனுக்கு இருபக்கங்களிலும் செல்லையாவும் முத்தையாவும் மெய்க்காப்பாளர்களைப்போல் நின்றார்கள்.

நிலவளநம்பி பேசினார்: "உன்னை நான் மீண்டும் கண்டுபேச முடியுமா என்பது ஐயம்தான். அதனால்தான் உன்னை அழைத்தேன். குத்துச்சண்டை தொடங்கும் நேரத்துக்கு மிகச் சரியாக நீ இவர்கள் இருவருடன் புறப்பட்டுக் காரில் வருவாய். குத்துச்சண்டை முடிந்ததும். அங்கிருந்து நீ புறப்பட்டுப் போக ஒரு கார் காத்திருக்கும். அந்தக் காரில் இவர்கள் உன்னை ஏற்றி அனுப்பி வைப்பார்கள். அந்தக் காரில் புறப்பட்டு, பெங்களூருக்குப்போய் சில நாட்கள் வரையில் நீ மறைந்திருந்து வாழவேண்டும்!"

"எத்தனை நாட்களுக்கு?''

"இரண்டு மூன்று மாதங்களுக்கு. இந்தக் குத்துச் சண்டையை மக்கள் மறந்துவிட்டபிறகு. நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம். என்னைத் தேடி மட்டும் வரக் கூடாது!'' என்றார் நிலவளநம்பி.

"உங்களைத் தேடிவர எனக்கு என்ன வெறியா பிடித்திருக்கிறது?' என்று மனத்திற்குள் கருவிக்கொண்டான். பெரியதம்பி. அவன் மேலுக்குச் சொன்னான்: "புரிகிறது."

''வேறு ஒன்றும் ஐயம் இல்லையே! நான் சொன்னவை அனைத்தும் உன் நினைவில் இருக்கிறது! அல்லவா?"

''மிகவும் தெளிவாக நினைவில் இருக்கிறது!''

"நீ போகலாம். உன் அறையிலே தங்கியிரு!"

"சற்றுப் பொறுங்கள்'' என்றான் பெரியதம்பி!

"என்ன?'' என்றார் நிலவளநம்பி.

"பத்தாயிரம் ரூபாயை என்னிடம் முதலிலேயே கொடுத்துவிட வேண்டும்!" என்று கண்டிப்பாகச் சொன்னான் அவன்.

''காரில் புறப்படுமுன் செல்லையா பணப்பையை உன்னிடம் தருவான்!'' என்றார் நிலவளநம்பி.

“பணத்தை இப்போதே கொடுத்து விடுங்கள்! பணத்தை இப்போது கொடுக்காவிட்டால் நான் குத்துச் சண்டை மேடையில் ஏறமாட்டேன்!” என்றான் பெரிய தம்பி.

நிலவளநம்பி சிறிது நேரம் அவனை உற்றுப்பார்த்து விட்டுச் சிரித்தார். பிறகு “செல்லையா, பணத்தை இப்போதே கொடுத்துவிடு” என்று கட்டளையிட்டார்.

ஒரு சில விநாடிகளில் பத்தாயிரம் ரூபா பெரியதம்பி யின் கைக்கு வந்தது!

## 6

குத்துச்சண்டை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

நிலவளநம்பி குத்துச்சண்டை நடக்கும் மைதானத் துக்கு முன்பே போய்விட்டார். குத்துச்சண்டை நடக்கும் இடத்தில் டிக்கட் வாங்க மக்கள் குத்துச்சண்டை போட் டுக் கொண்டிருந்தார்கள்! இலட்சக்கணக்கில் பணம் வசூ லாயிற்று!

குறிப்பிட்ட நேரத்துக்குப் புறப்பட்டான் பெரியதம்பி செல்லையாவும் முத்தையாவும் அவனைப் பாதுகாப்புடன் காரில் ஏற்றிச் சென்று, குத்துச்சண்டை மேடைக்குப் பின் பக்கமாக இருந்த ஒரு சிறிய கட்டடத்திற்குள் கடத்திச் சென்றார்கள். அங்கே பெரியதம்பிக்காக ஓர் அறை ஒதுக் கப்பட்டிருந்தது. அந்த அறைக்குள் சென்றதும், சன்னல் வழியாகப் பார்த்தான். பெரியதம்பி. மக்கள் திரள் கடலைப் போல் தெரிந்தது. கண்ணுக்கு எட்டியவரையில் மனிதத் தலைகள்தாம் தெரிந்தன!

செல்லையா அவன் பக்கத்தில் வந்து, அந்த அறையின் மற்றொரு பக்கம் இருந்த சன்னலைக் காட்டினான். பெரிய தம்பி அந்தச் சன்னல் பக்கம் பார்த்தான். பின்புறம், சாலை ஓரமாக ஒரு பழைய கார் நின்றிருந்தது. அதில் காரோட்டி ஒருவன் உட்கார்ந்திருந்தான். "அந்தக் கார் உன்னை ஏற்றிச் செல்லக் காத்திருக்கிறது! சண்டை முடிந்ததும் நீ அந்தக் காரில் புறப்பட்டுவிட வேண்டும்!" என்றான் செல்லையா!

"ஆகட்டும்'' என்றான் பெரியதம்பி.

"குத்துச்சண்டை செய்யும்போது பணத்தை எங்கே வைத்துக் கொள்ளப் போகிறாய்?"

"பணத்தைப் பற்றி நீ துன்பம் கொள்ள வேண்டாம். நான் அந்தப் பணத்தைக் கையுறையிலேயே வைத்துக் கொள்கிறேன்!" என்று சொல்லித் தன்னிடமிருந்த பத்து ஆயிரம் ரூபா நோட்டுக்களையும் கையுறையில் மடித்து வைத்துக்கொண்டான். பிறகு—

குத்துச்சண்டை போடும்போது, ஓங்கி மிகக் குத்தினால் அந்த நோட்டுக்கள் கிழிந்துவிடுமே என்று முடிவு செய்து அவைகளை ஒருவரும் பார்க்காதபோது தனது சட்டைப் பையில் அவன் மறைத்துவிட்டான். இது வேறு எவருக்கும் தெரியாது. இதனால்—

செல்லையாவும் முத்தையாவும் பணத்தைப் பெரிய தம்பி தனது குத்துச்சண்டை கையுறையிலேயே வைத்திருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தார்கள்!

பெரியதம்பி குத்துச்சண்டை மேடைக்குச் சென்ற போது மக்களிடையே ஆரவாரம் மிகுந்தது. காட்டெருமையைப் போல் பாய்வதற்கு முன்னேற்பாடுடன் நின்ற வல்லவன் துடித்துக் கொண்டு நின்றான்! முதலில் வல்லவ

னைக் கண்டதும் அவனை அடித்துத் தள்ளமுடியுமா என்று பெரியதம்பிக்கு ஐயமாகத்தான் இருந்தது! ஆனால், மக்களிடையே எழுந்த ஓசைகள் அவனுக்குப் புது உணர்ச்சியை அளித்தன!

மேடையின் ஓரத்தில் முதல் வரிசையில் சிகரெட்டைப் பிடித்தபடி எடுப்பாக உட்கார்ந்திருந்தார் நிலவளநம்பி அவரைப்போல இன்னும் பல பணக்காரர்களும் முன்வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டாவது வரிசையில் பெரியதம்பியைப் பார்த்துச் சிரித்தபடி ஓர் அழகியபெண் உட்கார்ந்திருந்தாள். அந்தப்பெண் காதுகளில் விலை உயர்ந்த வைரக் கற்களைப் பதித்த புதுமாதிரித் தோடுகளை அணிந்திருந்தாள். அந்தத் தோடுகளைப் பார்த்தால் சூரியகாந்தி மலர்களைப் போல் இருந்தது! அவள் கழுத்தில் ஒட்டினாற்போல் வைரக்கற்கள் பதித்த விலை உயர்ந்த நெக்லஸ் ஒன்று தவழ்ந்தது. அவள் பெரும் பணக்காரியாக இருக்க வேண்டும். அவள் இதில் எவ்வளவு பணம் கட்டியிருக்கிறாளோ என்று எண்ணினான் பெரியதம்பி. அந்தப் பெண் அவனைப் பார்த்து, வலக்கையைத் தூக்கி. வல்லவனை ஒரு நாக்கவுட் கொடுக்கும்படி வளையல்கள் அணிந்த தன் கரத்தினால் சாடை காட்டினாள். அதைக் கண்டதும் எங்கிருந்தோ பெரியதம்பிக்கு ஆற்றலும் ஆர்வமும் ஊக்கமும் வந்தன!

சிங்கத்தைப் போல் பாய்ந்தான் பெரியதம்பி குத்துச் சண்டை தொடங்கியது.

புலிக்குட்டிக்கு ஒருபக்கம் ஊக்கம்தரும் குரல்களும் வல்லவனுக்கு ஒருபக்கம் ஊக்கம் தரும் குரல்களும் எழும்பின!

முதல் ரவுண்டில் எதிரியின் ஆற்றலைச் சோதித்துப் பார்த்துக் கொண்டான் பெரியதம்பி. வல்லவன் பலசாலி

தான் என்றாலும் எப்படியாவது அவனை இரண்டாவது ரவுண்டில் வீழ்த்திவிட வேண்டும் என்று முடிவு கட்டினான் பெரியதம்பி. முதல் ரவுண்டில் பெரியதம்பி வாங்கிய சில குத்துக்கள், எதிரிக்கும் அவனை ஆதரித்தவர்களுக்கும் ஊக்கத்தை அளித்தன. முதல் ரவுண்டு முடிந்ததும் பார்வையைத் திருப்பினான் பெரியதம்பி. நிலவளநம்பியின் முகம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டது. ஆனால், முதலிலிருந்தே அவனுக்கு ஊக்கம் கொடுத்துக் கொண்டிருந்த பெண் சற்று ஏமாற்றத்துடன் காணப்பட்டாள். அவன் அவளைப் பார்த்ததும், அவள் மீண்டும் மலர்ந்த முகத்துடன் பகைவனை வீழ்த்தும்படி சாடை காட்டினாள்!

மணியடித்தது!

வேங்கையைப்போல் பாய்ந்தான் பெரியதம்பி!

வல்லவனுக்கும் புலிக்குட்டி என்ற பெயரோடு மேடை மீது ஏறிவிட்ட பெரியதம்பிக்கும் பெரிய சண்டை நடந்தது. இரண்டாவது ரவுண்டில் இவ்வளவு கடுமையான சண்டை நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. பெரியதம்பி முழு வேகத்துடன் பகைவனின் வலக்கண்ணுக்குப் பக்கத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டபோது, சற்றும் எதிர் பாராத ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டது!

வல்லவன் மரம் சாய்வதைப் போல் சாய்ந்தான்! ஓசைகளும் கை ஒலிகளும் மிகுந்தன! நடுவர், ஒன்று, இரண்டு மூன்று என்று எண்ணினார். வல்லவன் எழுந்திருக்கவே இல்லை. அவன் விழுந்தவன் விழுந்தவன்தான்!

புலிக்குட்டியின் மீது பணத்தைக் கட்டியவர்கள் விசில் அடித்தார்கள். பணத்தைப் பறித்தார்கள்! 'புலிக்குட்டி வாழ்க' என்று கத்தினார்கள்!

பெரியதம்பி அந்த அழகியைப் பார்த்தான். அவள் எழுந்து விரைந்து வெளியே போய்க்கொண்டிருந்தாள். அதே நேரத்தில் நிலவளநம்பியின் முகம்—

பேய் அறைந்ததைப் போலிருந்தது!

இதற்குள் குத்துச்சண்டை மேடைக்கு வந்த டாக்டர் வல்லவன் இறந்து விட்டதாகக் கூறினார்!

வல்லவன் இறந்துவிட்டான்; நிலவளநம்பி பல இலட்சங்களை இழந்துவிட்டார் என்பதை எண்ணிப்பார்த்த பெரியதம்பி, உடனே அந்த இடத்திலிருந்து தப்பி ஓட முயற்சி செய்தான்! மின்னல் விரைவில் தன் அறைக்குச் சென்று அவன் உடைகளை அள்ளிக்கொண்டு செல்லையாவும் முத்தையாவும் வருவதற்குள் பின்பக்கம் வேறு திக்கில் ஓடினான்! அவன் தனக்காகக் காத்திருந்த காரை நோக்கிப் போகவில்லை! அவன் சிறிது தொலைவு ஓடியதும் அவனுக்குப் பக்கத்தில் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரை அவன் சற்றுமுன், கூட்டத்தில் கண்ட அழகி ஓட்டி வந்தாள். அவள், காரின் கதவைத் திறந்து விரைந்து அவனை ஏறிக்கொள்ளும்படி சாடை காட்டினாள்.

செல்லையாவும் முத்தையாவும் பெரியதம்பியைத் துரத்திவந்த அதே நேரத்தில், பெரியதம்பி அந்தப் பெண்ணின் காரில் ஏறி உட்கார்ந்தான். அந்தக் காரை அவள், விமானத்தைச் செலுத்துவதைப் போல் விரைவாகச் செலுத்தினாள்!

பின்னால் மற்றொரு கார் அவர்களைத் துரத்தியது. பின்னால் வந்த காரில், செல்லையாவும் முத்தையாவும் உட்கார்ந்திருந்தார்கள்!

பெரியதம்பி, பின்னால் வந்த காரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றான்.

"துன்பம் கொள்ளாதீர்கள். அவர்களால் நம்மைப் பிடிக்க முடியாது!'' என்றாள் அந்தப் பெண் சற்று அமைதியுடன்.

கார் ஓட்டுவதில் அவள் மிகத் திறமை பெற்றிருந்தாள் அவளுடைய இரு அழகிய கைகளும் காரின் ஸ்டீயரிங்கை இப்படியும் அப்படியும் திருப்பிக் காரை வளைத்து வளைத்துச் செலுத்தியபோது மிக வேடிக்கையாக இருந்தது. அவள் கைகளில் ஒன்றில் வைரக்கல் பதித்த விலை உயர்ந்த ஒமேகா கடிகாரம் கட்டியிருந்தாள். அந்தத் தங்கச் சங்கிலியிலும் ஒரு சில உயர்ந்த கற்கள் பதிக்கப் பட்டிருந்தன.

## 7

பெரியதம்பி அடிக்கடி திரும்பிப் பின்னால் வரும் காரைப் பார்ப்பதும் அந்த அழகி கார் ஓட்டும் அழகைப் பார்ப்பதுமாக இருந்தான். இரண்டு கொடியவர்கள் நாயைச் சுடுவதைப் போல் அவனைச் சுட்டுக்கொல்லத் துரத்தி வர, ஓர் அழகியுடன் விரைவு மிகுந்த காரில் எங்கேயோ தப்பிச் செல்வது அவனுக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது!

போக்குவரத்து மிகுந்த சாலை ஒன்றில் காரைச் செலுத்தினாள் அந்த அழகி. கூட்டமும் கார்களின் போக்குவரத்தும் மிகுந்த அந்தச் சாலையில் மிக உறுதியுடன் எங்கேயாவது விபத்து நடக்கத்தான் போகிறது என்று எண்ணினான் பெரியதம்பி. அந்தப் பெண் காரை மிகவும் விரைவாக வளைந்து வளைந்து செலுத்தியபோது, பெரிய தம்பிக்கு வாய்விட்டுக் கத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் அந்தப் பெண் மற்றக் கார்களைப் பின்னுக்குத்

தள்ளிவிட்டு, ஒரு வழியாகப் பின்னால் துரத்தி வந்த காரை உதறித் தள்ளிவிட்டு எங்கேயோ வந்துவிட்டாள்!

பின்னால் திரும்பிப் பார்த்த பெரியதம்பி பெருமூச்சு விட்டான். "அந்தக் கார் மறைந்து விட்டது!" என்றான்.

"விரைவு கொள்ளாதீர்கள். மீண்டும் அவர்கள் நம் காரைக் கண்டுபிடித்துவிடுவார்கள். அதற்கு நாம் இடம் தரக்கூடாது!" என்று சொல்லிவிட்டு முன்னைவிட விரைவாகக் காரைச் செலுத்தினாள் அவள்.

பெரியதம்பி இப்போதுதான் சற்றுச் சாய்ந்து உட்கார்ந்தான். "நல்ல நேரத்தில் என்னைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி'' என்றான்.

"உங்களுக்கு நான் அல்லவா நன்றி கூறவேண்டும். இந்தக் குத்துச் சண்டையில் நீங்கள் வெற்றி பெறாவிட்டால் என்னுடைய பணம் ஐம்பதினாயிரம் போயிருக்கும். இப்போது நான் என் பணத்தை மீட்டுக்கொண்டதோடு ஐம்பதினாயிரம் ரூபா வெற்றி பெற்றிருக்கிறேன்!"

"மிக்க மகிழ்ச்சி. ஆனால் ஓர் உண்மையை நான் உன்னிடம் சொல்ல விரும்புகிறேன்!" என்றான் பெரியதம்பி.

"தயங்காமல் சொல்லுங்கள்."

"உன்னுடைய அழகிய முகத்தையும், நீ எனக்கு அளித்த ஊக்கத்தையும் அந்தக் கூட்டத்தில் நான் பார்க்காவிட்டால், இந்தக் குத்துச் சண்டையில் வெற்றி பெற்றிருப்பேனா என்பது ஐயம்தான்! எதிரி நான் எண்ணியதை விடப் பலசாலி! எப்படியோ நான் முடிவு செய்தபடி மாபெரும் வெற்றி கண்டுவிட்டேன்! ஆனால் இப்போது

என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நான் இந்தக் குத்துச்சண்டையில் திட்டப்படி தோற்றிருக்க வேண்டும். நிலவளநம்பி என்னைத் தோற்றுவிடும்படி சொல்லி அனுப்பினார். நான் வெற்றி பெற்றுவிட்டதால், நிலவள நம்பி பல இலட்சங்களை இழந்துவிட்டார். இதனால்தான் அவருடைய ஆட்கள் என்னைக் கொல்லத் துரத்தி வருகிறார்கள்."

"புரிகிறது. நிலவளநம்பியைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன்! எப்படியிருந்தாலும் அவர் உங்களைக் கொல்லாமல் விடமாட்டார். ஆகையால், சென்னையில் இருப்பதைவிட வெளியூரில் சிலநாட்கள் நீங்கள் மறைந்தி ருப்பது நல்லது! என்னுடன் பெங்களூருக்கு வாருங்கள். பெங்களூர் வரை நான் போகிறேன்.''

அந்தப் பெண் தமிழை நன்றாகப் பேசினாலும் தமிழை அவள் உச்சரித்த விதம் நடிகை சரோஜாதேவியை நினை வூட்டியது. ஆகையால் அவள் ஒரு கன்னடப்பெண்ணாகத் தான் இருக்கவேண்டும் என்று முடிவு கட்டினான் பெரிய தம்பி.

"நீங்கள் கூப்பிடுவதால்தான் உங்களுடன் பெங்களூ ருக்கு வருகிறேன். வழியில் என் ஓட்டலுக்குச் சென்று, என்னுடைய பெட்டியைக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான் பெரியதம்பி.

இதைக் கேட்டு அவள் சிரித்தாள். "நீங்கள் சொல்லு வது எப்படி இருக்கிறது தெரியுமா? எலிப்பொறியில் இருக் கும் தேங்காயை மட்டும் எடுத்துக்கொண்டு வந்துவிடுவ தாக எலி சொல்லுவதைப் போலிருக்கிறது! நீங்கள் எப்படி யும் உங்கள் ஓட்டலுக்குச் சென்று, பெட்டியையும் எடுத்துக்

கொண்டு செல்லுவீர்கள் என்று எண்ணி நிலவளநம்பி அந்த ஓட்டலுக்கு இரண்டு பேர்களை அனுப்பி இருப்பார்! அந்த எலிப்பொறிக்கு நீங்கள் போகாதீர்கள்.''

அவள் சொல்வது உண்மைதான் என்று பட்டது அவனுக்கு. அந்தப் பெண்ணிடம் அழகு மட்டும் அல்ல, அறிவும் ஆற்றலும்கூட நிரம்பியிருந்ததை அவன் உணர்ந்து கொண்டான்.

"உங்கள் பெட்டியில் என்ன இருக்கிறது?" என்றாள் அவள்.

"வெறும் உடைகள்தாம். பணம் ஒரு காசுகூட இல்லை."

"உங்களுக்குத் தேவையான உடைகளைப் பெங்களூரில் வாங்கிக் கொள்ளுங்கள். சென்னையைவிடப் பெங்களூரில் மலிவு'' என்றாள் அவள்

பெரியதம்பி இதை எதிர்த்துப் பேசவில்லை. எப்போதும் ஒருவர் தம் சொந்த ஊரைத் தூக்கிப் பேசுவது வழக்கம். மேலும் பெங்களூரைப் பெரியதம்பி இதுவரை கண்டதில்லை. நேரில் பார்த்த பிறகு பேசிக் கொள்வோம் என்று பேசாமல் இருந்துவிட்டான்.

கார் சென்னையின் எல்லையைவிட்டு விலகி ஓடிக் கொண்டிருந்தது.

பின்னால் எந்தக் காரும் துரத்தி வரவில்லை என்று உறுதிப்படுத்திக்கொண்ட பெரியதம்பி, அமைதியுடன் உட்கார்ந்தான்.

சிறிது நேரம் கழித்து "உன் பெயரென்ன?" என்று சாய்ந்து கேட்டான்.

"சாந்தி" என்றாள் அந்த அழகி.

"பெங்களூரிலிருந்து நீ தனியாகவா சென்னைக்கு வந்தாய்?" என்று கேட்டான் பெரியதம்பி.

"ஆமாம். உங்கள் குத்துச்சண்டையைப் பார்ப்பதற்கே வந்தேன். குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுவதைப் போல், குத்துச் சண்டையிலும் இந்தக் காலத்தில் பந்தயம் கட்டிக்கொள்வது மிகுதியாகிவிட்டது!" என்றாள் சாந்தி.

"பெங்களூரில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உன்னைப் பார்த்தால் பெரும் பணக்காரியைப்போல் இருக்கிறதே'' என்றான் பெரியதம்பி. அவள் சிரித்தாள். காரை விரைவாகச் செலுத்தியபடியே திரும்பிப் பார்த்து, ''நான் ஒரு சினிமா நடிகை! கன்னடப் படங்களில் நடித்து வருகிறேன்! விரைவில் தமிழ்ப்படங்களில் நடிக்கப் போகிறேன்!" என்றாள்.

"அப்படியா?'' என்றான் பெரியதம்பி.

அவள் சினிமா நடிகை என்றதும் அவள் கைகளில் மின்னியவை வைரங்கள்தாமா அல்லது போலியா என்ற ஐயம் வந்துவிட்டது அவனுக்கு! அவள் செலுத்திச் சென்ற கார் விலை உயர்ந்த கார் என்பது அவனுக்குத் தெரியும். அவள் ஐம்பதினாயிரம் ரூபாய் பந்தயம் கட்டி வெற்றி பெற்றிருக்கிறாள் என்பதையும் வைத்து, அவள் கன்னடப் படங்களில் பெரும் பணம் சேர்த்து விட்டிருக்கவேண்டும் என்று முடிவு கட்டினான்.

# 8

கார் நேராகப் பெங்களூருக்குப் போகவில்லை. வேலூரை அடைந்ததும் சாந்தி காரை நிறுத்தினாள். "எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. வெயிலும்மிகுதி யாக இருக்கிறது. வேலூரில் ஓய்வு எடுத்துக்கொண்டு, மாலையில் புறப்படுவோம். சரிதானே" என்றாள் அவள்.

"இங்கே எங்கே ஓய்வு எடுத்துக் கொள்வது?" என்றான் பெரியதம்பி.

"உங்களை ஓர் ஓட்டலின் முன் இறக்கி விடுகிறேன். அந்த ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, ஓர் அறை எடுத்துக் கொண்டு அமைதியுடன் தூங்குங்கள். நீங்கள் இங்கே தங்கி யிருப்பது நிலவளநம்பியின் ஆட்களுக்குத் தெரியாது. அவர்கள் இங்கே வரமாட்டார்கள். மாலை ஐந்து மணிக்கு நான் வந்து உங்களை அழைத்துச் செல்லுகிறேன். போதுமா?" என்றாள் சாந்தி.

"நீ எங்கே ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறாய்?" என்று கேட்டான் பெரியதம்பி.

"இந்த ஊரில் எங்கள் உறவினர்கள் வீடு இருக்கிறது. அங்கே தங்கிவிட்டு மாலை ஐந்து மணிக்கு மிகச் சரியாக வருகிறேன்" என்றாள் சாந்தி.

அரை மனத்துடன் பெரியதம்பி 'ஆகட்டும்' என்றான்.

ஓர் ஓட்டலின் முன் கார் நின்றது. பெரியதம்பி அந்த ஓட்டலுக்குள் சென்றான். உணவு உண்டுவிட்டு, தங்கி இளைப்பாற ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு படுக்கச் சென்றான். அவன் மனம் சாந்தியைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. அவள் அவனை வேலூரில் இறக்கிவிட்டு விட்டுச் செல்ல முடிவு செய்திருக்கவேண்டும் மீண்டும் அவள் வருவது ஐயம்தான் என்று முடிவு கட்டி விட்டான் அவன். அவள்மீண்டும் வருவதாக இருந்தால் அவனை விட்டுவிட்டு, ஒரு சிலமணி நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ள உறவினர்கள் வீட்டுக்குப் போவாளா?

இப்படி அவன் எண்ணியபடி தூங்கி விட்டான்.

சரியாக ஐந்து மணிக்கு ஓட்டலின் வெளியே கார் ஆரன் ஓசை கேட்டு எழுந்து சன்னல் பக்கமாகப் பார்த்தான். அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை! சாந்தி காரில் உட்கார்ந்தபடி ஆரனை அடித்துக்கொண்டிருந்தாள்.

“இதோ வந்து விட்டேன்” என்று கத்திக்கொண்டே அவன் புறப்பட்டான். ஒரு சில நிமிடங்களில் அவன் கீழே இறங்கிச் சென்றான். மீண்டும் காரில் புறப்பட்டான்

கார், பெங்களூரை நோக்கிக் காற்றைப்போல் பறந்தது.

பெங்களூருக்கு ஐம்பதாவது கல் தொலைவில் போய்க் கொண்டிருந்தபோது இருட்டிவிட்டது. அப்போதும் சாந்தி விரைவுடன் காரைச் செலுத்தினாள்.

பளிச் பளிச்சென்று விளக்குகளை அடித்தபடி எதிரே சர்சர்ரென்று கார்களும், லாரிகளும் பறந்து வந்தன. எந்த நிமிடத்திலும், சற்று ஏமாந்தாலும் விபத்து நடந்துவிடும் போல் இருந்தது. பெங்களூருக்குப் போய் சேருவோமோ

என்று பெரியதம்பிக்கு அச்சமாகத்தான் இருந்தது. வழியில் அவன் அஞ்சியபடியே நடந்தது!

கண்களைக் குருடாக்கும்படி விளக்குகளை அடித்துக் கொண்டு லாரி ஒன்று வந்தது. சாந்திக்கு வழி வாய்க்கால் தெரியவில்லை. எதிரே மோதி விடுவதைப் போல் வந்த லாரியின் மீது மோதாமல் இருக்கக் காரை இடப் பக்கம் திருப்பினாள். அடுத்த கணம்—

. கார் பக்கத்தில் இருந்த பள்ளத்தில் உருண்டு விழுந்து தீப்பிடித்துக் கொண்டது.

காரிலிருந்து தூக்கி எறியப்பட்ட பெரியதம்பி மண்டையில் அடிபட்டுச் சற்றுத் தொலைவில் போய் விழுந்தான். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது எதுவும் அவனுக்குத் தெரியாது.

## 9

பெரியதம்பி மீண்டும் கண்களை மெல்லத்திறந்தபோது எதிரே தெரிந்தனவெல்லாம் நிழல்போல் இருந்தன. அவன் காணுவது கனவா, இல்லை. உண்மையில் அவனுக்கு நினைவு வந்துவிட்டதா என்பதை அவனால் முடிவு செய்ய முடியவில்லை. அவன் தன் கண்களைப் பல தடவைகள் திறந்து மூடினான். அவன் கண் இமைகளை எவரோ அழுத்துவதைபோல் இருந்தது. எளிதில் அவனால் அவன் கண்களைத்திறந்து பார்க்க முடியவில்லை.

அவன் இப்போதுதான் ஒரு கட்டிலில் படுத்துக் கிடப்பதை உணர்ந்தான். அவன் தன் விரல்களால் படுக்கையை அழுத்திப் பார்த்தபோது, படுக்கை கல்லைப்போல்இருந்தது

அவன் கட்டில், சுவர் ஓரமாகப் போடப்பட்டிருந்தது. கட்டிலைச்சுற்றி மற்ற மூன்று பக்கங்களிலும் வெள்ளைத் துணியினால் ஆன திரை போடப்பட்டிருந்தது. டெட்டால்; லைசால் போன்ற மருந்துகளின் வாசனை அவன் மூக்கில் வந்து பட்டது. கிருமிகளைக் கொல்லும் இந்தமருந்துகளின் வாசனையும், கடினமான மெத்தையும், வெண் திரைகளும், வெள்ளை உடை அணிந்த டாக்டர்களும் நர்சுகளும், அடிக்கடி வந்து அவனைப் பார்த்து விட்டுப் போனதையும் கொண்டு அவன், 'நாம் மருத்துவ விடுதியில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டான்.

பெரியதம்பி மிகத் தெளிவாகத் தன் கண்களைத் திறந்து பார்த்தபோது, நர்ஸ் ஒருத்தி அவனைப் பார்த்து விட்டுச் சிரித்தபடி, "இப்போது எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள். அவன் பேச வாயைத் திறந்தபோது, "பேசாதீர்கள்! நீங்கள் பேசக்கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்" என்று கூறிவிட்டு டாக்டரை அழைத்துவர அவள் ஓடினாள்!

சற்று வயதான டாக்டர் ஒருவர் வந்தார். அவர் அவன் பக்கத்தில் வந்து அவனைத் தொட்டுக் குனிந்து பார்த்துவிட்டு "நல்ல வேளையாக நீ பிழைத்தாய்! நான் இறுதிவரையில் நம்பிக்கை இழக்காமல் தான் இருந்தேன்" என்றார்.

பெரியதம்பிக்குத் தன் தலையில் எவரோ ஒரு பாறையைத் தூக்கி வைத்ததைப் போல் இருந்தது. அவன் தலையில் கட்டுப் போட்டிருப்பதை அவன் அப்போதுதான் உணர்ந்தான். அவனுக்குக் கார் விபத்தைப்பற்றிய விவரங்கள் மெல்ல மெல்ல நினைவுக்கு வந்தன. அந்தக்

கார் விபத்தில் அவன் மீண்டும் பிழைத்தது அவனுக்கே வியப்பாக இருந்தது! விபத்தை நினைத்தபோது மறுபடியும் அவனுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது

டாக்டர் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். அப்போது டாக்டரின் பக்கத்தில் போலீஸ் அதிகாரி ஒருவர் வந்து நின்றார். அவர் போலீஸ் உடையில்இல்லை ஆனாலும் அவருடைய முரட்டுத் தோற்றத்திலிருந்து அவர் ஒரு போலீஸ் அதிகாரி என்பது பார்த்ததும் புரிந்து விட்டது! விபத்தைப் பற்றித்தான் அவர் கேட்கப்போகிறார் என்பதைப் புரிந்து கொண்டான் பெரியதம்பி. அவனுக்கு நடந்தது முழுவதும் அப்படியே கவனத்திற்கு வரவில்லை. மெல்ல மெல்லச் சிறிது சிறிதாகத்தான் நினைவில்வந்தது! "டாக்டர், இவனிடம் நான் சில கேள்விகளைக் கேட்க வேண்டும். கேட்கலாமா?'' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

"மிருதுயாகப் பேசக்கூடாது. ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குமேல் பேச வைக்காதீர்கள்" என்றார் டாக்டர்.

போலீஸ் அதிகாரி பெரியதம்பியைப் பார்த்து, "உன்னிடம் சில உண்மைகளைக்கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் விபத்தைப் பற்றிய முழு விவரங்களையும் எங்களால் தெரிந்துகொள்ள முடியும்" என்றார்.

பெரியதம்பி போலீஸ் அதிகாரியைப் பார்த்தான் அவர் சொன்னதை உணர்ந்து கொண்டவனைப்போல் தலையை ஆட்டினான். அப்போது அவன் தலை ஏகப்பட்ட வலியைக் கொடுத்தது!

அவன் முக மாற்றத்திலிருந்து அவனுக்குத்தலைவலிக்கிறது என்பதை உணர்ந்துகொண்ட டாக்டர், "உன் தலை பாறையைப் போலக் கடினமானது! இல்லாவிட்டால் இந்த விபத்தில் நீ பிழைத்திருக்கமாட்டாய்! உன் வலுவான உடல் எப்படியோ தாக்குதலையும் அடியையும் தாங்கிக் கொண்டது! தலையை ஆட்டாதே! உனக்கு உடல் குணமாக இன்னும் பல நாட்கள் ஆகும்!" என்றார்.

"ஆபத்து ஒன்றும் இல்லையே!" என்றான் பெரியதம்பி.

இனிமேல் ஆபத்து ஒன்றுமில்லை. ஓய்வும், சிகிச்சையும்தான் உனக்குத் தேவை" என்றார் டாக்டர்.

போலீஸ் அதிகாரி அவனிடம் கேட்டார்: "உன் பெயர் என்ன?"

"பெரியதம்பி" என்றான் அவன்.

இதைக் கேட்டதும் போலீஸ் அதிகாரியின் முகம் மாறியது. டாக்டர் முகமும் சிறிது மாறியது.

போலீஸ் அதிகாரி சொன்னார்: "பெயரையே நீ மறந்து விட்டாய்! எல்லாம் விபத்தில் ஏற்பட்ட தாக்குதல் தான்! குற்றமில்லை விபத்தைப்பற்றி உனக்கு நினைவுக்கு வருகிறதா?"

பெரியதம்பிக்குச் சற்றுக் குழப்பமாக இருந்தது. அவன் தன் பெயரைச் சொன்னவுடன், அதை நம்பாமல் அவன் தன் பெயரையே மறந்து விட்டதாகக் கூறுகிறாரே! அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என் பெயர் பெரியதம்பி! என் பெயரை நான் மறக்கவில்லை." என்று கத்திப் பேசினான்.

போலீஸ் அதிகாரி டாக்டரைப் பார்த்தார். டாக்டர் அவரிடம், "இப்போது தொல்லை கொடுக்காதீர்கள்.

மீண்டும் நாளைக்கு வேண்டுமானால் வந்து பேசிப் பாருங்கள். மூளையில் அடிபட்டிருக்குமோ என்று எனக்கு ஐயம் வருகிறது. மூளையில் அடிபட்டால் இப்படிக் குழப்பங்களும் மறதிகளும் வருவது எளிது'' என்றார்.

"என்ன சொல்லுகிறீர்கள் டாக்டர்? எனக்கு ஒன்றும் குழப்பம் இல்லை. என் பெயர் பெரியதம்பிதான். நான் ஒரு குத்துச் சண்டை வீரன்" என்றான் பெரியதம்பி.

போலீஸ் அதிகாரி அவன் சொன்னதைக் குறித்துக் கொண்டார்.

''சரி, நீ சொல்லுவது உண்மையாகவே இருக்கட்டும். உன் பெயர் பெரியதம்பி. நீ ஒரு குத்துச்சண்டை வீரன். நீ காரில் வந்து கொண்டிருந்தபோது விபத்து நடந்தது சரி, எப்படி விபத்து நடந்தது?'' என்றார்.

''சாந்தி என்னும் பெண் காரை ஓட்டி வந்தாள். நான் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வந்தேன். கார் இருளில் விரைவாக வந்து கொண்டிருந்தது. எதிரே வந்து கொண்டிருந்த லாரி ஒன்று காரின் மீது மோத வந்தது. சாந்தி, காரை ஒடித்துத் திருப்பியபோது, கார் உருண்டு உடனே பள்ளத்தில் விழுந்துவிட்டது!"

போலீஸ் அதிகாரியின் முகம் இப்போது அடியோடு மாறியது.

"காரை நீ ஓட்டி வந்தாய். காரின் முன்சீட்டில் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. காரின் பின் சீட்டில்ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். இல்லையா? நினைவு கொண்டு பார்'' என்றார் போலீஸ் அதிகாரி.

''இல்லவே இல்லை! காரைச் சாந்திதான் ஓட்டி வந்தாள். பின் சீட்டில் எவரும் இருக்கவில்லை. நான் சாந்திக்குப் பக்கத்தில் முன் சீட்டில் உட்கார்ந்திருந்தேன். வேண்டுமானால் அவளையே கேளுங்கள். எங்கே இருக்கிறாள் சாந்தி? எப்படி இருக்கிறாள் சாந்தி?'' என்று சற்றுக் கத்தினான் பெரியதம்பி.

உடனே டாக்டர் குறுக்கிட்டார்.

''இப்போது நீ எல்லாவற்றையும் மறந்துவிடு. உனக்கு ஓய்வு வேண்டும். எதைப் பற்றியும் சிந்திக்காதே!'' என்று அவர் சொல்லிவிட்டு, போலீஸ் அதிகாரியை ஒரு கையால் தள்ளிக்கொண்டு டாக்டர் வெளியே சென்றார்.

சிறிது நேரத்தில் நர்ஸ் வந்து ஊசியைப் போட்டுவிட்டு சென்றாள். அதைப் போட்டதும் அவனுக்கு மீண்டும் தூக்கம் வந்தது. மயக்கம் வந்தது.

## 10

அடுத்த நாள் காலையில் பெரியதம்பி இன்னும் சற்றுத் தெளிவுடன் இருந்தான். நர்ஸ் அவன் பக்கத்தில் வந்து பார்த்தபோது, ''இந்தத் திரைகளை எடுத்து விட்டால் என்ன? பொதுவாக வார்டில் உள்ள நோயாளிகளைச் சுற்றித்தானே இப்படித் திரைகளைப் போடுவது வழக்கம்?'' என்றான் பெரியதம்பி.

நர்ஸ் மெல்லச் சிரித்துக் கொண்டே சொன்னாள். ''உண்மைதான் உங்களுக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டிருந்தபோது இந்தத் திரைகளைப் போட்டிருந்தோம். அடிக்கடி போலீஸ் அதிகாரி உங்களைப் பார்க்க வருவதால் அவர் உங்களிடம் பேசுவது மற்ற நோயாளிகளின் காதுகளில் விழக்கூடாதே'' என்றாள்.

அப்போது உள்ளே நுழைந்த டாக்டர்; அவனைச் சோதித்துப் பார்த்துவிட்டு "இப்போது சற்றுத் தெளிவுடன் நீ இருக்கிறாய். போலீஸ் அதிகாரி இன்னும் சில நிமிஷங்களில் வருவார். அவர் கேள்விகளுக்கு நீ ஒழுங்காகப் பதில் சொல்லி, விபத்து நடந்த வழக்கை ஆராய்ந்து ஒரு முடிவு செய்ய அவருக்கு நீ உதவி செய்'' என்றார்.

"ஆகட்டும் டாக்டர்'' என்றான் பெரியதம்பி.

டாக்டரும் நர்சும் போன பிறகு, போலீஸ் அதிகாரி மீண்டும் வந்தார். அவர் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். சிறு பிள்ளையிடம் கேள்வி கேட்பதைப்போல் அவர் கேள்விகளைக் கேட்டார். "இப்போதாவது உனக்கு உன் பெயர் நினைவு வந்ததா? எந்த ஊர் நீ? சொல்லு பார்க்கலாம்?"

பெரியதம்பி சொன்னான். ''என் பெயர் பெரியதம்பி. எனக்கு ஓர் ஊரோ உறவினர்களோ இல்லை.''

அவன் தஞ்சாவூரைப் பற்றியோ, அவனை வளர்த்து விட்ட உறவினரைப் பற்றியோ அவன் மூச்சு விடவில்லை. அவன் குத்துச்சண்டை போட்டதையும் பிறகு சாந்தி என்னும் பெண்ணுடன் பெங்களூருக்குக் காரில் சென்றதைப் பற்றியும் மட்டுமே சொன்னான். தன் ஊரையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் பற்றி அவன் எதுவும் சொல்லவில்லை

"மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. அப்படியானால் நீ நாடோடியா?'' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

''ஆமாம்."

''சாந்தியுடன் காரில் போகும் நிலைமை உனக்கு எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

''சென்னையில் ஒரு குத்துச்சண்டை செய்தேன். அந்தக் குத்துச் சண்டையில் நான் தோற்றுவிட்டிருக்க வேண்டும். நான் வெற்றி பெற்றதால் என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. எப்படியாவது பிழைத்தால் போதும் என்று சாந்தி என்ற கன்னட நடிகையின் காரில் ஓடிப்போய் ஏறிக் கொண்டேன். அவள்தான் என் காரை ஓட்டி வந்தாள்!'' என்றான் பெரியதம்பி பிறகு—

மிகத் தெளிவாக, நிலவள நம்பியைப் பற்றியும், குத்துச் சண்டைவீரன் புலிக்குட்டி இறந்துவிட்டதைப்பற்றியும் புலிக்குட்டிக்குப் பதில் அவன் சண்டை போட்டதைப் பற்றியும் சொன்னான்.

"எல்லாம் வெறும் கற்பனையாக இருக்கிறது. புலிக்குட்டி குத்துச்சண்டை போட்டு, வல்லவன் என்பவனைத் தோற்கடித்த பிறகுதான் ஒரு விபத்தில் இறந்தான். அவனுக்குப் பதில் நீ குத்துச்சண்டை போட்டதாகச் சொல்லுகிறாயே! உன் மூளையில் அடிபட்டிருக்கும் என்றுநான்நம்புகிறேன். டாக்டரிடம் சொல்லி மீண்டும் உன்னைச் சோதிக்கும்படி சொல்ல வேண்டும்" என்றார் போலீஸ் அதிகாரி.

"நான் சொல்லுவதை நீங்கள் சிறிதும் நம்பமாட்டேன் என்கிறீர்களே! என் மூளை மிகச் சரியாக இருக்கிறது. நான்தான் குத்துச்சண்டையில் வல்லவனைத் தோற்கடித்தேன். சாந்திகூட ஐம்பதினாயிரம் ரூபா கட்டி வென்றாள். வேண்டுமென்றால் அவளிடமே கேளுங்கள் சாந்தி இப்போது எப்படியிருக்கிறாள்? எங்கே இருக்கிறாள்?" என்று கத்தினான் பெரியதம்பி.

போலீஸ் அதிகாரி அவனை மிக இரக்கத்தோடு பார்த்தார். பிறகு சொன்னார்: ''நேற்று உன் நிலைமை தாக்குதலைத் தாங்கும் அளவுக்கு இல்லை என்பதால் டாக்டர்

உண்மையைச் சொல்ல வேண்டாம் என்றார். சாந்தி மூன்று நாட்களுக்கு முன்பே இறந்து விட்டாள். விபத்திலே உன்னால் பிழைக்க முடிந்தது. அவளால் பிழைக்க முடியவில்லை."

இதைக் கேட்டதும் பெரியதம்பி தன் கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டான்.

## 11

பெரியதம்பி மீண்டும் கண்களைத் திறந்து பார்த்தான். போலீஸ் அதிகாரி அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார் டாக்டர் குனிந்து அவனுக்கு ஓர் ஊசியைப் போட்டார். அது சற்று வலியைக் கொடுத்தது. ''இந்த ஊசி உனக்கு மனத்தில் துணிவைக் கொடுக்கும். எதையும் இனிமேல் உன்னால் தாங்கிக் கொள்ள முடியும்'' என்றார் டாக்டர்.

'தாக்குதலையும் அச்சத்தையும் தாங்கிக்கொள்ள முடியாதவர்களுக்கு மருந்துகள் இருக்கின்றன. இன்று இந்த மருந்துகள் இல்லாவிட்டால், உலகத்தில் பாதிப்பேர்களுக்கு வெறி பிடித்துவிடும்! உலகத்தில் எல்லாருக்கும் இந்த மருந்தைக் கொடுப்பதில்லை. சில வேளைகளில் வெறும் தண்ணீரைக்கூட ஊசியின் மூலம் உடலில் செலுத்திவிட்டு அச்சத்தைப் போக்கும் மருந்து இது என்கிறார்கள். பெரும்பாலும் அச்சமும் தாக்குதலும் மனவியாதி என்பதால், நோயாளி ஏதோ மருந்து உடலுக்குள் போயிருக்கிறது என்று நம்பிக் குணமடைந்தே விடுகிறான்! இப்படி இந்த டாக்டரும் நமக்கு உடலில் தண்ணீரைச் செலுத்தியிருப்பாரோ?'' என்று எண்ணியது பெரியதம்பியின் மனம்.

போலீஸ் அதிகாரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் இன்னும் அவனிடம் பேசக் காத்திருந்தார். பெரியதம்பியும் இப்போது அவரிடம் பேச விரும்பினான். வட துருவத்துக்கும் தென் துருவத்துக்கும் எவ்வளவு தொலைவு இருக்கிறதோ, அவ்வளவு தொலைவு இருந்தது நடந்த நிகழ்ச்சிகளுக்கும் போலீஸ் அதிகாரி சொன்ன நிகழ்ச்சிகளுக்கும்! உண்மையில் என்னதான் நடந்தது என்பதனை அவன் அறிந்திட விரும்பினான்.

பெரியதம்பி சொன்னான்: "டாக்டர் நீங்கள் பக்கத்திலேயே இருங்கள். நான் போலீஸ் அதிகாரியிடம் பேச விரும்புகிறேன். நீங்கள் பக்கத்தில் இருந்தால் என்னால் சற்றுத் துணிவுடன் பேச முடியும் என்று நான் நினைக்கிறேன்" என்றான்.

''ஆகட்டும்'' என்று சொல்லி விட்டு முக்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு டாக்டர் உட்கார்ந்தார்.

கட்டிலின் மற்றொரு பக்கம் முக்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு போலீஸ் அதிகாரி உட்கார்ந்தார்.

பெரியதம்பி போலீஸ் அதிகாரியைப் பார்த்து சொன்னான்: ''என்னை நம்புங்கள். என் பெயர் பெரியதம்பி. சென்னையில் புலிக்குட்டி என்னும் பெயரில் நான் குத்துச் சண்டை போட்டேன். புலிக்குட்டி இறந்துவிட்டதால், அவனுக்குப் பதில் நான் குத்துச் சண்டை போட்டேன். பிறகு நடிகை சாந்தியுடன் காரில் பெங்களூருக்கு வந்து கொண்டிருந்தபோது பெங்களூருக்குமுன், கார் விபத்துக்கு உள்ளாகிவிட்டது! இப்போது நான் பெங்களூர் மருத்துவ விடுதியில் அடிபட்டுக் கிடக்கிறேன்! இதுவே மெய்!"

இதைக் கேட்டதும், டாக்டரும் போலீஸ் அதிகாரியும் தாக்குதல் பெற்றவர்களைப் போல் ஒருவரை ஒருவர்

பார்த்துக்கொண்டார்கள் இவன் என்ன இப்படித் தலை கீழாகச்சொல்லிவிட்டான் என்று!

''என்ன டாக்டர்? ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? நான் சொன்னதில் என்ன தவறு?'' என்று கேட்டான் பெரிய தம்பி.

டாக்டர் சொன்னார்: "உன் பெயர் பெரியதம்பி என்று சொல்லுகிறாய். அது உண்மை என்றே கொள்வோம். மற்ற விவரங்கள் பெரும்பாலும் பொய்!''

"என்ன டாக்டர்! மற்ற விவரங்கள் பொய்யா? எப்படி?" என்று கேட்டான் பெரியதம்பி. அவன் இப்போது கொதிப்படையவில்லை. சற்று அமைதியுடனேயே அவன் கேட்டான். டாக்டர் உண்மையிலேயே அவன் உடலில் ஏதோ மருந்து செலுத்தியிருக்கிறார். அந்த மருந்துதான் அவனுக்கு அமைதியைக் கொடுத்திருக்கிறது என்பதை உணர முடிந்தது அவனால்.

டாக்டர் சற்று அமைதியுடன் அழுத்தமாகப் பேசினார். "விபத்து நடந்தபோது உன்னுடன் சாந்தி என்னும் பெண் இருந்தாள் என்று நீ சொன்னாயே, அது உண்மைதான். அவள் இறந்துவிட்டாள்! விபத்து நடந்தது என்று சொன்னாயே அது பெங்களூருக்கு முன்னால் நடக்கவில்லை. மைசூருக்குப் பக்கத்தில் மைசூருக்குப் பத்துக் கல் தொலைவில்தான் நீ சென்ற கார் விபத்துக்குள்ளாகியது. பெங்களூரிலிருந்து மைசூருக்கு வரும்போதுதான் கார் விபத்து நடந்திருக்கிறது. இப்போது நீ மைசூரில் உள்ள மருத்துவவிடுதியில் இருக்கிறாய்! பெங்களூரில் இல்லை!''

பெரியதம்பி டாக்டரையும் போலீஸ் அதிகாரியையும் மாறிமாறிப் பார்த்தான். பிறகு சொன்னான்; "எல்லாமே என்னால் நம்ப முடியாதவைகளாக இருக்கின்றன! பெங்களூரை அடையும் முன்புதானே விபத்து நடந்தது.

அதனால்தான் பெங்களூரில்தானே இருக்கவேண்டும் என்று எண்ணினேன். எல்லாம் கனவில் நடப்பதைப் போலிருக்கின்றன எனக்கு! எத்தனை நாட்களாக நான் மயக்கமாக இருந்தேன்? அது பற்றிச் சொல்லுங்கள்."

போலீஸ் அதிகாரி சொன்னார்: "ஏழு நாட்களாக நீ நினைவு பெறாமல் கிடந்தாய். மாதக் கணக்கில் நீ நினைவு பெறாமல் இருந்து விடுவாயோ என்று நான் மிக அஞ்சினேன். விபத்து நடந்த தேதி ஏப்ரல் ஐந்து. இன்று தேதி பன்னிரண்டு. நேற்றுத்தான் உனக்கு நினைவு வந்தது.''

"என்ன? இப்போது ஏப்ரல் மாதமா? சற்றுப் பொறுங்கள்'' என்று சொல்லிவிட்டு "இருக்கவே முடியாது! குத்துச் சண்டை நடந்தது மார்ச் மாதம் ஐந்தாம் தேதி. அன்று இரவுதான் விபத்து நடந்தது. ஒரு மாதத்திற்கு மேல்மயக்கமாகக் கிடந்திருக்கிறேனா? இருக்கவே முடியாது! சரியாகப் பார்த்துச் சொல்லுங்கள். இப்போது நடப்பதுமார்ச்சுமாதம் தானே?'' என்றான் பெரியதம்பி.

டாக்டர் தன் கைக்கடிகாரத்தை அவனிடம் காட்டினார். அதில் மாதமும் நாளும் தெளிவாகஇருந்தன. டாக்டர் சொன்னபடி அப்போது நடந்துகொண்டிருந்தது ஏப்ரல் மாதம்தான்!

''என்னால் நம்பவே முடியவில்லை!'' என்றான் பெரிய தம்பி.

போலீஸ் அதிகாரி, உடனே தன் கையில் மடித்து வைத்திருந்த செய்திப் பத்திரிகையை அவனிடம் காட்டி, "இந்த செய்திப் பத்திரிகையை நீ படித்துப் பார்!'' என்றார்.

பெரியதம்பி செய்திப் பத்திரிகையின் முதல் பக்கத்தைப் பார்த்தான். புலிக்குட்டியைப் பற்றிய செய்தி அதில்

வந்திருந்தது புலிக்குட்டி வீரன் சென்னையில் நடந்த குத்துச் சண்டையில் வெற்றிபெற்றுவிட்டு காரில் பெங்களூருக்கு வந்துகொண்டிருந்தபோது விபத்து நடந்து இறந்துவிட்டதாக அதில் போட்டிருந்தது! காரில் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் அதில் வந்திருந்தது. அந்தப் பத்திரிகையின் தேதியைப் பார்த்தான் பெரியதம்பி. மார்ச் மாதம் ஆறாம் தேதி வெளி வந்த பத்திரிகை அது!

போலீஸ் அதிகாரி சொன்னார்: "இந்தப்பத்திரிகையில் வந்த செய்தியை நீமுன்பே படித்திருக்கிறாய். புலிக்குட்டிக்குப்பதில் நீ குத்துச்சண்டை போட்டு வல்லவனைத் தோற்கடித்திருந்தால் புலிக்குட்டிக்குக் கிடைத்த புகழும் பணமும் உனக்குக் கிடைத்திருக்கும் என்றும் நீ கற்பனை செய்துகொண்டாய். அதே நேரத்தில் புலிக்குட்டிக்கு ஏற்பட்ட விபத்தும் உனக்கு ஏற்பட்டிருக்குமோ என்று அடிக்கடி நீ கற்பனை செய்து பார்த்துக்கொண்டாய். உண்மையிலேயே உனக்கு விபத்து நடந்ததும் மூளைக்கு ஏற்பட்ட தாக்குதலினால் நீ கற்பனை செய்து கொண்டிருந்ததையும், பத்திரிகையில் நீ படித்ததையும் கொண்டு நீதான் புலிக்குட்டி என்னும் பெயருடன் வல்லவனைத் தோற்கடித்துவிட்டு, பெங்களூருக்கு வரும் வழியில் விபத்துக்குள்ளாகிவிட்டதாக நீ எண்ணிக் கொண்டுவிட்டாய்!"

போலீஸ் அதிகாரி சொன்ன இதை ஒரு சிறிதும்ஏற்றுக் கொள்ளவில்லை பெரியதம்பி. நிலவளநம்பி இறந்து கிடந்த புலிக்குட்டி, பெரியதம்பியைத் துரத்தி வந்த செல்லையா, முத்தையா வல்லவனைத் தோற்கடித்துவிட்டு அவன் தப்பி ஓடியது, சாந்தி அவனைக் காப்பாற்றிக் காரில் கொண்டுவந்தது—எல்லாம் அவனுக்கு இப்போது தெளிவாக நினைவில் வந்ததால் அவன் போலீஸ் அதிகாரியின் முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை.

டாக்டர் போலீஸ் அதிகாரி சொன்னதை உண்மையாக இருக்கும் என்று நம்பினார்.

பெரியதம்பி சிறிது நேரம் பேசவில்லை. அவன் மனம் மார்ச்சு மாதம் ஐந்தாம் தேதியிலிருந்து—ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதி வரையில் அவன் எங்கே இருந்தான் எப்படி இருந்தான் என்று கண்டுபிடிப்பதிலேயே கருத்தைச் செலுத்தியது. அவனுக்கு அந்த ஒரு மாதத்தில் நடந்தது எதுவும் தெரியாது. எவ்வளவுதான் கவனப்படுத்த பார்த்தாலும் ஒன்றும் தட்டுப்படவில்லை! எதுவும் நினைவுக்கு வரவில்லை!

பெரியதம்பி போலீஸ் அதிகாரியைப் பார்த்து "நீங்கள் சொன்னதைக் கேட்டதும் எனக்குப் பெரும் குழப்பமாக இருக்கிறது! ஒன்றும் புரியவில்லை எனக்கு! எல்லாம் குழப்பமாக இருக்கின்றன! எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்வீர்களா?" என்று கேட்டான்.

''சொல்லு, உனக்காக நான் எது வேண்டுமானாலும் செய்கிறேன்'' என்றார் போலீஸ் அதிகாரி.

பெரியதம்பி சொன்னான்: "நான் சென்னையில்இருந்த போது ஒரு சிறிய ஓட்டலில் தங்கியிருந்தேன். அந்த ஓட்டலின் பெயர் நன்றாக எனக்கு நினைவிருக்கிறது. மிட்லண்ட் ஓட்டல் என்பது அதன் பெயர். அந்த ஓட்டலின் பத்தாம் எண்ணுள்ள அறையில் என் பெட்டியை நான் வைத்திருந்தேன். என் பெட்டியின்மீது என் பெயர் எழுதியிருக்கும். நான் பெரியதம்பி என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று உங்களுக்கு வேறு என்னவேண்டும்? நீங்கள் சென்னைப் போலீஸுக்குச் செய்தி கொடுத்து அந்த அறையில் உள்ள பெட்டியைச் சோதித்துப் பார்க்கும்படி சொல்லுங்கள்'' என்றான்.

“ஆகட்டும்” என்றார் போலீஸ் அதிகாரி.

அவர் புறப்பட்டபோது, பெரியதம்பி அவரிடம் கேட்டான்: “என் பெயரைப்பற்றி நீங்கள் இவ்வளவு துன்பம் கொள்கிறீர்களே! ஏன்? என் பெயர் என்னவாக இருந்தால் உங்களுக்கு என்ன? மற்ற நிகழ்ச்சிகளை விட்டுவிடுங்கள். என் பெயரைக்கூடவா நான் சொல்லுகிறபடி நீங்கள் கேட்கக்கூடாது.”

போலீஸ் அதிகாரி சிரித்தார். அவர் சொன்னார்: “நீ விபத்துக்குள்ளான கார் யாருக்கு உடைமையானது என்பதைக் கண்டுபிடித்தேன். அந்தக் கார் முத்தழகு என்பவனுக்கு உரிமையுடையது. அதன்படி பார்த்தால் உன் பெயர் முத்தழகாக இருக்கவேண்டும். அதை நீ ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறாயே!''

இது ஒரு புதிய புதிராக இருந்தது பெரியதம்பிக்கு! “கார் எனக்கு உடைமையானதா? இல்லை, நடிகை சாந்திக்கு உடைமையானது” என்றான் அவன்.

“நீ சொல்லுவது எதுவும் சரி இல்லை!” என்றுசொல்லி விட்டு எழுந்து போய்விட்டார் போலீஸ் அதிகாரி.

பெரியதம்பி குழப்பத்துடன் தன் கண்களை மூடிக் கொண்டான். சென்னை மிட்லண்ட் ஓட்டலில் இருக்கும் அவன் பெட்டியைத்தான் அவன் இப்போது நம்பியிருந்தான்!

# 12

அன்று மாலை ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சி நடந்தது. மருத்துவ விடுதியில் பொதுவார்டில் கிடந்த அவனை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்றார்கள் இரண்டு நர்சுகள்.

''என்னை ஏன் இங்குக் கொண்டு வருகிறீர்கள்?'' என்று கேட்டான் அவன்.

நர்சுகளில் ஒருத்தி சிரித்துவிட்டுச் சொன்னாள், "பொதுவார்டில் ஏழைகள்தாம் இருப்பது வழக்கம். இலட்சக்கணக்கில் பணமுள்ள பணக்காரர்கள் இந்த மாதிரி தனி அறைகளில் தாம் இருக்கவேண்டும்."

"இலட்சக்கணக்கில் பணம் இருக்கிறதா? என்னிடமா? என்னிடம் ஒரு பைசாக்கூட இப்போது இல்லை! என்னிடம் இருந்த பத்தாயிரம் ரூபாயும் தீக்கு இரையாகிக் காருக்குள் சிக்கிக் கொண்டுவிட்டது" என்றான் பெரியதம்பி.

அப்போது அந்த அறைக்குள் ஓர் அழகிய பெண் நுழைந்தாள்! அவள் நுழையுமுன், அவள் உடலில் பூசியிருந்த விலை உயர்ந்த செண்ட்டின் வாசனை மிக இனிமையாக, மருத்துவ விடுதியின் மருந்து வாசனைகளையும் மறைத்துவிட்டு, தெவிட்டாமல் வந்தது. அந்த அழகி பெரியதம்பியைப் பார்த்துச் சிரித்தபடி, "இப்போது எப்படி இருக்கிறது? உங்களைக் கண்டுபிடிப்பதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது'' என்றாள்.

"யார் நீ?" என்று கேட்டான் பெரியதம்பி.

"இது என்ன கேள்வி? என்னைத் தெரியவில்லையா? என் பெயர்தான் வஞ்சிக்கொடி. உங்களுடைய அத்தை

கொழும்பு தமிழ்ச் சா
நூலகம்

மகள் நான்! இன்னும் உங்களுக்கு நினைவுவரவில்லையா? உங்களைச் சொல்லி என்ன பயன்? உங்களுக்குத்தான் உங்கள் பெயரே நினைவுக்கு வரவில்லையாமே! உங்கள் பெயர் முத்தழகு! பெரியதம்பி இல்லை! புரிகிறதா?" என்றாள் அந்தப் பெண்!

பெரியதம்பிக்கு வியப்பு மிக மிகுந்தது!

'அவன் ஒரு பெரும் பணக்காரன்! அவன் பெயர் முத்தழகு! அவனைத் தேடி வஞ்சிக்கொடி என்னும் பெண் வந்திருக்கிறாள்! அடுத்தபடியாக என்ன நடக்கப் போகிறதோ?' என்று துடித்தது பெரியதம்பியின் மனம்.

அவன் சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே, அந்த அழகி அவன் கட்டிலில் அவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அவனை அன்புடனும் இரக்கத்துடனும் பார்த்தாள்.

## 15

வஞ்சிக்கொடி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவன் பெயர் பெரியதம்பி அல்ல, முத்தழகு என்று சொன்ன அந்த அழகியிடம் சிறிது பேசவிரும்பினான் பெரியதம்பி. அவன் அவளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு விட்டு "உண்மையில் நீ யார்?" என்றான்.

அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்: "பார்த்தீர்களா? இன்னுமா உங்களுக்கு நினைவு வரவில்லை! நான் தான் வஞ்சிக்கொடி. என்னையே நீங்கள் மறந்துவிட்டிருந்தால் வேறு எதுதான் உங்களுக்கு உங்கள் நினைவில் வரப் போகிறது!"

அவன் அவளை ஆழமாகப் பார்த்தான். அவளை அவன் இதுவரையில் எங்கேயும் பார்த்ததே இல்லை. அவளைப் போல் ஓர் உருவத்தை அவன் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை! அவளைப் போல் தோற்றமுள்ள ஒரு பெண்ணைக் கூட அவன் பார்த்ததில்லை!

“நீ பொய் சொல்லுகிறாய். இவ்வளவு அழகாயுள்ள நீ இவ்வளவு மட்டமான பொய்யைச் சொல்லலாமா? நான் முத்தழகு அல்லன் என்பது உனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். ஆனாலும், வேண்டுமென்றே நீ பொய் சொல்லு கிறாய்! உனக்கு என்ன வேண்டும்? எதற்காக என்னிடம் வந்து இப்படி ஒரு நாடகத்தை நீ நடத்துகிறாய்?'' என்று கேட்டான் பெரியதம்பி.

அவள் அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, அந்த அறையில் வேறு யாரும் இல்லை என்பதை உறுதிப் படுத்திக்கொண்டு மெல்லப் பேசினாள்: “உங்கள் பெயர் பெரியதம்பிதான் என்றாலும், நீங்கள் உங்கள் பெயரைப் பெரியதம்பி என்றால், உங்கள் தலையில் இரண்டு கொலைக் குற்றங்கள் வந்து விழும்! இரண்டு கொலைகளைச் செய்த ஒருவரை இந்தக் காலத்துச் சட்டம் சும்மாவிடுமா? உண் மையை நீங்கள் அறிந்திருந்தால் விபத்திலிருந்து தப்பி யிருக்க வேண்டாம், சாந்தியைப்போல் இறந்திருக்கலாம் என்று முடிவு செய்வீர்கள்! முத்தழகு என்று சொல்லி உங் களைக் காப்பாற்றவே நான் வந்திருக்கிறேன். இதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்!”

பெரியதம்பிக்கு அவள் பேசியது ஒரு பெரிய புதிராக இருந்தது. அவன் இரட்டைக் கொலைகளைச் செய்தானா எப்போது? எப்படி? ஒன்றும் விளங்கவில்லை அவனுக்கு!

"என்ன நீ உளறுகிறாய்? எப்போது நான் யாரைக் கொலை செய்தேன்? குத்துச்சண்டையில் வல்லவன் என்னால் கொல்லப்பட்டது சட்டப்படி குற்றமில்லை! அவனுக்குப் பதில் நான் இறந்திருந்தாலும் சட்டப்படி அவனை எவரும் எதுவும் செய்யமுடியாது! குத்துச்சண்டையில் இது ஒரு விதி" என்றான் பெரியதம்பி.

"நீங்கள் சொல்வது மெய். என்றாலும் உங்கள் விளக்கத்தை இப்போது போலீசார் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இயற்கையாகவல்லவனை நர்க்கவுட்செய்து அவனைக் கொன்றிருந்தால்அதுகுற்றமில்லை!உங்கள்கையில் அணிந்திருந்த குத்துச் சண்டை உறைகளில் ஒன்றில் கண்ணுக்குத் தெரியாத விஷ ஊசி ஒன்று வைக்கப்பட்டிருந்தது! அந்த விஷ ஊசி கையுறைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது! ஒரு சில குத்துக்களை விட்டதும் மெல்ல மெல்ல வெளியே வந்தது அந்த ஊசி! பிறகு, அது நேரிடையாக வல்லவனின் முகத்தில் பட்டதும், ஒரு சில விநாடிகளில் இறந்துவிட்டான் வல்லவன்! நீங்கள் போட்டுவிட்டுவந்த கையுறைகளைப் போலீஸார் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். பிறகு வல்லவனின் உடலைச் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள் பிறகுதான் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்!"

வஞ்சிக்கொடியின் அழகு நல்ல பாம்பின் அழகைப் போலிருந்தது! இப்போது அவனுக்கு இந்தப் பாம்பிடமிருந்து இனித் தப்பமுடியாது என்பதை அவன் மனம் எண்ணியது. அவள் சொன்னது உண்மையாக ஏன் இருக்கக் கூடாது? சிறிதுநேரம் சிந்தித்தபடி உட்கார்ந்திருந்தான் பெரியதம்பி. படுத்துக்கிடந்த அவனால் இப்போது ஏதோ ஒரு வேகத்தில் எழுந்து உட்கார முடிந்தது. முதன் முதலில் மூன்லைட் ஒட்டலுக்கு அவன் சென்றபோது நடந்த நிகழ்ச்சி அவனுக்கு இப்போது நினைவில் வந்தது.

எவனோ ஒருவன், அவனைப் புலிக்குட்டி என்று எண்ணிக் குத்துச்சண்டைக் கையுறைகளை அவனிடம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறான். புலிக்குட்டி வல்லவனைக் கொன்று விட முடிவு செய்திருந்ததால், விஷ ஊசி கொண்ட அந்தக் கையுறைகளை அவன் பெறுவதாக இருந்திருக்கலாம். அந்தக் கையுறைகள்தாம் மூன்லைட் ஓட்டலுக்குத் தற்செயலாக வந்திருந்த பெரியதம்பியிடம் வந்து சேர்ந்தன! இதன் விளைவாக அவன் மீது கொலைக் குற்றமா? போலீஸாரிடம் புலிக்குட்டி ஏற்கனவே இறந்திருந்ததையும் நிலவளநம்பி அதை மறைத்துவிட்டு அவனைப் புலிக்குட்டியாக நடிக்கும் படி சொன்னதையும் போலீஸாரிடம் விளக்கிச் சொன்னால் என்ன?' அவன் ஒரு முடிவுக்கு வருவதற்குள் மற்றொரு கொலையைப் பற்றிய விவரத்தை அவன் தெரிந்துகொள்ள மிகவும் விரும்பினான்.

"நீ சொன்ன இது உண்மையாகவே இருக்கட்டும் மற்றொரு கொலை என்ன?" என்றான் பெரியதம்பி.

வஞ்சிக்கொடி அமைதியுடன் சொன்னாள்: "அதைச் சொன்ன பிறகு நீங்கள் என் வழிக்கு வந்துவிடுவீர்கள்! ஆகையால் அதையும் சொல்லிவிடுகிறேன்! உண்மையில் குத்துச்சண்டை செய்ய இருந்த புலிக்குட்டியை நீங்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு அவனுக்குப் பதில் நீங்கள் குத்துச்சண்டை செய்து பணத்தைப் பெற்றுக் கொண்டீர்கள்! வல்லவன் தோற்றுவிடுவான் என்று பணம் கட்டியவர்கள் உங்களுக்கு நிறையப்பணத்தைக் கொடுத்து புலிக்குட்டிக்குப் பதில் உங்களைச் சண்டை செய்யத் தூண்டி இருக்கிறார்கள். குத்துச்சண்டைக்கு முன்பே புலிக் குட்டியைக் கொன்றுவிட்ட நீங்கள் குத்துச்சண்டை முடிந்த அன்று, அவன் உடலை ஒரு காரில் வைத்து விபத்துக் குள்ளாக்கிவிட்டு நீங்கள் மறைந்துவிட்டீர்கள்! புலிக்குட்டி

விபத்தில் இறந்துவிட்டான் என்று போலீஸார் எண்ணு வார்கள் என்று தவறான கணக்கைப் போட்டுவிட்டார்கள்! கார் விபத்தில் புலிக்குட்டி இறக்கவில்லை. அதற்கு இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன்பே சுட்டுக்கொல் லப்பட்டான் என்பதைப் பிணச் சோதனையில் போலீஸார் கண்டுபிடித்துவிட்டார்கள்!"

இதைக் கேட்டதும்தான் அவனுக்கு எவ்வளவு பெரிய ஆபத்தில் நாம் சிக்கியிருக்கிறோம் என்பது புரிந்தது! அவன் உண்மையிலேயே தப்பவேண்டுமென்றால், சாந்திதான் அவனுக்கு உதவவேண்டும். ஆனால், கன்னட நடிகை சாந்தி உயிருடன் இல்லை! ஆகையால் அவன் குற்றமற்ற வன் என்பதை எப்படி எதைக்கொண்டு உறுதிப்படுத்த முடியும்?

மற்றொரு உண்மை நினைவில் வந்தது அவனுக்கு வஞ்சிக்கொடி சொன்னது அனைத்தும் உண்மை என்றால் வல்லவன் குத்துச்சண்டையில் இயற்கையாக அடிபட்டு இறக்கவில்லை. விஷ ஊசி பட்டத்தினால்தான் இறந்துவிட் டான் என்று செய்தி வந்திருக்காதா? அடுத்தபடியாக விபத் தில் இறந்த புலிக்குட்டியும் இயற்கையாக இறக்கவில்லை விபத்து நடப்பதற்கு முன் இருபத்துநான்கு மணி நேரத் துக்கு முன்பே கொல்லப்பட்டான் என்று செய்தி சொல் லாதா! போலீஸ் அதிகாரி கொடுத்த செய்திப்பத்திரிகையில் இவைகளெல்லாம் எதுவும் இல்லையே!

"வஞ்சிக்கொடி, நீ சொல்லுவது அனைத்தும் பொய் நீ சொல்லுவது உண்மையாக இருந்தால், இந்த இரண்டு கொலைகளைப் பற்றியும், பெரியதம்பியைப் போலீஸார் தேடுவது பற்றியும் செய்தி வந்திருக்கிறதா? அப்படி ஒன் றும் செய்தி வரவில்லையே!" என்றான் பெரியதம்பி.

"விரைவு கொள்ளாதீர்கள். இந்தக் காலத்துப் போலீஸார் மிகவும் திறமைசாலிகள். குற்றவாளி பிடிபடும் வரையில் உண்மைகளைக் கண்டுபிடிக்காதவர்களைப்போல் நடிக்கிறார்கள்! நீங்கள் முத்தழகு என்று சொல்லி உங்களைக் காப்பாற்ற நான் வந்திருக்கிறேன். என் உதவியை நீங்கள் ஏற்றுக்கொண்டால் சரி. இல்லாவிட்டால் உங்களுக்கு மரணதண்டனை கிடைப்பது உறுதி!" என்றாள் வஞ்சிக்கொடி!

பெரியதம்பிக்கு இது ஒரு பக்கம் துன்பமாகவும், ஒரு பக்கம் வேடிக்கையாகவும் இருந்தது!

"உண்மையில் நீ யார்? நிலவளநம்பி உன்னை அனுப்பி வைத்தாரா?" என்று கேட்டான் அவன்.

"நிலவளநம்பியை எனக்குத் தெரியவே தெரியாது!" என்றாள் வஞ்சிக்கொடி.

"நீ ஏன் எனக்கு உதவி செய்யவேண்டும்?" என்று கேட்டான் பெரியதம்பி.

"உங்கள் மீது உள்ள இரக்கத்தால் உங்களுக்கு நான் உதவி செய்ய வரவில்லை. எனக்குப் பணம் வேண்டும். பணத்தை நீங்கள் எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். உங்களை நான் காப்பாற்றிப் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கிறேன். உங்கள் உயிர் தப்பவேண்டும் என்றால், பணம் இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள்!"

"பணமா? அது ஏது என்னிடம்? குத்துச்சண்டை போடுவதற்காகப் பெற்ற பத்தாயிரம் ரூபாயும் காரில் சிக்கிக் கிடந்து எரிந்து சாம்பலாகிவிட்டது என்று எண்ணுகிறேன். என்னிடம் ஒரு பைசாக்கூட இப்போது இல்லை!"

அவள் சிரித்தாள். அவன் சிரிப்பில் கேலி கலந்திருந்தது தான் சொன்னதை அவள் நம்பவில்லை என்பதை அந்தச்

சிரிப்பு அவனுக்கு எடுத்துக்காட்டியது. அழகாக அவள் பற்களைக் காட்டிச் சிரித்தபோது பற்பசை விளம்பரம் செய்பவர்கள் பார்த்திருந்தால் அவளுக்கு ஆயிரக் கணக்கில் பணம் கொடுத்து அவளைப் படம் எடுத்திருப்பார்கள். பெரியதம்பிக்கு அவள் முகத்தில் ஒரு குத்துவிட்டு அவள் பற்களை உதிர்க்க வேண்டும்போல் இருந்தது!

வஞ்சிக்கொடி சொன்னாள்: "உங்களிடம் பணம் இல்லையா? பணம் உங்கள் கையில் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதை எங்கே நீங்கள் மறைத்து வைத்திருக்கிறீர்கள் என்பதுதான் எனக்குத் தெரியவேண்டும். இல்லாவிட்டால் போலீஸ் அதிகாரியிடம் உங்களைப்பற்றி ஒரு சொல் சொன்னால் போதும், உங்களை உடனே அவர் கைது செய்து உங்களைச் சிறையினுள் உள்ள மருத்துவ விடுதிக்கு அனுப்பி வைத்துவிடுவார்? நீங்கள் முத்தழகு அல்லன் பெரியதம்பிதான் என்பதை நான் சொன்னால் போதும்!''

அவன் சற்று வியப்புடன் அவளைப் பார்த்தான். "என் பெயர் பெரியதம்பி என்று பலதடவைகள் சொல்லியும் போலீஸ் அதிகாரி நம்பவில்லை! இப்போது நீ சொன்னால் மட்டும் அவர் அதை நம்பிவிடுவாரா? அப்படிக் கைது செய்வதென்றால் நான்தான் பெரியதம்பி என்று சொன்னதும் அவர் என்னைக் கைது செய்திருக்க வேண்டாமா?" என்றான்.

"இங்கே நீங்கள் ஒரு தவறான கணக்கைப் போடுகிறீர்கள். நீங்கள்தான் பெரியதம்பி என்றாலும் சான்றுகள் அவ்வளவு இல்லை. விபத்துக்குள்ளான கார் முத்தழகின் கார், அடிபட்டுக் கிடக்கும் நீங்கள் முத்தழகு என்று அவர் எண்ணியிருக்கிறார்! உங்களுக்கு மூளையில் அடிபட்டதால் பெரியதம்பி என்று நீங்கள் உளறுவதாக எண்ணிக்கொண்

டிருக்கிறார். நீங்கள் பெரியதம்பிதான் என்பதற்குச் சான்று கிடைத்தால் பிறகு அவர் ஒரு வினாடிகூடத் தாமதிக்கமாட் டார்!" என்றாள் வஞ்சிக்கொடி.

அப்போதுதான் அவனுக்கு போலீஸ் அதிகாரியிடம் அவன் பெரியதம்பி என்பதை உறுதிப்படுத்த சென்னை மிட்லண்ட் ஓட்டலில் அவனது பெட்டியை வைத்துவிட்டு வந்திருப்பதைப் பற்றிச் சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அவர் இப்போது உண்மையைக் கண்டுபிடித்து விட்டிருப்பாரா?

இந்தக் கேள்வி அவனுக்கு எழுவதற்கும் அவன் இருந்த அந்த அறைக்குள் போலீஸ் அதிகாரி நுழைவதற் கும் மிகச் சரியாக இருந்தது!

ரேடியோவில் சென்னைப் போலீஸாருடன் தொடர்பு கொண்டு மிட்லண்ட் ஓட்டலில் பத்தாம் எண்ணுள்ள அறையைச் சோதனை போடச் சொல்லி, விடையுடன் வந்திருக்கும் அவர் இப்போது என்ன சொல்லப் போகிறார்?

பெரியதம்பின் உடல் மெல்ல நடுங்கியது!

போலீஸ் அதிகாரி சிறிது நேரம் அவனையும் வஞ்சிக் கொடியையும் மாறிமாறிப் பார்த்துவிட்டுச் சொன்னார். "நல்ல வேளையாக வஞ்சிக்கொடி வந்து, அடிபட்டுக்கிடக் கும் நீ முத்தழகு என்றாள். விபத்து நடந்த கார் முத்தழகின் கார் என்பதாலும், நீ முத்தழகுதான் என்று வஞ்சிக்கொடி சொன்னதாலும் எனக்கு வழக்கில் சற்றுப் பிடி கிடைத்தது. உனக்கு மூளை பாதிக்கப்பட்டிருப்பதால் உன் பெயர் பெரியதம்பி என்று நீ சொல்லுகிறாய் சென்னையில் உள்ள மிட்லண்ட் ஓட்டலில் பத்தாம் எண்ணுள்ள அறையைச் சோதித்துப் பார்த்த சென்னைப் போலீஸார், அங்கே

ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லை? “பெரியதம்பி என்பவன் வந்து தங்கியது உண்மைதான், ஆனால் அவன் வந்த சில நாட்களிலேயே காலிசெய்துகொண்டு போய்விட்டான், என்று சென்னைப் போலீஸார் கூறினார்கள்! இனிமேலா வது உன் பெயர் முத்தழகு என்பதை நீ ஒப்புக்கொள்.”

பெரியதம்பி பேசவில்லை. அவனுக்கு சென்னையில் இருந்த அவன் பெட்டியைக் கிளப்பிச் சென்றது யார் என்று சிந்தனை ஓடியது!

## 14

பெரியதம்பி, தன் பெயர் முத்தழகுதான் என்று ஒப்புக் கொள்ளலாமா வேண்டாமா என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான். அப்போது இருந்த சூழ்நிலையில், அவன் விரைந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருந்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். போலீஸ் அதிகாரியிடம் அவன் சொன்னான்: “வஞ்சிக்கொடியைக் கண்டதும் என் நினைவு கள் தடுமாறத் தொடங்கிவிட்டன! என் பெயர் முத்தழகு தான் என்று எனக்கு இப்போது தோன்றுகிறது!''

போலீஸ் அதிகாரி மெல்லச் சிரித்தார். “நல்ல வேளை யாக வஞ்சிக்கொடி வந்து சேர்ந்தாள்! இவள் வராவிட் டால் இன்னும்கூட நீ பெரியதம்பி என்பதுதான் உன் பெயர். சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையில்தான் விபத்து நடந்தது. சாந்திதான் காரை ஓட்டிச் சென்றாள் என்றெல்லாம் ஒரே பிடிவாதமாக நீ பேசியிருப்பாய்!'' என்று சொன்னார் அவர்.

பெரியதம்பி பேசவில்லை.

போலீஸ் அதிகாரி சொன்னார்: “நீண்ட நேரம் உனக்குத் தொல்லை கொடுத்து உன்னை மீண்டும் குழப்ப

நான் விரும்பவில்லை! டாக்டரிடம் பேசிவிட்டு நான் போகிறேன். டாக்டர் உன்னை விரைவில் குணப்படுத்திய தும், மீண்டும் நான் உன்னுடன் பேச வருகிறேன்.''

இப்படி அவர் சொல்லிவிட்டு வஞ்சிக்கொடியையும் பெரியதம்பியையும் இரண்டு மூன்று தடவைகள் மாறி மாறிப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்.

அவர் போனதும் வஞ்சிக்கொடி பெருமூச்சு ஒன்றை விட்டாள். அவள் பெரியதம்பியிடம் சொன்னாள்: "இந்த மனிதர் மிகக் கொடியவர். அவர் உங்களை அப்படியே இப்போது நம்பிவிட்டதாக எண்ணாதீர்கள். உங்கள் பெயர் முத்தழகு என்று நான் வந்து சொல்லாவிட்டால் இப்போது உங்களைப் பெரியதம்பி என்று முடிவுசெய்து உடனேகைது செய்து சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுவார். கைதிகளுக்குச் சிறையில் தனி மருத்துவ விடுதி இருக்கிறது தெரியுமா?"

வஞ்சிக்கொடி அவனை அச்சுறுத்துவதைப் போலிருந் தது அவள் இப்போது பேசியது! இது அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவன் அந்த அழகியை உற்றுப் பார்த்து விட்டுக் கேட்டான்: ''அடுத்தபடியாக என்ன?''

"அடுத்த படியாக என்னென்பதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். உங்கள் பெயர் முத்தழகு அல்ல, நான் தவறாகச் சொல்லிவிட்டேன் என்று போலீஸ் அதிகாரியி டம் சொன்னால் போதும். அடுத்த விநாடி உங்கள் கை களில் விலங்கு மாட்டப்படும்! கொலை செய்தவர்கள் அடிபட்டு மருத்துவ விடுதியில் கிடந்தாலும் இந்த ஊர் போலீஸார் விலங்கு போட்டுக் கட்டிலுடன் இணைத்து விடுவார்கள். என்னிடம் உண்மையைச் சொல்லிவிட்டு இந்த மருத்துவ விடுதியிலிருந்து நீங்கள் தப்பிப் போக லாம். இல்லாவிட்டால் நாளைக் காலையில் நான் வந்து

உங்கள் பெயர் முத்தழகு இல்லை என்று உறுதிப்படுத்தி விடுவேன்'' என்று சொன்னாள் வஞ்சிக்கொடி.

பெரியதம்பி சொன்னான் "என் மூளை கேடுற்றிருப்பதாக டாக்டரும் போலீஸ் அதிகாரியும் எண்ணுகிறார்கள். உண்மையிலேயே இனி என் மூளை கேடுற்றால் வியப்படைவதற்கில்லை! எனக்குத் தெரியாத ஓர் உண்மையை உன்னிடம் எப்படி நான் சொல்லமுடியும்?"

வஞ்சிக்கொடி சினத்துடன் எழுந்து கொண்டாள். "நீண்ட நேரம் உங்களிடம் உட்கார்ந்து என் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. நாளைக் காலையில் நான் வரும்போது, பணத்தை நீங்கள் எங்கே மறைத்து வைத்திருக்கிறீர்கள் என்ற உண்மையை என்னிடம் நீங்கள் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உங்களைப் பற்றிய உண்மையை நான் உறுதிப்படுத்திவிடுவேன். நான் நினைத்தால் உங்களை இந்த மருத்துவவிடுதியிலிருந்து என்னுடன் அழைத்துச் செல்லமுடியும். போலீஸ் அதிகாரி உங்களைக் கவனிக்க இப்போது ஒரு கான்ஸ்டபிளைக் காவலுக்குப் போட்டிருக்கிறார்."

அவள் சொன்ன இந்தப் புதிய செய்தி அவன் அச்சத்தை மிகுதியாக்கியது! அவன் அவளிடம் மீண்டும் ஏதோ கேள்விகள் கேட்க எண்ணினான். அதற்குள் அவள் வெளியே போய்விட்டாள்.

வஞ்சிக்கொடி வெளியே போனபோது, கதவைச் சற்றுப்பாக்கத் திறந்துவிட்டுச்சென்றாள் கதவு தானாகவே மூடிக்கொண்டது. கதவு திறந்து மூடியபோது அறையின் வெளியே—

ஒரு மனிதன் நின்றிருப்பது தெரிந்தது! அவன் உயரத்தையும் தோற்றத்தையும் பார்த்தபோது அவன் எளிய

உடையில் வந்திருக்கும் கான்ஸ்டபிளாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான் அவன்! அப்படியானால் வஞ்சிக்கொடி சொன்னது மெய். போலீஸ் அதிகாரிக்கு அவன்மீது ஐயம் வந்துவிட்டது. அவனைக் கொலையாளி என்று எண்ணித்தான் பாதுகாப்புக்காக ஒருவனை அங்கே காவலுக்குப் போட்டுவிட்டார். மறுநாள் காலை விடிந்ததும் அவன் வஞ்சிக்கொடியிடம் பணம் இருக்கும் இடத்தைச் சொல்லியாகவேண்டும். உண்மையில் பணம் இருக்குமிடத்தைப் பற்றியோ, பணத்தைப் பற்றியோ எதுவும் அவனுக்குத் தெரியாது. ஆகையால் அவன் போலீஸ் அதிகாரியையும், வஞ்சிக்கொடியையும் ஏமாற்ற முடிவு செய்தான்!

## 15

அடிக்கடி எழுந்து உட்காருவதும், அவனைப் போட்டிருந்த அறையில் உலாவுவதுமாக இருந்தான் பெரிய தம்பி. அவனால் நடமாட முடிந்தது எப்படியாவது தப்பிப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் துணிவைக் கொடுத்துக் கொண்டே இருந்தது. அவன் அடிக்கடி எழுந்திருப்பதும் உட்காருவதுமாக இருந்ததைக் கண்ட நர்ஸ் ஒருதடவை சொன்னாள். “நீங்கள் இதற்குள் இப்படி அடிக்கடி எழுந்திருப்பதை டாக்டர் விரும்ப மாட்டார். டாக்டர் பார்த்தால் எங்களைத்தான் கண்டிப்பார்!”

பெரியதம்பி சிரித்தபடி சொன்னான்: “இத்தனை நாட்கள் படுத்துக்கிடந்த எனக்கு எப்படியோ இருக்கிறது. அதனால்தான் நான் எழுந்து நடந்து பார்த்தேன்!”

“டாக்டர் வரும்போது எழுந்து நடக்காதீர்கள்'' என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள்.

அவன் போனதும், பெரியதம்பி மெல்ல எழுந்து சென்று கதவின் இடுக்கின் வழியாகப் பார்த்தான். அவன் இருந்த அறைக்குக் காவலாக நின்றிருந்த மனிதன், சுவர் ஓரமாக எதிர்ப்பக்கம் நின்றுகொண்டு, ஏதோ சிந்தனை யுள் ஆழ்ந்திருந்தான். அவனைப் பார்த்தான் பெரியதம்பி.

அவன் இருந்த அறைக்குள் சுவரில் பதிக்கப்பட்ட நிலப்பேழை ஒன்று இருந்தது. அதன் சாவி பூட்டிலேயே தொங்கிக் கொண்டிருந்தது. பெரியதம்பி நிலப்பேழை யைத் திறந்து பார்த்தான். அதில் அவனுடைய உடைகள் சலவை செய்யப்பட்டு இருந்தன. ஒரு கால் சட்டையும் ஒரு சட்டையுமே இருந்தன. பக்கத்தில் ஒரு சோடி ஷூக் கள் கிடந்தன. காலுறைகள் இரண்டும் பக்கத்தில் இருந் தன. அவன் இப்போது அணிந்திருந்த உடை மருத்துவ விடுதியில் தரப்படும் வெள்ளை உடை. அவன் விபத்துக்குள் ளானபோது அணிந்திருந்த உடையை நர்ஸ் சலவைக்குப் போட்டுக் கொண்டுவந்து வைத்திருந்தாள். அவன் அந்த நிலப்பேழையை மூடிவிட்டுக் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டான்.

இருள் வந்தது. மருத்துவவிடுதியில் விளக்குகள் எரிந் தன. வெளியே நின்றிருந்த மனிதன் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை. அவனுக்குப் பதில் வேறு ஒரு மனிதன் வந்தான். இவன் வந்ததும் பகலில் இருந்த அந்த மனிதன் போய்விட்டான். இரவுப் பாதுகாப்புக்கு மற்றொருமனிதன் வந்துவிட்டான்.

அவனை வந்து பார்க்கவேண்டிய பெரிய டாக்டர்களும் குட்டி டாக்டர்களும் அவனைப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்கள். நர்ஸ் வந்து அவனுக்கு ஒரு குவளையில் பால் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போய்விட்டாள். மீண்டும் அவளோ, டாக்டரோ வரமாட்டார்கள். அவன்

கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த பொத்தானை அமுக்கி னால்தான் நர்ஸ் வருவாள். ஆகையால் அவன் தன் திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கினான்.

அவன் தனது உடைகளைஎடுத்துக்கொண்டு மருத்துவ விடுதியின் உடைகளைக் கழற்றி வைத்தான். ஷூக்களை அணிந்துகொண்டான். ஷூக்களில் ஒன்று சற்று இறுக்க மாக இருந்தது. அதைச் சரியாகப் போடவில்லை என்று எண்ணிக்கொண்டான். ரப்பர் ஷூக்கள் என்பதால் அவன் நடந்தபோது ஓசை எழும்பவில்லை. அவன் எழுந்து நடந்த போது ஓசை எழும்பவில்லை. அவன் எழுந்து நடந்து விளக்கை அணைத்தான். அந்த அறையில் மற்றொரு விளக்கு மங்கிய வெளிச்சத்துடன் நீலநிறமாக எரிந்து கொண்டிருந்தது. தூங்கும்போது இரவு முழுவதும் அது எரிவது வழக்கம். அதை அவன் அணைக்கவில்லை. பெரிய விளக்கின் பல்பைக் கழற்றிவிட்டான். அந்த அறையில் இங்கும் அங்கும் தேடி ஒரு மெல்லிய கம்பியை எடுத்தான். சன்னலுக்கு வலைபோல் போடப்பட்டிருந்த கம்பியிலிருந்து ஒரு துண்டுக்கம்பியை அறுத்து எடுத்தான். அதைப் பல்பின் நுனியில் சுற்றிவிட்டு, கட்டிலின் மீது நின்று கொண்டு, மீண்டும் பல்பை விளக்கின் ஹோல்டரில் பொருத்தினான். சுவிட்சைப் போட்டான். மறுவிநாடி—

புஸ்ஸென்று ஓர் ஓசை வந்தது. மருத்துவ விடுதி முழுவதும் விளக்குகள் அணைந்துவிட்டன.

பெரியதம்பி வெளியே ஓடினான்! இருளில் அவன் ஏற்கெனவே பார்த்து வைத்திருந்த வழியாக ஓடி, தோட்டத்தின் பக்கம் விரைந்து, ஒளிந்து ஒளிந்து மருத்துவ விடுதியின் புறக்கடைப் பக்கம் ஓடினான்! ஓடினான்!

அவனைப் பார்த்துக்கொள்ள மருத்துவ விடுதியில் இருந்த கான்ஸ்டபிள், அவன் வெளியே போனதை உணராமல் விளக்கு வராதா என்று எண்ணியபடி உட்கார்ந்திருந்தான்.

பெரியதம்பிக்கு உடல் அச்சத்தால் வேர்த்தது தலை வெடித்துவிடும் போல் இருந்தது. உடல் சோர்ந்தது. எங்கே பிடிபட்டு விடுவோமோ என்ற அச்சத்துடன் அவன் ஓடிக்கொண்டே இருந்தான். நீண்ட தொலைவு ஓடி வந்ததும் இனிமேல் அவனை எவரும் பிடிக்கமாட்டார்கள் என்று உணர்ந்துகொண்டு சற்று மெல்ல நடக்கத் தொடங்கினான்.

தொலைவிலே ஒரு பெரிய தோப்புத்தெரிந்தது. அந்தத் தோப்பின் நடுவில் ஒரு வீட்டில் விளக்கு எரிந்தது. அந்த வீட்டிற்குச் சென்று, இரவுப் பொழுதைக் கழிக்க அடைக்கலம் கேட்கலாம் என்று அவன் முடிவு செய்தான்.

தனி வீடு அது. தோட்டத்துக்குக் காவலாக எவரோ ஒரு சிறிய வீட்டைக் கட்டிக் கொண்டிருப்பதைப்போல் இருந்தது. அந்த வீட்டின் கதவைப் போய்த் தட்டினான் பெரியதம்பி.

பல தடவைகள் கதவைத் தட்டியதும், ஒரு வயதான கிழவி வந்து கதவைத் திறந்தாள்: அவள் கையில் ஒரு மின்பொறி விளக்கு இருந்தது. அதை அடித்து அவன் முகத்தைப் பார்த்த அந்தக் கிழவி, சிறிது அச்சத்துடன் பார்த்தாள். அவன் தலையில் கட்டப்பட்டிருந்த பெரிய கட்டைக் கண்டதும், "யாரப்பா நீ? தலையில் என்ன இவ்வளவு பெரிய கட்டு!'' என்றாள்.

அவன் கிழவியின் கையிலிருந்த மின்பொறி விளக்கை வாங்கி அணைத்துவிட்டு உள்ளே சென்றான்.

"யார் நீ?" என்று அதட்டினாள் அந்தக் கிழவி.

"கூச்சல் போடாதீர்கள். இன்று இரவு மட்டும் இங்கு தங்கிவிட்டு நான் போய்விடுகிறேன். மருத்துவ விடுதியிலிருந்து நான் தப்பி வந்துவிட்டேன். டாக்டர்கள் என் மூளை அடிபட்டிருப்பதாகக் கூறி நாளை ஆப்ரேஷன் செய்யப் போவதாக இருந்தது! ஆப்ரேஷன் நடந்தால், நான் பிழைப்பது அரிது!" என்றான் பெரியதம்பி.

கிழவி அவனை ஏற இறங்க ஒரு தடவை பார்த்தாள்: அவள்மீது அவனுக்கு இப்போது நம்பிக்கை பிறந்தது!

''இந்தக் காலத்து டாக்டர்களுக்கு என்ன தெரியும்? எதற்கு எடுத்தாலும் ஆப்ரேஷன் செய்கிறார்கள்! இன்று இரவு நீ இங்கேயே தங்கியிரு. நான் மட்டும்தான் இங்கு இருக்கிறேன்'' என்றாள் அவள்.

"நன்றி'' என்றான் பெரியதம்பி.

கிழவி அவனைத் தூங்கச் செய்துவிட்டு போலீஸுக்குப் போன் செய்து விடுவாளோ என்று அஞ்சினான் அவன். ஆகையால், அவன் நீண்ட நேரம் அவளிடம் பேச்சுக் கொடுத்தபடி இருந்தான். அவன் ஒரு கார் விபத்தில் சிக்கி அடிபட்டதாகவும், அதனால் அவன் மூளை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நம்பிய டாக்டர்கள் ஆப்ரேஷன் செய்ய முடிவு செய்ததாகவும். அந்த ஆப்ரேஷன் மிகவும் ஆபத்தானது என்றும் சொன்னான். தனக்கு உற்றார் உறவினர்கள் எவரும் இல்லை என்றும், அந்தக் கிழவிதான் அவனை காப்பாற்ற வேண்டும் என்றும் அவன் சொன்னான்.

கிழவிக்கு அவன்மீது இரக்கம் ஏற்பட்டுவிட்டது. அவனைத் தூங்கும்படி சொல்லிவிட்டு அவள் படுக்கப் போய் விட்டாள்

ஷூக்களைக் கழற்றிய பெரியதம்பி இறுக்கமாக இருந்த ஷூவை விளக்கின் வெளிச்சத்தில் சோதித்துப் பார்த்தான். அந்த ஷூவின் உள்ளே ஏதோ அடைத்துக் கொண்டிருந்தது. அவன் விரல்களைவிட்டு, உள்ளே அடைத்திருந்த அந்தப் பொருளை வெளியே எடுத்தான்.

காற்றுப் புகாத பிளாஸ்டிக் கவர் ஒன்று அவன் கையில் இப்போது இருந்தது. அதை அவன் உடைத்துப் பார்த்தான். உள்ளேயிருந்த காகிதம் ஒன்று எட்டாக மடிக்கப் பட்டிருந்தது. என்ன அது என்று புரியாமல் அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் ஏதோ ஓர் இடத்துக்குப் போகும் வழி பென்ஸிலால் வரையப்பட்டிருந்தது. அந்த இடம் என்ன என்பதும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

## 16

ஷூவிலிருந்து எடுக்கப்பட்ட படத்தைக் கண்டதும் உடனே அந்த இடத்துக்குப் போய், படத்தில் குறிப்பிட்டிருப்பது என்ன என்பதைக் கண்டுபிடிக்கத் துடித்தான் பெரியதம்பி.

அவன் அந்த ஷூக்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவை அவனுடைய ஷூக்கள்தாம். ஷூக்களில் ஒன்றில் அந்தப் படத்தை எப்போது அவன் மறைத்து வைத்தான், எதற்காக வைத்தான் என்று அவனுக்கு நினைவில் வரவே இல்லை. எல்லாவற்றிற்கும் விடை அந்தப் படத்தில் அடங்கியிருப்பதைப்போல் அவன் மனத்தில் பட்டது. ஆகையால் எல்லா உண்மைகளையும் அறிய அந்தப் படத்தையே நம்பியிருந்தான். வழியில் எங்கேயாவது அந்தப் படம் காணாமல் போய்விட்டாலோ, தற்செயலாகத் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிட்டாலோ அடையாளம் தெரியாமல் கிழிந்து போனாலோ என்ன செய்வது என்று விழிப்புடன் அந்தப் படத்தை அப்படியே மனத்தில் படம் பிடித்துக் கொண்டான். அந்தப் படத்தில்

உள்ளவைகளைப் பல தடவைகள் தரையில் விரல்களால், கற்பனைக் கோடுகளால் வரைந்து பார்த்தான் மீண்டும் அந்தப் படத்தைப் பார்க்காமல், வேறொரு காகிதத்தில் அப்படியே வரைய முடியும் என்ற நம்பிக்கை வந்ததும், அந்தப் படத்தை மடித்து மீண்டும் ஷூவில் பழையபடியே ஒளித்து வைத்தான்.

பெரியதம்பிக்கு இப்போது ஓரளவுக்கு அமைதியும் நம்பிக்கையும் பிறந்தது ஆகையால் அவன் அமைதியுடன் தூங்கினான். விடிவதற்கு முன்பே, கிழவி வந்து அவன் தங்கியிருந்த அந்த அறையின் கதவைத் தட்டுவதற்கு முன்பே தப்பிப் போக எண்ணி, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து கொள்ள வேண்டும் என்று முடிவுகொண்டு அவன் தூங்கினான்.

விடியற்காலை நான்கு மணிக்கு அவன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். நான்கு மணிக்கு எழுந்து கொள்ள வேண்டுமே என்ற நினைப்புத்தான் அவனைத் தட்டி எழுப்பியது. கையில் கடிகாரமே கட்டாத காமராஜ், இந்தியா முழுவதும் சுற்றிக் கொண்டிருப்பார். வேலை மிகுதியாக இருக்கும்போது இரண்டு மூன்று நாட்கள்கூடத் தூங்காமல் இருப்பாராம். பிறகு மிகுந்த களைப்பு அடைந்ததும், ஒரு மணி நேரம் தூங்கிவிட்டு வருவதாக மற்றவர்களிடம் சொல்லிவிட்டுத் தூங்கப் போய்விடுவாராம். ஒரு மணி நேரம் என்றால், மிகச் சரியாக ஒரு மணி நேரம் பொறுத்து அவரே விழித்துக்கொண்டு, எழுந்து விடுவாராம்! ஒரு நிமிஷம்கூட இப்படி அப்படிப் போகாதாம்! பெரியதம்பிக்கு காமராஜரின் நினைவு வந்தது. அவன் தன்னைக் காமராஜருடன் ஒப்பிட்டுக் கொண்டு சிரித்தான்.

அவன் எழுந்து உட்கார்ந்துகொண்டு உற்றுக் கவனித்தான். வெளியே தொலைவில் ஒரு சில லாரிகள் ஓடும் ஓசை கேட்டது. அவன் ஷூக்களை அணிந்துகொண்டு மெல்ல வெளியே வந்தான். கிழவி இன்னும் விழித்துக் கொள்ள வில்லை. அவள் பெரியதம்பி திருடன் அல்லன், சொல்லிக் கொள்ளாமல் அவன் போய்விடமாட்டான். அப்படியே போனாலும் எதையும் தூக்கிச் சென்று விடமாட்டான் என்ற நம்பிக்கையுடன் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பெரியதம்பி மெல்ல வெளியே வந்தான். கதவைத் திறந்து கொண்டு ஓசையின்றி நழுவினான். தோப்பைக் கடந்து சாலையை நெருங்கினான் அவன்.

சாலையில் அந்த நேரத்தில் லாரிகளைத் தவிர வேறு வண்டிகளின் நடமாட்டம் இல்லை. அவன் சாலையின் ஓர் ஓரமாக நின்று, தொலைவில் வந்த லாரியைப் பார்த்தான். பனிச்சென்று இரு விளக்குகளும் வெளிச்சத்தை அள்ளி வீசின. ஆனாலும் ஒரு கையால் முகத்தை மறைத்துக் கொண்டு மற்றொரு கையால் லாரியை நிறுத்தும்படி பெரியதம்பி சாடை காட்டினான்.

லாரி அவனைக் கடந்து சென்று பிறகு நின்றது. பெரிய தம்பி ஓடினான்.

''எங்கே போக வேண்டும்?'' என்றான் லாரி டிரைவர்.

''லாரி எங்கே போகிறதோ, அங்கே'' என்றான் பெரியதம்பி.

"பெங்களூருக்குப் போகிறது" என்றான் லாரி டிரைவர்

"மிகவும் நல்லதாகப் போய்விட்டது!'' என்று சொல்லி ஏறிக்கொண்டான் பெரியதம்பி.

## 17

லாரி விரைந்து பறந்தது. பெங்களூரில் லாரி கடைத் தெரு ஒன்றில் சற்று நின்றது. மக்கள் கூட்டம் மிகுந்த அந்தக் கடைத்தெருவில் பெரியதம்பி இறங்கியதும், எந்தப் போலீஸ்கான்ஸ்டபிளாவது அவனைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்துகொண்டு கைது செய்துவிடுவாரோ என்று அஞ்சியபடி கூட்டத்தில் நடந்தான். போலீஸ் படையைச் சேர்ந்த எவரையாவது பார்க்கும்போதெல்லாம் தலையைக் கூட்டத்தில் மறைத்துக் கொண்டு வேறு பக்கமாக நழுவினான்.

தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வருமுன் பெரியதம்பி, தன் உழைப்பில் பணம் திரட்டிப் பெரும் பணக்காரனாக வேண்டும் என்று எண்ணினான். இப்போது அவன் பணக்காரனாக விரும்பவில்லை. எப்படியாவதுதான் குற்றமற்றவன், தனக்கும் புலிக்குட்டியின் கொலைக்கும் தொடர்பு இல்லை என்பதை உறுதிப்படுத்தி விட்டுத் தப்பினால் போதும் என்றாகிவிட்டது அவனுக்கு! அவன் சிக்கியிருந்த இந்த வழக்குக்கு விடை பெங்களூரில்தான் இருப்பதாக அவன் மனம் எண்ணியது.

பெரியதம்பி, பெங்களூர் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றான். அவனிடம் இருந்த படத்தில் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்குத் திக்கில் செல்லும் தெருவில் நடந்தான் அரைக் கல் தொலைவு நடந்ததும், இடப்பக்கம் திரும்பி மீண்டும் அரைக் கல் தொலைவு நடந்தான். அந்தப் பக்கம் தெரு ஏற்றமும் இறக்கமுமாக இருந்தது. பெங்களூரில் பொதுவாகவே தெருக்கள் ஏற்றமும் இறக்கமும்

உடையனவாக இருக்கும். அவன் சென்ற தெரு ஏதோ மலையில் அமைந்திருந்ததைப் போல் இருந்தது.

அவன் அடைந்த இடத்திலிருந்து சற்று அகன்ற தெரு ஒன்று தெற்கு வடக்காகச் சென்றது. அந்த அகண்ட தெருவிலிருந்து நான்கு தெருக்கள் வரிசையாகத் தெரிந்தன. கிளைகளைப்போல் பிரிந்து சென்ற அந்த நான்கு தெருக்களும் ஒரு பர்லாங்கு இடைவெளிக்குள் அமைந்திருந்தன. அவன் ஒவ்வொரு தெருவாகப் பார்த்துக்கொண்டே சென்றான். ஒவ்வொரு தெருவுக்கும் ஏதோ ஒரு பெயர் வைக்கப்பட்டிருந்தது. ஒரே ஒரு தெருவுக்கு மட்டும் பெயர் இல்லை. சாலையின் தொடக்கத்தில் பெயர்ப் பலகையே இல்லை!

பெரியதம்பி தெருவின் இருபக்கங்களிலும் பார்த்தபடி நின்றான். இரண்டு பக்கங்களிலும் பெயர்ப் பலகையைக் காணவில்லை! பெயர் இல்லாத அந்தத்தெருவைகண்டதும் சரியான இடத்துக்குத்தான் நாம் வந்திருக்கிறோம் என்று முடிவு செய்தபடி நடந்தான்.

வழியில் சற்று வயதான மனிதர் ஒருவர் வந்தார். அவரைப் பார்த்து பெரியதம்பி கேட்டான். "ஐயா, இந்தத் தெருவுக்குப் பெயர் என்ன?''

"பெயர் இல்லாத தெரு இது!'' என்றார் பெரியவர்.

''பெயர் இல்லாத தெருவா? இப்படிக்கூட ஒரு தெரு இருக்குமா! பெயர்ப் பலகையைக் காணவில்லை. அது விழுந்து விட்டிருக்கும் என்றல்லவா எண்ணினேன்! மற்றத் தெருக்களுக்குப் பெயர் இருக்கும்போது இந்தத் தெருவுக்கு மட்டும் ஏன் பெயர் இல்லை?'' என்று கேட்டான் பெரிய தம்பி.

பெரியவர் சொன்னார்: "இந்தத் தெருவுக்குப் பெயர் வைக்காதது ஒரு பெரிய கதை. அதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இரண்டு பெரும் பணக்காரர்கள் இந்தத் தெருவில் இருந்தார்கள். அவர்களில் யார் பெயரை இந்தத் தெருவுக்கு வைப்பது என்ற பிரச்சினை வந்ததும் இருவரும் தத்தம் பெயரைத்தான் தெருவுக்கு வைக்க வேண்டும் என்று போட்டியிட்டார்கள். இறுதியில் எவர் பெயரையும் வைக்க முடியாதபடி கலகம் முற்றிவிட்டது. இந்தச் சண்டையில் இறுதிவரையில் இந்தத் தெருவுக்கு பெயர் வைக்க வில்லை. இந்தத் தெருவில் உள்ளவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து விட்டதனால் ஏற்பட்ட அமளி இது! இன்றுவரையில் இது பெயர் இல்லாத தெருவாகவே இருந்து வருகிறது!''

''மிக்கநன்றி நான் வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டான் பெரியதம்பி. விரைந்து பல வேலைகளைச் செய்ய வேண்டியிருந்ததால், பேசிக்கொண்டு நேரத்தை வீணாக்க அவன் விரும்பவில்லை.

தெருவின் கோடிக்கு வந்ததும் ஒரு பழைய வீட்டைப் பார்த்தான். அந்த வீடு பூட்டிக் கிடந்தது; மாடியில் இருந்த சன்னல்களில்ஒன்றிரண்டுதிறக்கப்பட்டிருந்தன. மாடியிலும் ஒருவரும் இல்லை என்பதற்கு அடையாளமாக அமைதி மிக நிலவி நின்றது. அந்த அமைதி சற்று அச்சத்தையும்தந்தது!

பெரியதம்பி அந்த வீட்டின்படிக்கட்டில் உட்கார்ந்தான். ஒருவரும் பார்க்காதபோது வீட்டைச் சுற்றி வளர்ந்திருந்த அடர்ந்த தோட்டத்துக்குள் பாய்ந்தான். பிறகு புறக்கடைப் பக்கம் சென்று பார்த்தான். பகலில் அந்த வீட்டிற்குள் நுழைந்தால், தெருவில் போகும் எவராவது பார்த்து விடுவார்களோ என்ற ஐயமும் அச்சமும் ஏற்பட்டன. அந்த

வீட்டிற்குள் புகுந்து பார்க்க இரவு வரையில் பொறுத்திருக் வேண்டும். இல்லாவிட்டால் புறக்கதவை எப்படியாவது திறந்துகொண்டு உள்ளேபோக வேண்டும்.

அவன் சிறிது நேரம் சிந்தித்தான். இருட்டும் வரையில் காத்திருந்தால், வீட்டிற்குள் தேடிப் பார்க்க மின்பொறி விளக்கு அவனிடம் இல்லை. ஆகையால் எப்படியாவது பகலிலேயே உள்ளே நுழைந்து பார்த்துவிட முடிவு எடுத் தான்.

புறக்கடைக்கதவு உள்ளே தாழிடப் பட்டிருந்தது. கடப்பாறையோ, இரும்புக் கருவியோ இருந்தால் மிக எளிதில் கதவைத் திறந்துவிடலாம் என்று தோட்டத்தில் பார்த்தான். தோட்டத்தில் ஒன்றும் கிடைக்கவில்லை. வீட்டின் பின் பக்கம் கார்களை நிறுத்த மிகப்பெரியகாரேஜ் ஒன்று இருந்தது. அந்தக் காரேஜின் கதவு பூட்டப்பட வில்லை. கதவைத் திறந்து கொண்டு உள்ளேநுழைந்தான். அந்தக் காரேஜில் பெரிய பழைய கார் ஒன்றுநின்றிருந்தது. பயன் அற்ற பழைய கார் அது. எவரோ அந்தக் காரை வந்த விலைக்கு விற்க மனமில்லாமல் அப்படியே போட்டு விட்டார்கள். அது துருப்பிடித்துப் போயிருந்தது.

பெரியதம்பி. அந்தக் காரின் பின்புறம் உள்ள பெட்டி யில் கருவிகள் ஏதாவது இருக்கின்றனவா என்று பார்க்க, மூடியைத் திறந்தான். உள்ளே ஒரு பெரிய பெட்டிஇருந்தது பெட்டியை அவன் எடுத்துப் பார்த்தான். அது மிகவும் பளு வாக இருந்தது. பூட்டிக்கிடந்த அந்தப் பெட்டிக்குள் என்னதான் இருக்கும் என்று அதைத் திறக்க முயன்றான். அதைத் திறக்க முடியவில்லை. அவன் அந்தப் பெட்டியைச் சற்று வெளிச்சத்தில் கொண்டுவந்து பார்த்தான். அந்தப் பெட்டியின் மீது—

'பெரியதம்பி' என்று எழுதியிருந்தது.

இதைக் கண்டதும் அவன் மனம் துள்ளியது! அவன் பெயர் எழுதி இருந்த இந்தப் பெட்டிக்குள்தான் இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அடங்கியிருப்பதாக அவன் எண்ணினான். ஆகையால் அந்தப் பெட்டியுடன் அவன் உடனே அந்த இடத்திலிருந்து புறப்பட முடிவு கட்டினான்.

அவன் பெட்டியின் மீது எழுதி இருந்த பெரியதம்பி என்னும் பெயரை, நகங்களாலும், கற்களாலும் கீறிக் கலைத்துவிட்டான். பிறகு அதைத் தூக்கிக்கொண்டு தோட்டத்தை அடைந்தான். தெருவில் மெல்ல எட்டிப் பார்த்துவிட்டு எவரும் அவனைப் பார்க்காதபோது பெட்டியுடன் நடந்தான்!

பெட்டியுடன் நடப்பது அவனுக்குச் சற்றுக் கடினமாகத்தான் இருந்தது. பெட்டியில் ஏதாவது காசு பணம் இருக்கும் என்றாலும், வாடகைக் காரில் போகலாம் என்று எண்ணினான். ஆனால், பெட்டியின் பளுவைப் பார்த்தால் அதன் உள்ளே செங்கற்கள் இருக்கும் போல் இருந்தது!

ஒரு வழியாக அவன் ஓர் ஓட்டலுக்குச் சென்றான். ஓட்டலில் வாடகைக்கு ஓர் அறையை எடுத்துக்கொண்டு, தன் பெயரைத் தங்கத்துரை என்று கையெழுத்துப் போட்டான். அவன் அறைக்குச் சென்றதும் கதவைத் தாழிட்டுவிட்டுப் பெட்டியின் பூட்டை உடைத்தான்.

பெட்டியைத் திறப்பதற்குள், ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு ஆவல் மிகுந்தது. பெட்டியை ஒரு வழியாகத் திறந்ததும், வியப்பினால் அப்படியே அவன் தொண்டை அடைத்துவிடும் போலிருந்தது! பெட்டியின் உள்ளே—

கற்றை கற்றையாகப் பண நோட்டுக்கள் அடுக்கப் பட்டிருந்தன! பண நோட்டுக்களைத் தவிர வேறு எதுவும் அதில் இல்லை!

## 18

பெட்டியிலிருந்த பணத்தையே வைத்தகண் வாங்காமல் பார்த்தான் பெரியதம்பி. அவனுக்கு இப்போது இரண்டு உண்மைகள் புலப்பட்டன. வஞ்சிக்கொடி அவனிடம் பணம் கேட்டாளே அவள் கேட்டதில் உண்மையிருந்தது என்பது புலப்பட்டது அவனுக்கு. மற்றொன்று, இரண்டாவது தடவை விபத்து நடந்திருக்கிறது. அந்த விபத்தில்தான் புகழ்பெற்ற கன்னட நடிகை சாந்தி இறந்து விட்டாள் என்பதும் புலப்பட்டது அவனுக்கு. ஆனால் அந்தப் பணம் எப்படி அந்தப் பெயர் இல்லாத தெருவில் ஒளித்து வைக்கப்பட்டது என்பதுவோ பெரியதம்பி எதற்காகப் பெங்களூரிலிருந்து மைசூருக்குச் சாந்தியுடன் காரில் சென்று கொண்டிருந்தான் என்பதுவோ ஒரு சிறிதும் அவனுக்கு விளங்கவில்லை! அவன் எவ்வளவு சிந்தித்துப் பார்த்தும்கூட ஒரு சிறிதும் அவனுக்கு அவன் நினைவில் அது வரவே இல்லை!

மார்ச் மாதம் 5ஆம் நாளிலிருந்து ஏப்ரல் மாதம் 5ஆம் நாள்வரையில் என்ன நடந்தது என்ற உண்மை தெரிந்தால் தான் எல்லாக் கேள்விகளுக்கும் ஐயங்களுக்கும் விடை கிடைக்கும் என்று உணர்ந்துகொண்டு, எல்லாவற்றையும் தன் நினைவிற்குள் கொண்டுவரப் பெரும் பாடுபட்டான் பெரியதம்பி, அந்த ஒரு மாத காலத்தில் நடந்தது எதுவுமே நிழலைப்போல அல்லது கனவைப் போலக்கூட அவன்

நினைவில் அவனுக்கு வரவில்லை! ஆகையால் அவன் திகைத்தான்! திணறினான்! விழித்தான்! செயலற்றான்!

பெட்டிக்குள் வேறு ஏதாவது தடயங்கள் கிடைக்கின்றனவா என்று பார்க்கப் பெட்டியிலிருந்த பணம் முழுவதையும் கொட்டிப் பார்த்தான். அதில் பணத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. அவன் பணத்தை மீண்டும் பெட்டியில் அடுக்கி எடுத்து வைத்தான்.

இப்போது பெரியதம்பிக்கு ஒரு பிரசினை வந்தது. அவன் அப்படியே பெட்டியுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தனக்குத் தெரிந்ததை அப்படியே போலீஸாரிடம் சொன்னால் போலீஸார் அவனை நம்புவார்களா? நம்ப மாட்டார்கள் என்றே தோன்றியது அவனுக்கு! மருத்துவ விடுதியிலிருந்து புறப்பட்ட அவன் தப்பி வாழமுடியாது என்று மனம் மாறி இப்படி ஒரு கதையுடன் வந்திருப்பதாக அவர்கள் எண்ணி அவனைக் கைதிக் கூண்டில் ஏற்றி, கடுமையான சிறைத்தண்டனையை வாங்கிக் கொடுத்து விடுவார்கள் என்று எண்ணினான்!

வஞ்சிக்கொடி உண்மையை அவனிடம் பேசினால், உண்மையில் என்ன நடந்தது என்பதை உணர அவனுக்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்பினான் பெரியதம்பி ஆனால் அவளைக் காண்பது ஆபத்து, அப்படியே கண்டாலும் அவள் உண்மையைப் பேசமாட்டாள் என்று ஊகம் செய்து கொண்டு சிறிது நேரம் சீரிய சிந்தனையில் ஈடுபட்டான். பிறகு ஒரு முடிவுப்படி செய்ய—இறங்க அன்றே அவன் திட்டம் போட்டான்!

பணப்பெட்டியிலிருந்து அவனுக்கு ஒன்றிரண்டு மாதங்களுக்குப் போதுமான பணத்தை எடுத்துக் கொண்டான்.

பெட்டியை மூடி வைத்துவிட்டு வெளியே சென்றான். கடைத் தெருவுக்குச் சென்று மிகச் சிறந்த உடைகளை வாங்கிக் கொண்டான். ஓட்டலுக்குத் திரும்பி வந்ததும், மிகச் சிறந்த உடைகளை மாற்றிக்கொண்டான். மறுநாள் வரையில் அந்த ஓட்டலில் அதே உருவத்துடன் தங்கியிருப்பது ஆபத்து என்பதை உணர்ந்துகொண்டு அன்று இரவே அதைக் காலி செய்துவிட்டுப் புறப்பட்டான்.

வாடகைக் காரைப் புகைவண்டி நிலையத்துக்கு விடும்படி சொன்னான். புகைவண்டி நிலையத்தில் பணப் பெட்டியை மட்டும் கொண்டுபோய், அதை அங்கே பாதுகாப்பாக வைத்துவிட்டு, அதற்கு ஒரு சீட்டுப் பெற்றுக்கொண்டான். பாங்கைவிடப் பாதுகாப்பான இடம் புகைவண்டி நிலையம்தான். பாங்குக்குப் போனால் இவ்வளவு பணம் ஏது என்று கேட்பார்களே என்று எண்ணியபடி திரும்பினான்.

வாடகைக் கார் அவனுக்காகக் காத்திருந்தது. அதில் அவன் துணிகளை வைத்திருந்த புதிய சிறிய பெட்டி மட்டும் இருந்தது. காரோட்டியிடம் அவன் சொன்னான்: "எங்கள் ஊரில் போடப்போகும் ஒரு நாடகத்தில் மேக்கப்போட ஒரு நிபுணர் வேண்டும். உனக்குத் தெரிந்த மேக்கப் நிபுணர் எவராவது இருந்தால் அவரிடம் என்னை அழைத்துப்போ"

காரோட்டி 'ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு காரைக் கண்டபடி விட்டான். இறுதியில் ஒரு பழைய வீட்டின் முன் கார் நின்றது. அந்த வீட்டின் வெளியே ஒரு பெயர்ப் பலகை தொங்கிக் கொண்டிருந்தது இருளிலே பெயர்ப் பலகையில் எழுதியிருந்த பெயர் தெரியவில்லை.

"இந்த ஊரில் சிறந்த மேக்கப் நிபுணர் இவர்தான் இறந்துபோன புகழ்பெற்ற சினிமா நட்சத்திரம் சாந்திக்குக்

கூட இவர்தான் மேக்கப் போடுவது வழக்கம்!'' என்றான் காரோட்டி.

இதைக்கேட்டதும் பெரியதம்பியின் உடல் சிலிர்த்தது! அவன் உடல் முழுவதும் அச்சத்தால் வேர்த்தது! உள்ளே போவதா வேண்டாமா என்ற ஐயம் வந்தது அவனுக்கு! மேக்கப் நிபுணருக்கு அவனைப்பற்றித்தெரிய நீதி இல்லை என்று உணர்ந்துகொண்டு சற்றுத் துணிவை வரவழைத் துக் கொண்டான். அதற்குள் காரோட்டி இறங்கி காரின் பின் கதவைத் திறந்தான். உடனே பெரியதம்பி கீழே இறங்கி "நீ இங்கேயே இரு. உடனே நான் வந்து விடு கிறேன்" என்று அவனிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

மேக்கப் நிபுணர் சற்று வயதான மனிதர். அவர் பெரியதம்பியைக் கண்டதும் கேள்விக் குறியுடன் அவனைப் பார்த்தார்.

பெரியதம்பி அவர் முன்னால் சென்று நின்றுகொண்டு, "எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும்'' என்றான்.

"என்ன செய்ய வேண்டும்?" என்றார் மேக்கப் நிபுணர்.

"நான் ஓர் நாடகத்தில் நடிக்கிறேன். அந்த நாடகத் தில் எங்கள் அலுவலகத்தில் உள்ளவர்களே நடிக்கிறார்கள் மேக்கப்பை அவரவர்களே போட்டுக்கொள்ள வேண்டும். எனக்கு நீங்கள் பொருத்தமான மீசை ஒன்றை வைத்துவிட வேண்டும்!'' என்றான் பெரியதம்பி.

மேக்கப் நிபுணர் அவனைச் சிறிது நேரம் ஏற இறங்கப் பார்த்தார்.

"நீ என்ன பாத்திரமாக நடிக்கப் போகிறாய்?" கதா நாயகனாகவா வில்லனாகவா?'' என்று கேட்டார் மேக்கப் நிபுணர்.

அவன் சிறிது திணறினான் எப்படிப்பட்ட மீசை வேண்டும் என்பதைப் பற்றி அவன் முடிவு செய்யவில்லை. அதனால் இப்படி ஒரு கேள்வியை அவன் எதிர்பார்க்க வில்லை.

அதற்குள் மேக்கப் நிபுணர் கேட்டார்: "என்ன விழிக் கிறாய்? என்ன பாத்திரம் என்று கூடவா முடிவு செய்ய வில்லை? நீ எந்தப் பாத்திரமாக நடிக்கிறாய் என்பது உனக் குத் தெரியவில்லையா? பெரிய பெரிய சினிமா நட்சத்திரங் கள்தாம் எந்தப் பாத்திரத்தில் நடிக்கிறோம் என்பது தெரி யாமலே நடிக்கிறார்கள் இந்தக் காலத்தில்! நீயுமா அப்படி?"

"அப்படி ஒன்றும் இல்லை. நான் சரியான பதிலைச் சொல்லுவதற்குள் நீங்கள் விரைவு கொண்டுவிட்டீர்கள்!" என்றான் பெரியதம்பி பிறகு அவன் சொன்னான்: "நான் நடிக்கும் கதையில் நான்தான் நாயகன் நல்லவனாக நான் வருகிறேன். ஆனால் நல்லவனாக வரும் நான்தான் உண்மையில் கொடியவன்! நான் வில்லன் என்பது எவருக்கும் தெரியாது. இப்படி ஒரு பாத்திரம்!"

பெரியதம்பியின் இந்தப் பதில் மேக்கப் நிபுணருக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் சிரித்தபடியே சொன்னார்: "பசுத்தோல் போர்த்திய புலி என்பார்களே, அப்படி ஒரு பாத்திரம் போல் இருக்கிறது!''

"ஆமாம்" என்றான் பெரியதம்பி.

''மீசைக்கு மட்டும் இருபத்தைந்து ரூபா ஆகும்'' என்றார் மேக்கப் நிபுணர்

''பணத்தைப் பற்றித் துன்பம் இல்லை'' என்றான் பெரியதம்பி.

சிறிது நேரத்தில் அவர் ஓர் அறையில் எதையோ தேடி விட்டு இறுதியில் ஒரு போலி மீசையுடன் வந்தார். அதை அவன் முகத்தில் பொருத்திவிட்டு கண்ணாடியில் அவனைப் பார்க்கும்படி சொன்னார்.

மேக்கப் அறையில் எல்லாப் பக்கங்களிலும் நிலைக் கண்ணாடிகள் தாம் இருந்தன. அவைகளில் அவன் உருவத்தை அவன் பார்த்தபோது அவனே மிக அயர்ந்து விட்டான்.

சற்றுப் பட்டையாக இருந்த அந்த மீசையை அவன் வைத்துக்கொண்டதும், அவன் ஓர் இராணுவ அதிகாரி யைப் போல் காணப்பட்டான். அதை அவன் எடுத்துத் தன் கால் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, "நன்றி" என்று கூறிவிட்டுப் பணத்தையும் கொடுத்துவிட்டு நடந்தான்.

வாடகைக் காரில் மீண்டும் அவன் ஏறி உட்கார்ந்து மிகச் சிறந்த ஓட்டல் ஒன்றுக்குப் போகும்படி சொன்னான்.

# 19

வண்ண விளக்குகளுடன் வான வில்லைப்போல் பல வகை வண்ணங்களை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்த அந்த ஓட்டலுக்கு வானவில் ஓட்டல் என்று பெயர் வைத்ததில் வியப்பு இல்லை என்று எண்ணியது அவன் மனம். ஓட்டலுக்கு வெளியிலேயே காரை நிறுத்தும்படி சொல்லி விட்டுப் பெட்டியுடன் இறங்கினான். வாடகைக் காரை அனுப்பிவிட்டு, பொய் மீசையை இருளில் எவருக்கும் தெரியாமல் எடுத்து ஒட்ட வைத்துக்கொண்டு விரைவுடன் நடந்தான்.

வானவில் ஓட்டலில் பெரும் பணக்காரர்களும், ஆரவாரத்துடன் தங்க விரும்பிய சினிமாக்காரர்களும்தாம் பெரும்பாலும் தங்கியிருந்தார்கள். பெரியதம்பி மீண்டும் ஒருமுறை தன் பெயரை மாற்றிக் கொடுத்தான். மலரவன் என்று தன் பெயரைப் பதிவு செய்துவிட்டு, எவரும் அடிக்கடி வர முடியாத நான்காவது மாடியில் ஓர் அறையை எடுத்துக் கொண்டு அந்த அறையில் தங்கினான்.

அன்று இரவு முழுவதும் அவனுக்கு ஓய்வு தேவைப் பட்டது. அவன் சற்று அமைதியுடன் தூங்கினான்.

விடிந்ததும் எழுந்து மீசையை மிகக் கவனமாகச் சரிப் படுத்திக் கொண்டு, மணியடித்து ஓட்டல் பையனை வரவழைத்து ஒரு கோப்பை காப்பியும், தினசரிப் பத்திரிகைகளும் வேண்டும் என்றான்.

ஓட்டல் பையன் ஒரு சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். அவன் காப்பியைக் கொண்டுவந்து வைத்துவிட்டு,

பல காலைத் தினசரிப் பத்திரிகைகளை வைத்து விட்டுப் போனான்.

பெரியதம்பி ஒவ்வொரு பத்திரிகையாகப் பார்த்தான். எல்லாப் பத்திரிகைகளையும் பார்த்து முடித்தான். எல்லாப் பத்திரிகைகளிலும் அவன் புகைப்படமும், அவன் போலீஸாரால் தேடப்பட்டுவரும் செய்தியும், புலிக்குட்டி வல்லவன் ஆகிய இரு குத்துச்சண்டை வீரர்களையும் கொன்றதுடன் நில்லாமல், பெரும் பணத்துக்காகச் சாந்தி என்னும் புகழ்பெற்ற சினிமா நடிகையைக் கொலை செய்துவிட்டுப் பிறகு மருத்துவ விடுதியிலிருந்து தப்பிவிட்டதாகவும் செய்திகளும் புகைப்படமும் வந்திருந்தன. செய்தியில் அவன் பெயர் பெரியதம்பி என்றே குறிப்பிடப்பட்டிருந்தது!

வஞ்சிக்கொடி வஞ்சம் தீர்த்துக்கொண்டாள் என்று முடிவு செய்த அவன் போலீஸார் அவனை மாற்று உருவத்தில் கண்டுபிடிக்கும் முன்னதாக உண்மைகளைக் கண்டு பிடிக்கச் செயலில் இறங்கினான்.

அவன் காப்பியைப் பருகிவிட்டு, ஓட்டலிலிருந்த பையனை அழைத்து வெளியூருக்குச் செல்ல வாடகைக் கார் ஒன்று வேண்டும் என்று சொல்லி அனுப்பினான்.

சிறிது நேரத்தில் கார் வந்தது. அவன் புறப்பட்டான். அவன் போகவேண்டிய இடத்தை முடிவு செய்திருந்தான்.

அந்த இடம்—

## 20

காரை ஓட்டிச் சென்றவனிடம் பெரியதம்பிசொன்னான்: "சென்னைக்குப் போகும் சாலையில் போ. நான் நிறுத்தச் சொல்லும் இடத்தில் நிறுத்து.''

காரோட்டி விரைந்து காரைச் செலுத்தினான். அவன் அவ்வளவு விரைவாகப் போவது பெரியதம்பிக்குப் பிடிக்க வில்லை. மீண்டும் ஒரு விபத்தில் சிக்குவது அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

“இதோ பார். சற்று மெல்லப்போ. தலை மூழ்கிப் போகிற செயல் ஒன்றும் இல்லை” என்றான் அவன்.

உண்மையில் அவனுக்குத் தலை மூழ்கிப்போகும் செயல் இருந்தது.

பெரியதம்பி சொன்னது கார் ஓட்டிக்குப் பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கியது போக வேண்டிய இடத்துக்கு விரைவாகப் போனால் வெகுமதி சற்று மிகுதியாகக் கிடைக்கும் என்பது அவன் எண்ணம். அதை மறைக்கக் காரோட்டி சொன்னான்: “பதினைந்து ஆண்டுகளாக நான் காரோட்டி வருகிறேன். இதுவரையில் ஒரு சிறிய விபத்துக் கூட நடந்ததில்லை நீங்கள் சிறிதும் அஞ்சாதீர்கள்!”

பெரியதம்பிக்கு இது சிறிதும் பிடிக்கவில்லை. அவன் மருத்துவ விடுதியில் நினைவு பெற்றதிலிருந்து, காரில் ஏறி உட்காருவது என்றாலே சற்று அச்சமாகவும் நடுக்கமாகவும் இருந்தது. வேறு வழியில்லாமல் அவன் லாரியிலும் காரிலும் பயணம் செய்ய வேண்டியதிருந்தது. அவன் சொன்னான்: “பதினைந்து ஆண்டுகளாக நீ ஓட்டிய கார் விபத்துக்குள்ளாகவில்லை என்கிறாய். உன் வாய்ப்பு அப்படி. என் வாய்ப்பு எப்படித் தெரியுமா? நான் காரில் ஏறிய அன்றே கார் விபத்துக்குள்ளாகிவிட்டது! ஆகையால் மெல்லப்போ! உனக்கு வேண்டிய அளவுக்கு வெகுமதி தருகிறேன்!”

பெரியதம்பி சொன்னதைக் கேட்டுக் காரோட்டி சிரித்து விட்டான். பொதுவாக வயதானவர்கள்தாம் கார் விரைந்து சென்றால் அஞ்சுவார்கள். இளைஞர்கள் அஞ்சுவதில்லை என்பது அவனுக்குத் தெரியும். பெரியதம்பியின் செயல் இதற்கு நேர்மாறாக இருந்தது. அவன் காரைச் சற்று மெல்லவே செலுத்தினான்.

பெங்களூரைவிட்டு விலகிக் கார் சென்னைக்குச் செல் லும் சாலையில் சென்றது. விபத்து நடந்த இடம் எதுவாக இருக்கும் என்று அவன் சிந்தனை செய்தபடி இருபக்கங் களிலும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பழக்கப்பட்ட வழியோ மரங்களோ, சாலை ஓரமாக இருந்த மரங்களோ, அடையாளங்களோ அவன் கண்களுக்குப் படவில்லை.

கார் போய்க்கொண்டே இருந்தது. விபத்து நடந்த இடத்தை நாம் மறந்துவிட்டோமோ என்ற ஐயம் வந்து விட்டது அவனுக்கு!

சற்றுத் தொலைவிலே சாலை வளைந்து திரும்பியது. பெண்களின் கொண்டை ஊசி எப்படி வளைந்திருக்குமோ அப்படி வளைந்து திரும்பியது சாலை. அந்தத் திருப்பத்தை கடந்ததும், வலப்பக்கம் தெரிந்த ஒரு மலையைப் பார்த் தான் பெரியதம்பி. மலையைக் கண்டதும் விபத்து நடந்த இடம் அதன் பக்கத்தில்தான் என்பது அவனுக்கு நினைவில் வந்துவிட்டது! விபத்து நடந்த அன்று, மலையில் இருந்த காய்ந்துபோன செடிகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது அவன் நினைவுக்கு வந்தது.

சாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் விபத்து நடந்த இடம் மிகத் தெளிவாகவே அவன் நினை வுக்கு வந்துவிட்டது.

காரோட்டி வியப்புடன் காரை ஓர் ஓரமாக நிறுத்தினான். பெரியதம்பி காரிலிருந்து இறங்கியதும் காரோட்டி வியப்புடன் பார்த்தான்.

“இங்கேயே இரு. நான் வந்துவிடுகிறேன்” என்று சொல்லிவிட்டு, விபத்து நடந்த இடத்திலிருந்து பார்த்தான். எல்லாத் திக்குகளிலும் பார்த்தான். எல்லாம் கனவைப் போல நினைவில் வந்தன. விபத்து நடந்த இடத்திலிருந்து ஒரு பர்லாங்குத்தொலைவில் மலையின் ஓரமாக ஓர் ஏரி இருந்தது. ஏரியின் கரையில் வரிசையாக பனை மரங்கள் வளர்ந்திருந்தன. பெரியதம்பி ஏரியின் கரையை நோக்கி நடந்தான்.

ஏரிக்கரைக்குச் செல்ல, பெயருக்கு ஒரு பாதை இருந்தது. அந்தப் பாதையில் கட்டை வண்டிகள் தாம் போகலாம். அப்படியிருந்தது அந்தப் பாதை. அதன் வழியே பெரியதம்பி நடந்தான்.

அமைதியான அந்த இடத்தில் பனைமரங்கள் காற்றில் தங்கள் தலையை ஆட்டியபோது, உலர்ந்த ஓலைகள் எழுப்பிய ஒலி கலகலவென்று கேட்டுக் கொண்டிருந்தது. விபத்து நடந்த அன்றிரவு விபத்துக்குப்பின் இதே ஓசை அவனுக்கு அன்று கேட்டது அவன் நினைவுக்கு வந்தது.

ஒருவழியாக ஏரிக்கரையை அடைந்தான். அவன் ஏரிக்கரையின்மீது ஏறி நின்றுகொண்டு பார்த்தான். ஏரிக்கரைக்கும் மலைக்கும் நடுவில் கடலைப்போல் தேங்கியிருந்த ஏரி நீர் அழகாக இருந்தது. ஏரி அலைகளின் ஓசை பனை ஓலைகளின் ஓசையுடன் இழைந்தது. இந்த இரு ஓசைகளும் இழைவதைக் கண்டதும், மிகச் சரியான இடத்துக்குத்தான் நாம் வந்திருக்கிறோம் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

ஏரிக்கரையின் மறுபக்கம் மதகுக்கு அப்பால், ஒரு குடிசை தெரிந்தது. அந்தக் குடிசையும் அவனுக்கு இப்போது நினைவில் வந்தது. குடிசையை நோக்கி நடந்தான் பெரியதம்பி.

குடிசையின் கதவு திறந்திருந்தது. பெரியதம்பி எட்டிப் பார்த்தான். உள்ளே கயிற்றுக் கட்டிலின்மீது ஒரு கிழவன் உட்கார்ந்துகொண்டு, சுருட்டு ஒன்றைப் பிடித்துக்கொண்டிருந்தான்.

பெரியதம்பியைக் கண்டதும் கிழவன் "யாரது?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து வெளியே வந்தான்.

"உன்னிடம் சிறிது பேசவேண்டும். பெங்களூரிலிருந்து நான் வருகிறேன்" என்றான் பெரியதம்பி.

கிழவன் அவனை ஏற இறங்கப் பார்த்தான். அவன் ஐயக் கண்களுடன் பெரியதம்பியைப் பார்த்தான்.

"நீ இந்தக் குடிசையில்தானே எப்போதும் இருக்கிறாய்?" என்றான் பெரியதம்பி. அவனுக்கு இந்தக் குடிசையைக் கண்டது நினைவில் வந்தது. ஆனால் கிழவனைக் கண்டது அவன் நினைவில் வரவில்லை.

"ஆமாம். ஏரியின் மதகுக்கு நான் காவலாக இருக்கிறேன்" என்றான் கிழவன்.

"ஒரு மாதத்திற்குமுன்பு, அதோ அந்தப் பெரிய சாலையில் ஒரு கார் விபத்து நடந்ததே, அதைப்பற்றி உனக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன்" என்றான் பெரியதம்பி.

இதைக் கேட்டதும் கிழவனின் முகம் மாறியது.

அவன் சுருட்டின் புகையை விரைவாக இழுத்துவிட்டு விட்டு "அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது" என்றான்.

பெரியதம்பி அவன் முகமாற்றத்தைக் கண்டதும், எதற்காகவோ அவன் அஞ்சுகிறான் என்பதை உணர்ந்து கொண்டு, "நன்றாக நினைவு படுத்திப் பார்! உன் இருப் பிடத்திற்குப் பக்கத்தில் நடந்த விபத்தைப்பற்றி நீ மறந் திருக்கமுடியாது. எனக்கு அந்த விபத்தைப் பற்றிய சில உண்மைகள் தெரியவேண்டும்" என்றான்.

கிழவன் பேசவில்லை.

பெரியதம்பி ஐந்து பத்து ரூபா நோட்டுக்களைஎடுத்து மடித்து அவனிடம் நீட்டினான். கிழவன் தயக்கத்துடன் நோட்டுக்களைப் பெற்றுக்கொண்டான். அப்போது அவன் கைகள் நடுங்கின!

"அஞ்சாதே! நீ சொல்லும் உண்மைகளை நான் எவரி டமும் சொல்லிவிட மாட்டேன்" என்றான் பெரியதம்பி.

"நீங்கள் உண்மையில்யார்? போலீஸ் இலாகாவி லிருந்து நீங்கள் வரவில்லையே?" என்றான் கிழவன்.

"நான் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவனல்லன். அந்தச்சாலையில் விபத்து நடந்ததே, அந்த விபத்தில் என் தம்பி இறந்துவிட்டான். அவன் பெயர் பெரியதம்பி. விபத்துக்குப்பின் என்ன நடந்தது என்பதை அறியவே நான் வந்திருக்கிறேன்" என்றான் பெரியதம்பி.

கிழவன் இதைக் கேட்டதும் பெரியதம்பியை உற்றுப் பார்த்தான். அவன் முகம் அவனுக்குப் பழக்கப்பட்ட தைப்போல் இருந்தது. உண்மையிலேயே பெரியதம்பியின்

அண்ணனாகத்தான் இவன் இருக்கவேண்டும் என்று அவன் நம்பியதைப்போல் இருந்தது.

கிழவன் சொன்னான். "அன்று இரவு நடந்தது ஒரு கனவைப்போல் எனக்கு இருக்கிறது. உண்மையில் அது கனவா, நடந்ததா என்று என்னால் சரியான முடிவுக்கு வர முடியவில்லை சாலையில் ஏதோ ஓசை கேட்டது. அப்போது நான் மதகைத் திறந்து தண்ணீர்விட்டுக்கொண்டிருந்தேன். பிறகு நான் குடிசைக்கு வந்து கட்டிலில் படுத்துக் கொண்டேன். சற்றுநேரம் கழித்து எவரோ நடந்து வரும் ஓசை கேட்டது. வெளியே எட்டிப்பார்த்தபோது, ஓர் இளைஞனும் ஒரு பெண்ணும் வந்தார்கள். அந்த இளைஞன் அரை மயக்கத்துடன் இருந்தான். அவனைத் தாங்கி அழைத்து வந்த அந்தப் பெண் மெல்ல அவனைக் கட்டிலில் கிடத்தினாள்."

"பிறகு?" என்றான் பெரியதம்பி.

"அந்த இளைஞன் மயக்கமாகக் கிடந்தான். அவன் முகத்தில் தண்ணீரைத் தெளித்துப் பார்த்தோம். அவன் கண்களைத் திறக்கவே இல்லை. என்ன நடந்தது என்று கேட்டேன். சாலையில் கார் விபத்து ஒன்று நடந்ததாகவும் அதில் அந்த இளைஞனுக்குக் கொஞ்சம் அடிபட்டதாகவும் அந்தப் பெண் சொன்னாள். சிறிது நேரம் கழித்து அவனுக்கு மெல்ல நினைவு வந்தது. அவனை அழைத்துக் கொண்டு அவள் சாலைக்குச் சென்று ஏதாவது ஒரு காரில் போய்விடுவதாகச் சொன்னாள். நான் தடுக்கவில்லை. அவர்கள் இருவரும் சிறிது தொலைவு சென்றதும், இந்தப் பக்கமாக ஒரு கார் வரும் ஓசை கேட்டது. இங்கே நின்றபடியே பார்த்தேன். வந்த கார் அவர்களுக்குப் பக்கத்தில் நின்றது. அதில் அவர்கள் ஏறிக்கொண்டதும், கார் அப்படியே திரும்பிப் போய்விட்டது."

“அது என்ன கார் என்பது தெரியுமா?” என்று கேட்டான் பெரியதம்பி.

“காரைப்பற்றி எனக்கு என்ன தெரியும்? ஏதோ ஒரு கார் அவ்வளவுதான்” என்றான் கிழவன்.

“நீ சாலைக்குப் போய்ப் பார்க்கவில்லையா?”

“நீண்ட நேரம் கழித்து, அங்கே வரிசையாகப் பல வண்டிகள் நிற்பதைக் கண்டு; போய்ப் பார்த்தேன். சாலைக்குப் பக்கத்தில் ஒரு கார் கவிழ்ந்து கிடந்தது. கார் கவிழ்ந்துவிட்டதைப் பற்றியோ, அதில் ஒரு மனிதன் இறந்து கிடப்பதைப் பற்றியோ, அந்தப் பெண் சொல்லவே இல்லை. எனக்கு அச்சமாகப் போய்விட்டது! போலீஸார் என்னைஅச்சுறுத்துவார்களோ என்று அஞ்சி நான்அதைப் பற்றி யாரிடமும் பேசவில்லை. அந்தப் பெண்ணும் இந்த இளைஞனும் என்ன ஆனார்கள் என்பது மர்மமாக இருக்கிறது” என்றான் கிழவன்.

கிழவன் எல்லா உண்மைகளையும் சொன்னானா இல்லையா என்பதைப் பற்றிப் பெரியதம்பிக்கு ஐயம் வந்தது.

“வேறு ஒன்றுமே உனக்குத் தெரியாதா?” என்றான் பெரியதம்பி.

“தெரியாது. தெரிந்தால் சொல்லுவதற்கு என்ன?” என்றான் கிழவன்.

இனிமேலும் அவனிடம் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்துகொண்ட பெரியதம்பி பெருமூச்சு விட்டபடி அவனை ஒரு தடவை பார்த்துவிட்டுப் போகத் திரும்பினான்.

"சார், விபத்தில் இறந்து போனவர் உங்கள் தம்பியா" என்றான் கிழவன்.

"இல்லை'' என்று சொல்லிவிட்டுச் சாலையை நோக்கி நடந்தான் பெரியதம்பி.

அந்தக் குடிசையிலிருந்து புறப்பட்ட பிறகு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க எவ்வளவு முயன்றும் அவனுக்கு நினைவு வரவே இல்லை. விபத்து நடந்த இடத்தில் ஏதாவது தடயங்கள் கிடைக்குமா என்று பார்க்க முடிவு செய்தான். கார் கவிழ்ந்த இடத்தில் சென்று தேடிப் பார்த்தான். அங்கே விபத்து நடந்தது என்பதற்குச் சான்றாக எதுவும் இல்லை. மேலும் அங்கே ஏதாவது விழுந்திருந்தால் போலீஸார் கண்களுக்கு அது படாமலா போயிருக்கும்!

எந்தத் தடயங்களும் கிடைக்கவில்லை!

அலுப்புடன் அவன் கார் நின்ற இடத்தை நோக்கி நடந்தான். காரில் ஏறி உட்கார்ந்ததும் அவனுக்கு மற்றொரு புது எண்ணம் பிறந்தது. காரோட்டியிடம் அவன் மீண்டும் பெங்களூருக்கே காரைச் செலுத்தும்படி சொன்னான்!

## 21

பெங்களூரில் பெரியதம்பி தங்கியிருந்த வானவில் ஓட்டலுக்கே மீண்டும் திரும்பிச் சென்றான். தன் அறைக்கு சென்றதும், தொலைபேசிப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினான். அதில் சினிமா நடிகை சாந்தியின் பெயரைத் தேடிக் கண்டுபிடித்தான். அவளுடைய தொலைபேசி எண்களையும்

முகவரியையும் மனத்தில் பதித்துக்கொண்டு மீண்டும் வெளியே புறப்பட்டான். போகும்போது ஓட்டலின் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று காப்பி பருகினான். அவன் காப்பி பருகிக்கொண்டே சிந்தனை செய்தான்.

விபத்து நடந்த இடத்துக்குப் பக்கத்தில் இருந்த ஏரிக் கரைக் குடிசையில் வாழ்ந்த கிழவன் சொன்னவைகளை எண்ணிப் பார்த்தான். அவன் எல்லா உண்மைகளையும் நடந்தது நடந்தபடியே சொன்னானா, இல்லையா என்று தன் மனத்திற்குள் சிந்தித்துப் பார்த்துக்கொண்டான். கிழவன் சொன்னபடி பார்த்தால் அவன் சாந்தியையும் பெரியதம்பியையும் பார்த்திருக்கிறான். சாந்தி அவனிடம் கார் விபத்தில் எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை என்று சொல்லியிருக்கிறாள். பிறகு; சாந்தியும் பெரியதம்பியும் மற்றொரு காரில் ஏறிச் சென்று விட்டார்கள். அவர்கள் சென்றபின், கிழவன் சாலைக்கு வந்து பார்த்தபோது, கார் விபத்தில் ஒரு மனிதன் இறந்திருந்ததைப் பார்த்திருக்கிறான். இறந்து கிடந்த மனிதன் பெரியதம்பி அல்ல என்பது அவனுக்குத் தெரியும். காரில் விழுந்து கிடந்தவன் புலிக்குட்டி என்பவன்தான் என்பது பிறகு பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதையும் அவன் படித்ததாகவோ கேட்டதாகவோ தெரியவில்லை. அதற்கு மாறாக இன்று அவன் பெரியதம்பியைக் கண்டதும், காரில் விழுந்து இறந்து கிடந்தவன் யார் என்று தெரியாததைப்போல் பேசியது நினைவுக்கு வந்தது. கிழவன் முழுக்க முழுக்க உண்மையை பேசவில்லை. அல்லது, அவன் அந்த இடத்தில் வாழும் கிணற்றுத் தவளையாக இருக்கவேண்டும் என்று பெரிய தம்பி முடிவு கட்டினான். என்றாலும் பெரியதம்பியால் தெளிவான ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

காப்பியைப் பருகிவிட்டு, வெளியே வந்ததும் வாடகைக் கார் ஒன்றில் புறப்பட்டான். சாந்தியின் பங்களா இருந்த தெருவுக்குப் போகும்படி காரோட்டியிடம் சொன்னான்.

காரோட்டி காரைச் செலுத்தினான். சற்று நேரம் கழித்து, பெரியதம்பி ஒரு தெருவின் திருப்பத்தில் இருந்த தொலைபேசிப் பெட்டியைப் பார்த்தான். அவன் காரோட்டியிடம் "அந்தத் தெரு இன்னும் எவ்வளவு தொலைவு இருக்கிறது?" என்று கேட்டான்.

காரோட்டி அமைதியுடன் சொன்னான்: "மிகவும் பக்கத்தில்தான். இன்னும் இரண்டு தெருக்களைக் கடந்தால் போதும்!''

"அப்படியானால் இங்கேயே நிறுத்து" என்றான் பெரியதம்பி.

காரோட்டி நிறுத்தினான். அவன் சிரித்துக்கொண்டே ''ஏன் இங்கேயே வழியிலேயே இறங்கி விடுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

பெரியதம்பி சொன்னான்: ''நான் காரில் ஏறி உட்கார்ந்ததும் மீட்டரையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். மீட்டரில் விழும் தொகைக்கும் என் பையில் இருக்கும் பணத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு வந்துவிட்டது! இதற்குமேல் போனால் என்னிடம் இருக்கும் பணம் போதாது."

இப்படி அவன் கூறிவிட்டுக் காசைக் கொடுத்துக் காரோட்டியை அனுப்பிவிட்டான்.

கார் மறைந்ததும், மூலையில் இருந்த தொலைபேசிப் பெட்டிக்குச் சென்றான். உள்ளே சென்று கண்ணாடிக்

கதவைச் சாத்திக்கொண்டு காசைப் போட்டுவிட்டு சாந்தியின் தொலைபேசி எண்ணைச் சுழற்றினான். மணியடிக்கும் ஓசை தொடர்ந்து கேட்டது. எவரும் தொலை பேசியை எடுக்கவில்லை. பெரியதம்பிசற்றுநேரம் அப்படியே தொலைபேசிக் கருவியைக் காதில் வைத்துக்கொண்டிருந் தான். அப்போது தொலைபேசியை எவரோ எடுக்கும் ஓசை கேட்டது. பிறகு ''ஹலோ'' என்றொரு பெண்ணின் குரல் கேட்டது. பழக்கப்பட்ட குரல் அது!

''பேசுவது யார்? சாந்தியா?'' என்று கேட்டுவிட்டான் அவன்.

மறுமுனையில் பேசிய குரல் ஒரு சில விநாடிகள் வரை பேசவில்லை. பிறகு அந்தக் குரல் பேசியது: "சாந்தியா? சாந்தி இல்லையே! சாந்தி இறந்துவிட்டாளே! உங்களுக் குத் தெரியாதா?"

''நீ யார்?'' என்று கேட்டான் பெரியதம்பி. இன்னும் அவனுக்கு அந்தக் குரல் பழக்கப்பட்ட குரல் போலவே இருந்தது.

அந்தப் பெண் குரல் சிரித்தது. ''பேசுவது பெரியதம்பி தானே! இல்லையா?'' என்றாள் குரலுக்குரிய பெண்.

அவள் அப்படிக் கேட்டதும்தான்; பளிச்சென்று அந்தக் குரலுக்கு உரியவள் யார் என்பதை உணர்ந்துகொண்டான் பெரியதம்பி. அந்தக் குரலுக்கு உரியவள் சாந்தி அல்லள்! அவனை மருத்துவ விடுதியில் வந்து உறவு கொண்டாடி பணம் இருக்கும் இடத்தைச் சொல்லும்படி அச்சுறுத்திய, வஞ்சிக்கொடி அவள்!

சாந்தியின் பேய் வந்து தொலைபேசியில் பேசியிருந்தால் கூடப் பெரியதம்பி இவ்வளவு பெரிய தாக்குதல் அடைந்திருக்கமாட்டான். வஞ்சிக்கொடியின் குரலை உணர்ந்து கொண்டதும், மிகப் பெரிய ஆபத்தை நோக்கி அவன் விரைந்து சென்று கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டான்.

''பெரியதம்பி! நீங்கள் இப்போது எங்கேயிருந்து பேசுகிறீர்கள்? உடனே சொல்லுங்கள்'' என்றாள் வஞ்சிக்கொடி.

''நான் இருக்குமிடத்தை உன்னால் அடைய முடியாது வானத்திலிருந்து நான் பேசிக்கொண்டிருக்கிறேன்!'' என்றான் பெரியதம்பி.

''தொலைபேசியை வைத்துவிடாதீர்கள். மிகத் தலையாய உண்மைகள் சிலவற்றை உங்களிடம் நான் கேட்க வேண்டும்!'' என்று கத்தினாள் அவள் கத்தியதிலிருந்து, அவன் தொலைபேசியை வைத்துவிட்டு ஓடிவிடுவான் என்று அவள் எண்ணியதைப் போலிருந்தது.

பெரியதம்பி ஏதோ எண்ணிக் கொண்டவனைப்போல் தொலைபேசியை வைத்துவிட்டு வெளியே வந்துவிட்டான். நீண்டநேரம் அவன் வஞ்சிக்கொடியுடன் தொலைபேசியில் பேச விரும்பவில்லை. அவள் பேசிக்கொண்டேயிருந்தால் வஞ்சிக்கொடி பக்கத்தில் இருக்கும் எவரையாவது அனுப்பி மற்றொரு தொலைபேசியில் பேசி இவர்களுடன் தொடர்பு கொண்டு பெரியதம்பி எங்கிருந்து பேசுகிறான் என்பதை ஒரு சில விநாடிகளில் அறிந்துகொள்ள முடியும். பிறகு அவன் இருக்குமிடத்துக்கு வஞ்சிக்கொடியின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் வந்து, அவனைப் பிடித்துக்கொள்ளலாம்.

அல்லது கொன்றுவிடலாம்! அதுவும் காரில் போய்க் கொண்டே தொலைபேசிப் பெட்டிக்குள் நின்று பேசும் மனிதனைத் துப்பாக்கியால் சுடுவது மிக எளிது! இப்படிப் பட்ட காட்சிகளை அவன் நிறைய ஆங்கிலப் படங்களில் பார்த்திருக்கிறான். ஆகையால் அவன் வெளியே வந்துங் கூட ஏதாவது ஒரு கார் விரைவாக வந்து திரும்பியபோது விளக்குக் கம்பத்தின் மறைவில் பதுங்கினான் கார் சென்றதும் பெருமூச்சு விட்டபடி சாலை ஓரமாக நடந்தான்.

இப்போது அவன் சாந்தியின் பங்களாவைத் தேடிச் செல்லவில்லை. இருட்டும் வரையில் எங்கேயாவது பொழுதைக் கழிக்க எண்ணியபடி நடந்தான். நடந்து கொண்டே இருந்தான்.

## 22

மீண்டும் வானவில் ஓட்டலுக்குப் போகாமல் வேறு எங்கெல்லாமோ சுற்றிக்கொண்டிருந்தான் பெரியதம்பி. பகல்பொழுது அவன் வானவில் ஓட்டலில் தங்கியிருந்தால் எப்படியாவது அவனைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்று அவனுக்குத் தெரியும். வஞ்சிக்கொடியின் பிடியிலோ போலீஸார் பிடியிலோ மீண்டும் அவன் பிடிபட விரும்ப வில்லை. அவளை வஞ்சிக்கொடி பிடிப்பதற்குள் அவனாக ஒரு தடவை அவளைக் காண விரும்பினான். இந்த ஒரு தடவை—

அவனுக்கோ வஞ்சிக்கொடிக்கோ இறுதித் தடவையாக இருக்கலாம்! இருவரில் எவருக்கு வேண்டுமானாலும் ஆபத்துஏற்படலாம்!

இந்த எண்ணம் அவன் உள்ளத்தை அரித்துக் கொண் டிருந்தது. அவனுக்குத் தெரியாத பல உண்மைகள் வஞ்சிக் கொடிக்குத் தெரியும். அவைகள் என்ன என்பதை அவன் அறிந்துகொண்டால்தான் எப்படி அவன் இரண்டாவது

தடவை கார் விபத்தில் சிக்கினான் என்பது புரியும். ஆகை யால் அவன் வஞ்சிக்கொடியை அவள் சற்றும் எதிர்பாராத நேரத்தில் காண எண்ணினான்.

ஏதோ ஓர் ஓட்டலுக்குச் சென்று பகல் உணவை உண்டுவிட்டு கண்டபடி சுற்றிவிட்டு பெங்களூரின் புகழ் பெற்ற பூங்காவை அடைந்தான். பூங்காவில் பொழுது போவதே தெரியாது. பூமியில் உள்ள சொர்க்கம் அது என்று கேள்விப்பட்டிருக்கிறான். பூங்காவை அடைந்ததும், உண்மையிலேயே இது ஒரு சொர்க்கம்தான் என்று தோன் றியது. பூங்காவின் பூச்செடிகள் நிறைந்த பக்கத்தில், புல் தரையில் போய் உட்கார்ந்து வானத்தைப் பார்த்தபடி நடந்தவைகளையும், நடக்கப்போவதையும் எண்ணிப் பார்த்துக் கொண்டான். அவன் ஏதோ பல தவறுகளைத் தொடர்ந்து செய்வதைப் போலவும் அவைகளிலிருந்து அவன் தப்பவே முடியாதது போலவும் தோன்றியது. 'தலைக்கு மேல் போய்விட்டது! இனிமேல் தயங்குவதில் பயனில்லை. போலீஸுக்குப் போய் உண்மையைச் சொன் னாலும் நம்பமாட்டார்கள்! நாமாகத்தான்எல்லாவற்றிற்கும் சரியான விடையைக் கண்டுபிடித்துக்கொண்டு இறுதியில் போலீஸை அழைக்கவேண்டும்' என்று தன்னை அமைதிப் படுத்திக்கொண்டான்.

பெரியதம்பிக்கு கொடிய பழக்கங்கள் எதுவும் இல்லை. இருந்தாலும் அப்போது அவனுக்கு இருந்த மனநிலையில் சிகரெட்டை ஊதித் தள்ளினால் மனத்துக்குச் சற்று அமைதி வரும் என்று எண்ணி எழுந்து போய்ச் சிகரெட் பெட்டியை வாங்கிக்கொண்டு வந்தான். சிகரெட்ஒன்றைஎடுத்துவாயில் வைத்துக்கொண்டு தீப்பெட்டியை எடுத்தான். அதற்குள் அவன் பக்கத்தில் வந்த ஒருமனிதன் தீக்குச்சியைக் கிழித்து பெரியதம்பியின் சிகரெட்டைப் பற்ற வைத்தான்,

அந்த மனிதனை வியப்புடன் பார்த்த பெரியதம்பி "நன்றி" என்றான்.

"ஊருக்குப் புதியவரா?" என்றான் அந்த மனிதன்.

"ஆமாம்."

"பெங்களூரைச் சுற்றிக்காட்ட உங்களுக்குத் துணை வேண்டுமென்றால், நான் முன்னேற்பாட்டுடன் இருக்கிறேன்" என்றான் அந்த மனிதன்.

"தேவையில்லை."

"குற்றமில்லை. பணமுள்ளவர்கள் பெங்களூருக்குவந்து விட்டால், பணத்தைப் பறக்கடிக்கிறார்கள். அவர்களுக்கு என்னைப் போன்றவர்களின் உதவி தேவை. வாடகைக் காரைக் கூப்பிடக்கூட அவர்களுக்குக் குரல் வராது. என்னைப் போன்றவர்கள்தாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்றான் அந்த மனிதன்.

பெரியதம்பிக்கு அவனைக் கண்டதும் ஒரு புதிய எண்ணம் பிறந்தது. "எனக்கு ஒரு பொருள் வேண்டும். அதை உன்னால் வாங்கிவர முடியுமா?" என்று கேட்டான் அவன்.

"சொல்லுங்கள். பணம் கொடுத்தால் இன்று கிடைக்காத பொருள் உலகத்தில் இல்லை."

"பணத்தைப் பற்றித் துன்பம் இல்லை. உடனடியாக எனக்கு அந்தப் பொருள் தேவை."

"சொல்லுங்கள்."

"கைத்துப்பாக்கி ஒன்று எனக்கு வேண்டும். இரகசியமாக எனக்கு அதை வாங்கித்தரவேண்டும் முடியுமா?"

அந்த மனிதன் சிறிதுநேரம் பெரியதம்பியைப் பார்த்தான். பிறகு சொன்னான்: "என்னுடன் புறப்படுங்கள். ஒருமணி நேரத்தில் உங்கள் கையில் துப்பாக்கி இருக்கும். போதுமா?"

இருவரும் அந்த இடத்திலிருந்து புறப்பட்டார்கள்!

# 23

பெரியதம்பிக்கு ஒரு கைத்துப்பாக்கி தருவதாகச் சொல்லி அவனை எங்கேயோ அழைத்துச் சென்ற புது மனிதன் தன் பெயர் நாகப்பன் என்று அறிமுகம் செய்து கொண்டான். இருவரும் ஒரு வாடகைக்காரில் பெங்களூரின் வடக்கு எல்லைக்குச் சென்றார்கள். அங்கே தனிமையில் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய வீட்டின் முன் கார் நின்றது. இருவரும் இறங்கிச் சென்றார்கள்!

கார் காத்திருந்தது.

நாகப்பன், வீட்டின் கதவை மெல்லத் தட்டினான். சிறிது நேரத்தில் கதவு திறந்தது. இராணுவத்திலிருந்து விலகி ஓய்வு பெற்ற அதிகாரியைப்போல் சற்று மிடுக்காகக் காணப்பட்ட ஒரு மனிதர் இருவரையும் பார்த்தார். நாகப்பன் அவரிடம் சாடை காட்டியதும், உள்ளே வரும்படி அழைத்தார்.

அந்த வீட்டின் கூடத்தில் எங்குப் பார்த்தாலும் காட்டு மிருகங்களின் தலைகள் சுவரில் மாட்டப்பட்டிருந்தன. மான், கரடி, சிங்கம், புலி, யானை ஆகிய எல்லா மிருகங்களின் தலைகளையும் கொண்டு வந்து பஞ்சை அடைத்து அவைகளை வீடு முழுவதும் தொங்கவிட்டிருந்தார்.

அவைகளைப் பார்த்தவுடன் அந்த வீட்டுக்காரர் ஒரு பெரிய வேட்டைக்காரர் என்று உணர்ந்துகொண்டான் பெரியதம்பி. வியப்புடன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த மனிதர் கேட்டார்: “என்ன அப்படிப் பார்க்கிறாய்? இதற்கு முன் இந்த மிருகங்களை நீ பார்த்ததில்லையா?”

பெரியதம்பி சொன்னான்: “அதற்கில்லை! மனிதன் தலையைத் தவிர, மற்றத்தலைகள் எல்லாம் இங்கே இருக்கின்றன. எங்கேயாவது மனிதன் தலையும் இருக்கிறதா என்று பார்க்கிறேன்.”

இதைக் கேட்டு அந்த முரட்டு மனிதர் சிரித்தார். “இன்னும் மனிதன் தலையை நான் வைக்கவில்லை. வேறு ஒரு அறையில் பறவைகளின் தலைகளையும், மற்றொரு அறையில் பாம்புகளையும் வைத்திருக்கிறேன். இனிமேல் தான் மனிதர்களின் தலைகளைச் சேகரிக்க வேண்டும்! மனிதர்களின் தலையை வைப்பதென்றால், முதலில் உன் தலையைத்தான் வைப்பேன்.”

இதைக் கேட்டதும் பெரியதம்பி சிரித்தான். ஆனால் உள்ளூர அவனுக்குச் சற்று அச்சமாகத்தான் இருந்தது.

நாகப்பன் அப்போது குறுக்கிட்டுப் பேச்சை மாற்றினான். “இவர் ஒரு பெரும் பணக்காரர். அடிக்கடி பணத்துடன் வெளியூர்களுக்குப் போகும் பழக்கமுள்ளவர். இவருக்குப் பாதுகாப்புக்காக ஒரு கைத்துப்பாக்கி வேண்டுமாம். அதுவும் உடனே வேண்டுமாம். என்ன சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டான் அவன்.

முரட்டு மனிதர் சிரித்தார். “கைத்துப்பாக்கி மட்டும் போதுமா? அதை உபயோகிக்கத் தெரிந்துகொள்ள வேண்டாமா?” என்றார் அவர்.

“துப்பாக்கியும், அதற்குத் தேவையான குண்டுகளும் மட்டும் இருந்தால் மட்டும் போதும். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் பெரியதம்பி.

“லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருப்பது குற்றம் தெரியுமா?'' என்று கேட்டார் அந்த மனிதர்.

“தெரியும்” என்றான் பெரியதம்பி.

“நான் துப்பாக்கி தருகிறேன். இரகசியமாக அதை வைத்துக்கொள்ள வேண்டும். நான்தான் அதை விற்றேன் என்று எங்கேயாவது எவரிடமாவது சொல்லி வைத்தால் உன் தலையை இந்தக் கூடத்தில் மாட்டிவிடுவேன்'' என்று அச்சுறுத்தினார் அந்த மனிதர்! பிறகு கைத்துப்பாக்கி ஒன்றையும் அதற்கு ஏற்ற குண்டுகளையும் கொண்டுவந்து அவனிடம் கொடுத்துவிட்டு, மூவாயிரம் ரூபாயைப் பிடுங்கிக் கொண்டார்.

வாடகைக் காருக்கு வந்ததும், நாகப்பன் அவனிடம் ஐநூறு ரூபாயைப் பிடுங்கிக்கொண்டு வழியில் ஓர் இடத்தில் இறங்கிக்கொண்டான்.

சற்றுத் தொலையில் ஏதோ எண்ணிக் கொண்டவனைப்போல் சாலையின் ஓரமாகக் காரை நிறுத்தும்படி சொல்லிவிட்டு பெரியதம்பியும் இறங்கிவிட்டான்.

பெரியதம்பியின் கையில் துப்பாக்கி வந்ததும் அவனுக்கு அளவுக்கு மீறிய துணிவும், இனி யாரும் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையும் ஏற்பட்டன!

## 24

பெருத்த ஓசையுடன் வாடகைக் கார் விரைந்து சென்று மறையும் வரையில் சாலையில் நின்று பார்த்தான் பெரிய தம்பி. பிறகு அவன் சாலையைவிட்டு இறங்கித் தொலைவில் தெரிந்த மலைகளை நோக்கிச் சென்றான்.

அவன் சென்ற திக்கில் வீடுகளோ குடிசைகளோ இல்லை. மலைகளுக்கு மத்தியில் எங்கேயாவது ஓர் இடத்தில் நின்று துப்பாக்கியைச் சுட்டுப் பழகிக் கொள்ளலாம் என்று எண்ணியது அவன் மனம். அடிக்கடி அவன் மனம் வஞ்சிக்கொடியை விரைவில் காணப் போகிறோம், அவளிடமிருந்து உண்மைகளை வரவழைக்கப் போகிறோம் என்று எண்ணியது.

இரு மலைகளுக்கு மத்தியில் இருந்த ஒரு பள்ளத் தாக்கை அடைந்தான் அவன். அங்கே பாறைகளும், செடிகளும் கொடிகளும் நிறைந்திருந்தன. வாய்ப்பான ஒரு பாறையின் மீது நின்றுகொண்டு. துப்பாக்கியில் குண்டுகளை நிரப்பினான். துப்பாக்கியை நிரப்பும்போதே அவன் கைகள் லேசாக நடுங்கின.

சிலரிடம் திடீரென்று சில பணக்கட்டுகளைக் கொடுத்து அவைகளை எண்ணும்படி சொன்னால், பணத்தைத் தொட்டும் பழக்கமில்லாத அவர்களுக்குக் கைகள் நடுங்கும்; பணத்தை எண்ண வராது. இவ்வளவு பணம் நம் கையில் திடீரென்று வந்துவிட்டதே என்று வியப்பினாலோ அல்லது பணம் ஆபத்தானது என்பதனாலோ அந்நடுக்கம் என்பது தெரியவில்லை. அதைப்போலப் பாதுகாப்புக்காக வஞ்சிக்

கொடியை மிரட்டி உண்மையை வரவழைக்க உதவும் கருவி என்று பெரியதம்பி வாங்கிய துப்பாக்கியை அவன் உபயோகிக்கத் தொடங்கியதும் அவன் கைகள் நடுங்கின!

அவன் துப்பாக்கியை நீட்டிப் பிடித்து தொலைவிலிருந்த ஒரு செங்குத்தான பாறையைக் குறி பார்த்துச் சுட்டான். துப்பாக்கி வெடித்ததும், அது பின்னுக்கு வாங்கி அவன் கையிலிருந்து தவறி விழுந்தது. துப்பாக்கியைச் சுடும்போது அதன் அதிர்ச்சியை தாங்கிக்கொண்டு இறுக்கமாகப் பிடித்துக்கொள்ள முதலில் அவன் பழகிக்கொண்டான். அவன் குறிபார்த்த இடத்துக்கும் குண்டுகள் பாய்ந்த இடத்துக்கும் எவ்வளவோ தொலைவு இருந்தது! பல நாட்கள் இப்படிப் பயிற்சி பெற்றால்தான் குறி தவறாமல் சுடமுடியும் என்பதை உணர்ந்து கொண்ட அவன், ஒரு மணி நேரம் தன்னைப் பழக்கிக் கொண்டான். முதலில் இருந்த அச்சமும் நடுக்கமும் இப்போது இல்லை. அவன் வஞ்சிக்கொடியை மிக விரைவில், கண்டு பேசுவது என்ற முடிவுடன் நடந்தான்.

கால்சட்டைப் பையிலிருந்த துப்பாக்கி சற்றுக் கனமாக இருந்தது. அவன் மனம் எண்ணியது: வஞ்சிக்கொடியை நாம் சுடப்போவதில்லை. அவளை அச்சுறுத்துவதற்குத் தான் துப்பாக்கியுடன் போகிறோம்! எதிர்பாராமல் ஏதாவது நடந்தால், அதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்! ஏமாந்து விடக்கூடாது!"

சாலையை அடைந்ததும் அவன் மெல்ல நடந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு பஸ் வந்தது. பஸ்ஸில் ஏறி அவன் வானவில் ஓட்டலுக்குச் சென்றான்.

அவன் இப்போது சற்றுக் களைப்புடன் இருந்ததால் ஓட்டலில் குளித்துவிட்டு, வேறு உடைகளை அணிந்து

கொண்டு வஞ்சிக்கொடியைப் பார்க்கப் புறப்பட எண்ணினான்.

ஓட்டலுக்குச் சென்றபோது, விளக்கு வைக்கும் நேரம். இருட்டிக் கொண்டு வந்தது. விளக்கு வைத்ததும் குளிரத் தொடங்கியது. பெங்களூர் அவனுக்குக் குளிராகத்தான் இருந்தது!

பெரியதம்பி தன் அறையை அடைந்ததும், கதவை எவரோ தட்டும் ஓசை கேட்டது. அவன் உடனே துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்தபடி, நீண்டநாள் உயிரும் உடலும்போல் துப்பாக்கியும் அவனும் பழகியவனைப்போல் கற்பனை செய்துகொண்டு, "யாரது?" என்றான்.

"ஓட்டல் பையன் ஐயா'' என்றான் ஓட்டல் பையன்.

பெரியதம்பி சிரித்துக்கொண்டே கதவைத் திறந்தான்.

அவன் உள்ளே வந்து, மெல்லிய குரலில் "உங்களை எவரோ இரண்டு பேர்கள் தேடிவந்தார்கள் நீங்கள் எவரையாவது எதிர்பார்த்துக் கொண்டிருந்தீர்களா?'' என்றான்.

பெரியதம்பியின் முகம் இதைக் கேட்டதும் மாறிவிட்டது. வஞ்சிக்கொடியின் கரம் மிகவும் நீண்ட கரம். அவன் எங்கு சென்றாலும் அவள் விடமாட்டாள். தனது கரம் போன்ற கொடியவர்களை ஏவி அவனைப் பிடித்துவிடுவாள் என்று எண்ணியபடி "அந்த இரண்டு பேர்களும் என்ன வேண்டும் என்கிறார்கள்?'' என்று கேட்டான்.

ஓட்டல் பையன் சொன்னான்: "அந்த இருவரும் முதலில் ஓட்டலில் தங்கியிருந்தவர்களின் பெயர்களைப் பார்த்தார்கள். பிறகு உங்கள் அறையைத் திறக்க முயன்

றார்கள். தற்செயலாக நான் மீண்டும் அவர்களைப் பார்த்ததும் 'என்ன வேண்டும்?' என்றேன். மலரவன் அவர்கள் நண்பர் என்றும், மலரவனைப் பார்க்க வந்திருப்பதாகவும் கூறினார்கள். நீங்கள் வெளியே போயிருப்பதாகவும் அறை பூட்டிக் கிடப்பதாகவும் சொல்லி அனுப்பிவிட்டேன்!"

"உடனே போய்விட்டார்களா?" என்று கேட்டான் பெரியதம்பி.

"அதுதான் இல்லை. அவர்கள் தேடி வந்த மலரவன் நீங்கள்தானா என்று உணர்ந்துகொள்ள, நீங்கள் எப்படியிருப்பீர் என்று கேட்டார்கள். உங்கள் உருவத்தைச் சொன்னதும் அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது! உங்களுக்கு மீசை இருப்பதைச் சொன்னதும் முதலில் அவர்களுக்கு ஐயமும் தயக்கமும் ஏற்பட்டது! பிறகு, அவர்கள் சமாளித்துக் கொண்டு, அவர்கள் தேடிவந்தது உங்களைத்தான் என்றார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் ஓட்டலில் கூடத்தில் உட்கார்ந்துவிட்டான். மற்றொருவன் எங்கே சென்றான் என்று தெரியவில்லை! நீங்கள் பார்க்கவில்லையா?" என்றான் ஓட்டல் பையன்.

"நான் ஒருவரையும் பார்க்கவில்லை. இன்னும் அந்த மனிதன் இருக்கிறானா என்று பார்த்துவா. ஆனால், அவனிடம் நான் வந்திருப்பதாக மட்டும் சொல்லிவிடாதே!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? அவர்கள் உங்கள் நண்பர்கள் இல்லையா?"

"எனக்கு நண்பர்களே இல்லை. அவர்கள் யாரென்று கண்டுபிடிக்க வேண்டும்!"

"எனக்கு அப்போதே ஐயம் ஏற்பட்டது. அவர்களைப் பார்த்தால் மிக்க கொடியவர்களைப்போல் இருந்தார்கள்.

இந்தப் பக்கம் நான் வராமல் இருந்திருந்தால், உங்கள் அறைக் கதவைத் திறந்து உள்ளே புகுந்துவிட்டிருப்பார்கள்!" என்றான் ஓட்டல் பையன்.

"விரைந்துசென்று பார்த்துவிட்டு வா. இப்போது இருவரும் இருக்கிறார்களா, ஒருவன் மட்டும் இருக்கிறானா என்று பார்த்து வா! காற்றைப்போல் நீ போய்விட்டு வர வேண்டும்!"

ஓட்டல் பையன் ஓடினான். இரண்டு நிமிடங்கள் கழித்து அவன் மூச்சு வாங்க வியர்க்க விறு விறுக்க ஓடி வந்தான்.

## 25

ஓட்டல் பையனைக் கண்டதும், பெரியதம்பியால் ஒன்றும் ஊகிக்க முடியவில்லை.

"என்ன நடந்தது? அவர்கள் இருக்கிறார்களா?"என்று கேட்டான் பெரியதம்பி.

"இருவரையும் காணவில்லை! அவர்கள் எங்கே எப்படி வெளியே போனார்கள் என்று தெரியவில்லை! இருவரும் வெளியே போய்விட்டார்களா, ஓட்டலிலேயே வேறு எங்கேயாவது ஒளிந்திருக்கிறார்களா என்று புரியவில்லை!" என்றான் ஓட்டல் பையன்.

"துன்பம் கொள்ளவேண்டாம். மீண்டும் அவர்களைக் கண்டால் உடனே ஓடிவந்து என்னிடம் சொல்லு'' என்றான் பெரியதம்பி.

"ஆகட்டும் ஐயா'' என்று சொல்லிவிட்டு ஓட்டல் பையன் போய்விட்டான்.

பெரியதம்பி எந்த நிமிஷமும் எதுவும் நடக்கலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆகையால் அவன் கவனம் முழுவதும் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளில் பதிந்திருந்தது. அந்த இரு கொடியவர்களும் எப்படியும் வந்து அவனைக் கடத்திச் சென்றுவிடுவார்கள். அவனைக் கொண்டுபோய் வஞ்சிக்கொடியின் முன் அவர்கள் நிறுத்துவார்கள். வஞ்சிக்கொடி அவனிடம் பணம் இருக்கும் இடத்தைக் கேட்பாள். இந்தத் தடவை அவள் மருத்துவ விடுதியில் மிக அன்பாக நடந்துகொண்ட மாதிரி அவனிடம் நடந்துகொள்ளமாட்டாள். சரியான பதிலைஅவன்சொல்லாவிட்டால், அவனைப் பேசவைக்க அந்த இரு கொடியவர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு கேள்வி கேட்பாள். அவள் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். இல்லாவிட்டால்,—

முடிவைப்பற்றி அவனால் கற்பனை செய்துபார்க்க முடியவில்லை!

அவன் கண்டெடுத்த பெட்டியில் இருந்த பணத்தை மீண்டும் கற்பனை செய்து மனக்கண் முன் பார்த்தான். அதில் இருந்த பணம் எவ்வளவு இருக்கும்? ஐம்பது இலட்சம் ரூபாயாவது இருக்கும் என்று எண்ணியது அவன் மனம்! ஐம்பது இலட்சம் என்பது எவ்வளவு பெரிய தொகை! பெரியதம்பியைப் போன்றவர்கள் வாழ்க்கையில் சம்பாதிக்க முடியாத தொகை! அவ்வளவு பெரிய தொகையுள்ள பணப்பெட்டியை அவன் திரும்பக் கொடுத்தால் என்ன ஆகும்? வஞ்சிக்கொடி அவன் பணப்பெட்டியைக் கொண்டுவந்து வைத்ததும் கேலியாகச் சிரித்துவிட்டு, அடுத்த நிமிஷமே அவனை ஒழித்துக்கட்ட உத்தரவு போடுவாள்! அல்லது அவள் கைப்பையிலிருந்து துப்பாக்கியை எடுத்து அவளே அவனைச் சுட்டுக்கொன்று விடுவாள்.

இப்படிப் பெரியதம்பியினுடைய மனம் எண்ணியது. என்ன ஆனாலும் சரி, பணப்பெட்டியை மட்டும் விடுவதில்லை. அதைப்பற்றிய உண்மையை மட்டும் சொல்லுவதில்லை என்று மனத்தில் உறுதிகொண்டான் பெரியதம்பி. ஆனால், அந்தப் பணம் முழுவதும் எவருடையது அது எப்படி அவன் கையில் வந்தது முதல் விபத்துக்குப் பின் என்ன நடந்தது. மீண்டும் அவனும் சாந்தியும் எப்படி விபத்தில் சிக்கினார்கள் என்று அறிந்துகொள்ளத் துடித்தான். இதற்காக அவன் வஞ்சிக்கொடியைக்காண விரைவு கொண்டான். அவனாகப் போய்ப் பார்ப்பதைவிட, அவன் அனுப்பிய ஆட்கள் துணையுடனே போய் அவளிடம் பேச அவன் துணிவுகொண்டான்.

பெரியதம்பியின் கண்கள் அடிக்கடி கதவையே பார்த்துக் கொண்டிருந்தன. அவன் கதவை உள்பக்கம் தாழிட்டிருந்தான். அவன் தன் கால்சட்டைப்பையிலிருந்த துப்பாக்கியை எடுத்து, அவன் வலக்காலில் அணிந்திருந்த கால் உறையின் இடுக்கில் செருகிக்கொண்டான். எதிரிகள் கண்டுபிடிக்க முடியாத இடம் அதுதான் என்று தோன்றியது அவனுக்கு.

இந்த நேரத்தில் கதவின் பிடி சுழலுவது தெரிந்தது. கதவு திறக்கவில்லை. வெளியே எவரோ வந்து கதவைத் திறக்கப் பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டதும் நிமிர்ந்து நின்றான்.

ஒரு சில வினாடிகளில் கதவைத் தட்டும் ஓசை கேட்டது அவன் அமைதியுடன் நடந்து சென்று கதவைத் திறந்தான். மறுகணம்—

உள்ளே இரண்டு உருவங்கள் நுழைந்தன! மின்னலை விட விரைவாக நுழைந்த அந்த இரு முரட்டு மனிதர்களும்

கதவைச் சாத்திவிட்டு கைகளில் துப்பாக்கியுடன் பெரிய தம்பியைப் பார்த்தார்கள்!

பெரியதம்பி தான் உதவி இல்லாமல் இருப்பதைக் குறிக்க இரு கைகளையும் தூக்கியபடி நின்றான்.

அந்த இருவரில் ஒருவன் பேசினான்: "பெரியதம்பி உன் நாடகம் முடிந்துவிட்டது. புறப்படு. எங்கள் கார் வெளியில் நிற்கிறது. வழியில் ஏதாவது தொல்லை கொடுத்தால் உன்னை உடனே சுட்டுவிடும்படி எங்களுக்குக் கட்டளை!''

பெரியதம்பி அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தான். இருவருமே அவனுக்குப் புதிய மனிதர்கள். "யாருடைய கட்டளை?" என்று கேட்டான் அவன்.

"கேள்விகளுக்குப் பதில் சொல்லும் வழக்கம் எங்களுக்கு இல்லை. புறப்படு நீ முன்னால் நட நான் பின்னால் வருகிறேன். வெளியே பச்சை நிற பியட்கார் நிற்கிறது. அதில் ஏறி உட்கார். தெரிகிறதா?" என்றான் முதலில் பேசியவன்!

பெரியதம்பி விரைப்புடன் வெளியே புறப்பட்டான். அவன் வெளியே வந்ததும், மற்றொருவன் உள்ளேயே தங்கிவிட்டான். ஒருவன் மட்டும் அவன் பின்னால் நடந்து வந்தான்.

''என் அறையைப் பூட்ட வேண்டும்" என்றான் பெரிய தம்பி.

''உன் அறையை என் நண்பன் பாதுகாப்புடன் பார்த்துக் கொள்வான். நீ நடந்துகொண்டே இரு!" என்றான் பெரியதம்பியின் பின்னால் வந்தவன்.

மற்றொரு மனிதன் ஏன் அங்கே தங்கிவிட்டான் என்று பெரியதம்பிக்குத் தெரியும். பணப் பெட்டியையோ பணப் பெட்டி இருக்கும் இடத்தையோ கண்டுபிடிக்கவே பெரிய தம்பியின் அறையில் அந்த மனிதன் நின்றுவிட்டிருக்கிறான் என்று உணர்ந்து கொண்டான் அவன். ஆனால், அதைப் பற்றி அவன் துன்பம் கொள்ளவில்லை.

பெரியதம்பி ஓட்டலைவிட்டு வெளியே நடந்தான். அவன் பின்னால் கொடியவர்களில் ஒருவன் கால் சட்டைப் பையில் கையை விட்டபடி நடந்தான். பெரியதம்பி என்ன தவறு செய்தாலும் அந்த மனிதன் கால் சட்டைப்பையி லிருந்தே துப்பாக்கியால் சுடுவான் என்று அவனுக்குத் தெரியும்.

பச்சைநிற பியட்காரில் காரோட்டி ஒருவன் உட் கார்ந்து அவர்கள் வருகைக்காகக் காத்திருந்தான். பெரிய தம்பி காரில் பின் சீட்டில் ஏறி உட்கார்ந்ததும் அவன் பக் கத்தில் கையில் துப்பாக்கியுடன் அந்தக் கொடியவன் உட் கார்ந்தான். கார் புறப்பட்டு போக்குவரத்து மிகுதியாக இல்லாத சாலைகளில் பறந்தது.

இறுதியில் அது மிக அழகிய பங்களா ஒன்றின் முன் நின்றது. அந்தப் பங்களாதான் சாந்தி வாழ்ந்து வந்த பங்க ளாவாக இருக்கும் என்று ஊகம் செய்துகொண்டான் அவன்.

''இறங்கு'' என்றான் அந்த மனிதன்.

பெரியதம்பி இறங்கி. திரும்பிப் பார்க்காமல் பங்களா வுக்குள் நுழைந்தான். கதவு அவன் வரும்போது தானா கவே திறந்துகொண்டது. கூடத்தை அடைந்ததும் எதிரே நின்ற வஞ்சிக்கொடியைப் பார்த்தான். ஆடம்பரம் மிக்க

அந்தப் பங்களாவில் அழகே உருவாக அவள் தனியாக நின்றாள். அவள் அழகாக இருந்த போதிலும் அவள் பார்வை அவனுக்கு அச்சத்தை விளைவித்தது.

"வந்துவிட்டீர்களா? நீங்கள் மீண்டும் இங்கிருந்து தப்ப முடியாது!" என்றாள் அவள் சிரித்துக்கொண்டே!

அவளைக்கண்டு அவளிடம் பேசி ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்டு, மிரட்டி உண்மைகள் பலவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று எண்ணிய அவனுக்கு வாய்விட்டுக் கத்தவேண்டும் போலிருந்தது! அவன் வாய்விட்டு அலறிவிட்டு அப்படியே சுருண்டு விழுந்தான்.

மறுவிநாடி அவன் மண்டையிலிருந்து நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறுவதைப் போல் இருந்தது? அச்சம் தரும் ஓசை ஏதோ கேட்டது. அந்த ஓசை—

கார் உருண்டுவிழும் ஓசை!

அதே நேரத்தில் ஒரு பெண் அலறும் ஓசை கேட்டது. அலறியது வஞ்சிக்கொடியல்ல! அவனுக்குக் கேட்டது சாந்தியின் குரல்தான்!

முதன் முதலில் சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே விபத்து நடந்தபோது, சாந்தி போட்ட அலறல் தான் அது.

பெரியதம்பிக்கு கனவைப்போல், கடந்துபோன நிகழ்ச்சிகள்—அவன் மறந்திருந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன! முதல் விபத்துக்கும் இரண்டாவதாக நடந்த விபத்துக்கும் இடையில் என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெளிவாக நினைவுக்கு வருவதைப்போல் மனத்திரையில் தோறின்ன!

# 26

விபத்து நடந்த அன்று பெரியதம்பியும் சாந்தியும் பெங்களூருக்கு வந்துகொண்டிருந்தபோது கார் உருண்டு விழுந்தது அவன் நினைவுக்கு வந்தது.

காரிலிருந்து தூக்கி எறியப்பட்ட அவன் சிறிது நேரம் மயக்கத்துடன் இருந்தான். ஒரு சில விநாடிகள்தாம்! அவனுக்குச் சாந்தியின் அலறலைக் கேட்டதும் நினைவு திரும்பி விட்டது. அவளுக்கு என்ன நேர்ந்துவிட்டதோ என்னமோ என்று மெல்ல எழுந்து "சாந்தி சாந்தி" என்றான்.

இருளில் அவள் நிற்கும் இடத்தைக் கண்டுபிடிக்கச் சிறிது நேரம் பிடித்தது கீழே உட்கார்ந்திருந்த அவள் மெல்ல தலையைத்தூக்கி "உங்களுக்கு ஒன்றுமில்லையே?" என்றாள்.

"ஒன்றுமில்லை. தலையில்தான் சற்று அடி! உனக்கு?" என்றான் பெரியதம்பி.

"எனக்கு அச்சமாக இருக்கிறது. உடலில் எங்கே அடிபட்டது என்றே தெரியவில்லை!" என்று சொல்லி எழுந்தாள் அவள்!

அவள் பக்கத்தில் போகக் காலடி எடுத்து வைத்த பெரியதம்பி. தடுமாறி விழப்போனான். அவனுக்கு அரை மயக்கமாக இருந்தது. சாந்தி ஓடிவந்து அவனைத் தாங்கிக் கொண்டாள்!

"என்னுடன் மெல்ல நடக்க முடியுமா?'' என்றாள் சாந்தி.

"முடியும். என்னை வந்து தாங்கிக்கொள்'' என்று அவள் தோளைப் பிடித்தபடி நடந்தான் பெரியதம்பி.

அதன்பின் சாந்தி சாலைக்குச் சென்று ஒரு காரை நிறுத்தி, அதில் அவனை ஏற்றிச் செல்லாமல், ஏரிக்கரை ஓரமாக இருந்த குடிசையின் பக்கம் அழைத்துச் சென்றது அவன் நினைவுக்கு வந்தது.

அவர்கள் இருவரும் குடிசைக்குச் சென்றுவிட்டு மீண்டும் சாலைக்கே போய்விடலாம் என்று திரும்பிய போதுதான் அவர்கள் எதிரே ஒரு கார் வந்தது. சாந்தி அவனை அந்தக் காரில் ஏற்றி உட்கார வைத்துவிட்டு, அவளும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். மற்றொரு பக்கம், வேறு எவனோ உட்கார்ந்திருந்தான். காரின் முன் இரண்டு பேர்கள் இருந்தார்கள்.

பெரியதம்பியையும் சாந்தியையும் அந்தக் காரில் இருப்பவர்கள் தேடி வந்ததை எண்ணி வியப்படைந்திருந்தான் பெரியதம்பி. கார் விபத்துக்குள்ளாகி இருப்பதைப் பார்த்துவிட்டு, காரில் இருந்தவர்கள் என்ன ஆனார்கள் என்று அவர்கள் தேடி வந்திருக்க வேண்டும் என்று ஊகம் செய்த பெரியதம்பி காரில் இருந்தவர்களை இருளில் உற்றுக் கவனித்தான்.

காரோட்டிக்குப் பக்கத்தில் இருந்த மனிதனையும், பக்கத்தில் இருந்த மனிதனையும் உற்றுப் பார்த்ததும், அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

பிறகு காரை ஓட்டியவனைப் பார்த்தான். அவன் உடல் நடுங்கியது

அந்தக் காரில் வந்த மூன்று பேர்களில், காரை ஓட்டி வந்தவன் செல்லையா. அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மனிதர்!

நில்வளநம்பி!

கொழும்பு தமிழ்ச் சங்கம்

பக்கத்தில் உட்கார்ந்திழிந்தவன்

முத்தையா!

குத்துச் சண்டையில் வல்லவனைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு, எந்த நிலவளநம்பிக்கு அஞ்சி அவன் சாந்தியுடன் ஓடிவந்தானோ, அதே நிலவளநம்பியின் காலில் அவன் மீண்டும் சிக்கிக்கொண்டது நினைவுவந்தது!

நிலவளநம்பியின் கூட்டத்தைச் சேர்ந்தசெல்லையாவும் முத்தையாவும் தங்களது தலைவருடன் புறப்பட்டு வந்து அவனைப் பார்த்துவிட்டதை உணர்ந்து கொண்டான்!

அந்த விபத்தில் ஏன் இறக்காமல் தப்பினோம் என்று அவன் எண்ணியதும் அப்போது அவனுக்கு நினைவு வந்தது.

அவன் மெல்லச் சாந்தியைக் கிள்ளினான்! சாந்தியும் உண்மையை அப்போது உணர்ந்து கொண்டிருந்தாள்.

## 27

முதல் விபத்துக்கும் இரண்டாவது விபத்துக்கும் இடையில் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளும் பெரியதம்பியினுடைய நினைவுக்கு வந்தன.

பெரியதம்பியும் சாந்தியும் யாரிடமிருந்து தப்ப வேண்டும் என்று ஓடினார்களோ, அதே கொடியவர்களிடம் இப்போது வகையாகச் சிக்கிக் கொண்டார்கள்! நிலவள நம்பி வெற்றியுடன் நிமிர்ந்து உட்கார்ந்து அவர்களைப் பார்த்தார். அவருடைய கட்டளையை எதிர்பார்த்து என்ன வேண்டுமானாலும் செய்ய மிக முன்னேற்பாட்டுடன் இருந்தார்கள் செல்லையாவும் முத்தையாவும்.

நிலவளநம்பிதான் முதலில் பேசினார்: "நீங்கள் எங்களை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டதாக எண்ணி விட்டீர்கள். இயற்கையே இப்போது எனக்கு உதவி செய்திருக்கிறது இனிமேல் உங்களால் என் பிடியிலிருந்து தப்பமுடியாது! குத்துச்சண்டை போட்டியில் பணத்தை இழந்தாலும் மற்றவைகள் எல்லாம் என் திட்டப்படியே நடந்து வந்திருக்கின்றன!''

பெரியதம்பிக்கு இவர் எதற்காக இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கிறார் என்பது புரியவில்லை.

பெரியதம்பி சொன்னான்: "உங்கள் திட்டம் எதுவானாலும் சரி. அது வெற்றியுடன் நிறைவேறியதில் மிக்க மகிழ்ச்சி. இப்போது இந்தச் சாந்தியை வழியில் எங்கேயாவது இறக்கிவிட்டு விடுங்கள். நம்முடைய கணக்கை நாம் தீர்த்துக் கொள்ளலாம். சாந்திக்கும் நமக்கும் ஒன்றும் தொடர்பு இல்லையே!"

இதைக் கேட்டதும் நிலவளநம்பி வாய்விட்டுச் சிரித்தார். "நம் கணக்கைத் தீர்த்துக்கொள்வதில் சாந்திக்குப் பங்கு இல்லை என்று யார் சொன்னது? அவள்தானே உன்னைக் காப்பாற்றினாள்? அவள் உனக்கு ஊக்கம் காட்டியதால்தானே நீ குத்துச்சண்டையில் தோல்வி பெறுவதற்குப் பதில் வெற்றி கண்டாய்?'' என்றார் அவர்!

"இதோ பாருங்கள் நிலவளநம்பி, சாந்தி அங்கே வராமல் இருந்திருந்தாலும் இந்தக் குத்துச் சண்டையில் நான் வெற்றி பெற்றிருப்பேன். நான் வெற்றிபெற்று உங்களைக் கவிழ்த்துவிடுவது என்று முதலிலேயே முடிவு செய்துவிட்டேன்! ஏன் தெரியுமா?" என்றான் பெரியதம்பி வெறி கொண்டவனைப் போல்!

"சொல்லு, கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார் நிலவளநம்பி.

"புலிக்குட்டியை நீங்கள் கொன்றுவிட்டதுடன், அவனுக்குப் பதில் என்னைக் குத்துச்சண்டை போடும்படி அழைத்து வந்து கட்டளையிட்டதும், நான் இறப்பதுஉறுதி என்று முடிவு செய்துவிட்டேன்! குத்துச்சண்டைக்குப் பின் என்னைக் கொன்றுவிட்டு, விபத்து ஒன்றில் நான் இறந்து விட்டதைப்போல் காட்டிவிட்டு, புலிக்குட்டி இறந்துவிட் டான் என்று விளம்பரப்படுத்திவிட முடிவுகட்டி விட்டீர்கள்! உண்மையான புலிக்குட்டியின் பிணத்தை உங்கள்தோட்டத் திலேயே புதைத்துவிட்டிருப்பீர்கள். ஏனென்றால். ஒரு மனிதன் எப்போது இறந்தான் என்பதுபிணப் பரிசோதனை யில் வெளியாகிவிடும். ஆகையால் நீங்கள் புலிக்குட்டியின் பிணத்தை வெளியே விடமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்!'' என்றான் பெரியதம்பி.

நிலவளநம்பி கேலியுடன் சிரித்தார். "உன் கணக்கு இப்போதும் தவறாகிவிட்டது. புலிக்குட்டியின் பிணத்தை நான் என் காரில் கொண்டு வந்தேன். வழியில் எங்கேயா வது ஒரு விபத்தை உண்டாக்கி, புலிக்குட்டி விபத்தில் இறந்துவிட்டதைப்போல் போலீஸாருக்குக் காட்டிவிட நினைத்தேன். பெங்களூருக்கு வருவதற்குள் வழியில் உங்கள் காரே விழுந்து கிடந்தது வாய்ப்பாகப் போய் விட்டது. விழுந்து கிடந்தது சாந்தியின் கார்தான் என்று செல்லையாவும் முத்தையாவும் கூறினார்கள். மேலும் அது தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது வாய்ப்பாகிவிட்டது! புலிக்குட்டியின் பிணத்தைக் காருக்குள் போட்டுவிட்டோம்! புலிக்குட்டியின் பிணம் தீயில் வெந்துவிட்டால், உண்மை யில் அவன் இறந்த நேரத்தைப்பிணச்சோதனையில் கண்டு பிடிக்க முடியாது!" என்றார் அவர்.

இதைக் கேட்டதும் பெரியதம்பிக்குச் சற்றுத் தூக்கி வாரிப்போட்டது! சாந்திக்கு என்ன பேசுவது என்றே புரிய வில்லை!

சிறிது நேரம் கழித்து, "இப்போது எங்கள் இருவரை யும் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான் பெரியதம்பி.

"உங்கள் இருவரையும் இன்னும் பெரிய ஆபத்தில் என்னால் சிக்கவைக்க முடியும்! எப்படி என்று சொல்லட் டுமா?'' என்றார் நிலவளநம்பி.

எவரும் பேசவில்லை.

நிலவளநம்பி சொன்னார்: "இதோபார் பெரியதம்பி இன்று நீ குத்துச் சண்டை செய்து கொன்றுவிட்டாயே, அந்த வல்லவன் உன்னுடைய குத்தினால் மட்டும் இறக்க வில்லை. உன் கையுறையில் இருந்த நஞ்சு ஊசியிலிருந்து அவன் உடலில் நஞ்சு பாய்ந்து இறந்திருக்கிறான்! பிணச் சோதனையில் டாக்டர்கள் இதைக்கண்டு பிடித்திருக்கிறார் கள்! மூன்லைட் ஓட்டலில் நீதான் புலிக்குட்டி என்று எண்ணி ஒரு மனிதன் வந்து கையுறைகள் அடங்கிய பெட்டி யைக் கொடுத்தான் அல்லவா? அவன் கையுறையில் நஞ்சு ஊசியை வைத்துத்தான் கொடுத்திருக்கிறான். புலிக் குட்டியே வல்லவனை எப்படியாவது குத்துச்சண்டையில் கொன்றுவிட வேண்டும் என்று முடிவு கட்டிவிட்டிருக்கி றான்! ஆனால் அந்தக் கையுறைகளைநான் பரிசோதித்துப் பார்த்தபோது அவைகளில் நஞ்சு ஊறிய ஊசி இருப்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்போது அந்த ஊசியை வைத்தே உன்னைக் கொலையாளியாக என்னால் மாற்றி விட முடியும்!''

''எப்படி?'' என்றாள் சாந்தி வாயைத் திறந்து. அவளால் இப்போது சும்மா உட்கார்ந்திருக்க முடிய வில்லை!

நிலவளநம்பி சொன்னார்: "நல்ல கேள்வி கேட்டாய். இதில் உனக்கும் தொடர்பு இருக்கிறது. கேட்டுக்கொள். உண்மையான புலிக்குட்டியைப் பெரியதம்பி கொன்றுவிட்டு அவனுக்குப் பதில் பெரியதம்பியே புலிக்குட்டி என்னும் பெயருடன் வந்து குத்துச்சண்டை போட்டு நஞ்சு ஊறிய ஊசியால் வல்லவனைக் கொன்றுவிட்டான்! வல்லவன் தோற்க வேண்டும் புலிக்குட்டி வெற்றி பெறவேண்டும் என்று பிரபல சினிமா நடிகை சாந்தியும் பெரியதம்பியும் சேர்ந்து திட்டமிட்டு இந்தச் சதியைச் செய்தார்கள்! சாந்தி குத்துச் சண்டையின்போது பெரும்பணம் கட்டி எதிர்பாராத விதமாக ஏகப்பட்ட பணத்தை வெற்றி பெற்றுச் சேர்த்துக் கொண்டு, பெரியதம்பியுடன் காரில் விரைந்து சென்று விட்டாள். போகும்போது வழியில் கார் விபத்தை உண்டாக்கி, புலிக்குட்டி விபத்தில் இறந்ததைப்போல் காரில் போட்டுவிட்டுப் போய்விட்டாள்! இப்படி ஒரு கதை இந்தக் கதையை நான் சொன்னால் போலீஸார் நம்பு வார்கள். புலிக்குட்டியைப் போல் இருக்கும் பெரியதம்பி யையும் சாந்தியையும் போலீஸில் என்னால் பிடித்துக் கொடுக்க முடியும்!"

இப்படிக் கூறிவிட்டு நிலவளநம்பி சிரித்தார். அந்தச் சிரிப்பு அச்சம் தருவதாக இருந்தது. அவர் ஏதோ இன்னும் மிகப் பெரிய திட்டத்துடன் இருப்பதை அது உணர்த் தியது.

சாந்தி ஏதோ சிந்தனை செய்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்தவளைப் போல், "எங்களைப் போலீஸில் பிடித்துக் கொடுப்பதால் உங்களுக்குப் பயன் என்ன இருக்கிறது?" என்று கேட்டாள்.

நிலவளநம்பி அவளையே பார்த்துக் கொண்டிருந் தார். அவள் மேலும் பேசுவாள் என்று அவர் எதிர்பார்த்த தைப்போலிருந்தது.

சாந்தி சொன்னாள்: "எங்களிடம் உள்ள பணத்தை உங்களுக்குக் கொடுத்துவிடுகிறோம். எங்களை விட்டு விடுங்கள் நீங்கள் இழந்த பணத்தில் ஒருபகுதியாவதுஉங்களுக்குத் திரும்பக் கிடைக்கும் அல்லவா?"

நிலவளநம்பி நிமிர்ந்து உட்கார்ந்தார் "எவ்வளவு பணம்?'' என்றார் அவர்.

''குத்துச் சண்டையில் நான் வெற்றி பெற்ற பணம்'' என்றாள் சாந்தி.

அந்தப் பணத்தை அவள் தன் கைப்பையில் வைத்து, அதை அவள் தன் தோளில் மாட்டியிருந்தாள்.

நிலவளநம்பி சிரித்தார். "நான் என் சொத்துக்கள் அனைத்தையும் இழந்துவிட்டேன்! நீ கொடுப்பதாகச்சொல்லுவது ஒரு துளி! சினிமா நடிகைகளிடம் கறுப்புப்பணம் பெட்டி பெட்டியாக இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் உன்னிடம் உள்ள கறுப்புப் பணத்தையெல்லாம் கொடுத்து விடு! உன்னையும் பெரியதம்பியையும் விட்டு விடுகிறேன்! இதைத்தவிர வேறு வழியில்லை!" என்றார்.

சாந்தி சிறிது நேரம் சிந்தித்தாள் பிறகு "ஆகட்டும்" என்றாள்.

பெரியதம்பிக்கு வியப்பாக இருந்தது. அவளிடம் எவ்வளவு கறுப்புப்பணம் இருக்கும் என்று அவன் சிந்தித்தபடி உட்கார்ந்திருந்தான்.

## 28

கார் பெங்களூரை நெருங்கிக் கொண்டிருந்தது!

பெங்களூரை அடைந்ததும் கார் ஒரு பங்களாவின் முன் நின்றது. அது சாந்தியின் பங்களா அல்ல நிலவளநம்பிக்கு சொந்தமான பங்களா.

"நீங்கள் இருவரும் இங்கேதான் இருக்க வேண்டும். நமது ஒப்பந்தம் நிறைவேறியதும் நீங்கள் இங்கிருந்து வெளியேறலாம்'' என்றார் நிலவளநம்பி.

சாந்திக்குச் சினம் பொத்துக் கொண்டு வந்தது. "என்னுடைய பங்களாவில் என்னை விட்டு விடுங்கள்! இங்கே நான் இருக்க விரும்பவில்லை!'' என்று கத்தினாள் அவள்.

''உன்னுடைய பங்களாவில் உன்னுடைய விருப்பப் படியே கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். உடனே என்னிடம் பணம் தரமுடியுமா?'' என்று கேட்டார் நிலவள நம்பி!

இந்தக் கேள்விக்குச் சாந்தி தயங்கினாள். பதில் சொல்லவில்லை.

நிலவளநம்பி மெல்லச் சிரித்தார். பணம் வந்தாலும் வராவிட்டாலும் எப்படியும் தாம் கூறிய கதையின்படி சாந்தியையும் பெரியதம்பியையும் நிலவளநம்பி பழிவாங்குவது என்று முடிவு செய்துவிட்டார் என்பதைப் பெரியதம்பி அவர் சிரிப்பைப் பார்த்ததும் தெரிந்துகொண்டான். அதே நேரத்தில் சாந்தி தன்னிடம் உள்ள கறுப்புப்பணத்தை, கணக்கில் வராத சினிமாப் பணத்தை நிலவளநம்பியிடம் கொடுப்பதாகச் சொன்னது உண்மையாகவா, அல்லது வாய்ப்புக் கிடைக்கும்வரை நேரத்தைக் கடத்தவா? ஒரு தெளிவான முடிவுக்கு அவனால் வர முடியவில்லை!

அதற்குள் சாந்தியே பதில் சொன்னாள்: "நிலவளநம்பி உங்களிடம் நான் நம்பிப் பணத்தைக் கொடுத்து விடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். பணத்தை வாங்கிக் கொண்டு நீங்கள் எங்கள் இருவரையும் கொன்றுவிடலாம். அல்லது போலீஸில் நாங்கள்தாம் புலிக்குட்டியைக் கொன்றதாகக் கூறலாம். விபத்து நடந்திருப்பது என் காரில் அந்தக் காரில் புலிக்குட்டியின் பிணம் இருப்பதால் உண்மையைச் சொன்னாலும் எங்களால் தப்புவது கடினம்! பெரியதம்பி தன்னைப் புலிக்குட்டி என்று சொல்லிக் கொண்டு குத்துச்சண்டை போட்டதே பெரிய தவறு இல்லையா?''

நிலவளநம்பி வாய்விட்டுச் சிரித்தார் ''சாந்தி, நீ மிகவும் புத்திசாலி! உனக்கு அழகு மட்டுமல்ல. மூளையும் இருக்கிறது! நீ சொல்லுவதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் பணத்தைக் கொடுத்துவிட்டு, என்னை நீ நம்ப வேண்டியதுதான்!" என்றார்.

"அதுதான் முடியாது! புலிக்குட்டி விபத்தில் இறந்து விட்ட வழக்கு முடியும்வரை என்னால் பணம் தரமுடியாது. அந்த வழக்கு முடிந்ததும், நான் ஒளித்து வைத்திருக்கும் பணத்தை எடுத்துக் கொடுத்து விடுகிறேன்! போதுமா?"

"ஆகட்டும்! நீ என்னை நம்பும் வரையில் என்னிடம் பணத்தைக் காட்ட வேண்டாம்! புலிக்குட்டி தற்கொலை செய்து கொண்டான் என்று போலீஸார் முடிவு செய்த பிறகு என்னிடம் பணத்தைக் கொடு! ஆனால் நீயும் பெரிய தம்பியும் மற்றவர்களைப் பார்க்கவோ, போலீஸாருடன் தொடர்பு கொள்ளவோ விடமாட்டேன்! நீ பணம் கொடுக்க முடிவு செய்யும் வரையில் இங்கேயே சிறைப் பட்டிருக்க வேண்டியதுதான்!" என்றார் நிலவளநம்பி!

வேறு வழியின்றிச் சாந்தியும் பெரியதம்பியும் அந்தப் பங்களாவில் பாதுகாப்புடன் தங்கியிருந்தார்கள்!

நாட்கள் ஓடின. அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. சாந்தியிடம் இருந்த பணத்தை முன்பணமாகப் பெற்றுக் கொண்டார் நிலவளநம்பி. பெரியதம்பியிடம் இருந்த பத்தாயிரம் ரூபாயையும் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லிப் பெற்றுக் கொண்டார். அவர்கள் அடிக்கடி தனியே கண்டு பேசி ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு அளித்தார் நிலவளநம்பி. தப்பமுடியாது என்ற நம்பிக்கை வத்தால் எப்படியும் சாந்தி கறுப்புப் பணத்தைக் கொடுத்து விடுவாள் என எண்ணியது அவர் மனம். அவர் எண்ணம் ஓரளவுக்கு வீண் போகவில்லை.

இருபத்தைந்து நாட்கள் ஓடிவிட்டன. அவர்கள் தப்ப வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகையால் சாந்தி கறுப்புப் பணத்தைக் கொண்டுவர முடிவு செய்துவிட்டதாகச் சொல்லி, பெரியதம்பியை மட்டும் அனுப்ப நிலவளநம்பி யிடம் உதவி கேட்டாள். நிலவளநம்பி பெரியதம்பியைத் தனியாக அனுப்பினால் பணத்துடன் ஓடிவிடுவான் அல்லது போலீசுக்குப் போய் நிலவளநம்பியைச் சிக்கவைத்து விடு வான் என்று எண்ணி, பெரியதம்பியுடன் செல்லையாவை அனுப்புவதாகச் சொன்னார்,

இந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்று சாந்தி 'ஆகட்டும்' என்றாள்.

பெரியதம்பியும் செல்லையாவும் மட்டும் நிலவளநம்பி யின் காரில் சென்றார்கள். காரைச் செல்லையாவே ஓட்டிச் சென்றான்.

சாந்தியின் பங்களாவை அடைந்ததும், பங்களாவின் கதவைத் திறந்துகொண்டு இருவரும் உள்ளே சென்றார் கள். பங்களாவில் உள்ளே எல்லாம் அலங்கோலமாக இருந் தன. பங்களாவின் உள்ளே நிலவளநம்பியின் ஆட்கள் கண்டபடி பணத்தைக் கண்டுபிடிக்கத் தேடியிருக்கிறார் கள், தோல்வியடைந்திருக்கிறார்கள் என்று புரிந்து கொண்ட பெரியதம்பி மெல்லச் சிரித்தான்!

செல்லையா விழிப்புடன் அவன் பின்னாலேயே சென்றான்.

சாந்தியின் படுக்கை அறைக்குள் பெரியதம்பி போய், சுவர் ஓரமாக நின்று மேலும் கீழும் பார்த்தான். பிறகு சுவரில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் விரல்களால் பல தடவை கள் அழுத்தினான். சில வினாடிகளில், அந்தச் சுவரின் ஒரு பகுதி மட்டும், பருத்த கதவாக அப்படியே திறந்துகொண்டு

திரும்பியது. சுவரின் ஒரு பகுதியை அறையின் குறுக்கே நிறுத்தியதைப் போல் நின்றது. சுவர் இருந்த இடத்தில், அடித்தளத்தில் ஒரு பெரிய பெட்டி இருந்தது. அந்தப் பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கினான் பெரியதம்பி! அவனால் தூக்க முடியாதபோது, செல்லையா கை கொடுக்கக் குனிந்தான் மறுவிநாடி, மின்னலைப் போல் பெரியதம்பி நிமிர்ந்து அவன் கழுத்தில்குத்தினான். ஒரே குத்துதான். பொத்தென்று அப்படியே விழுந்தான் செல்லையா! அவன் உடல் குளிர்ந்து வந்தது! மூச்சு வரவில்லை! கண்கள் செருகின!

பெரியதம்பி, பெட்டியை இழுத்துக்கொண்டு, பெட்டி இருந்த இடத்தில் செல்லையாவைப் போட்டுவிட்டு மீண்டும் அந்தக் கதவைப் பழையபடியே திருப்பி வைத்து விட்டு, வெளியே வந்தான்! அவனுக்குக் கார் விடத் தெரியாது. ஆகையால் அவன் சற்றுத் தொலைவு பெட்டியுடன் நடந்துபோக முடிவு கட்டினான் பங்களாவின் கதவை மூடிவிட்டு நடந்தான். சற்றுத் தொலைவு வந்ததும் வாடகைக் கார் ஒன்றில் ஏறிக்கொண்டு புறப்பட்டான்.

''பெயர் இல்லாத தெருவுக்குப் போ'' என்றான்.

வாடகைக்கார் பெயர் இல்லாத தெருவுக்குச் சென்றது. அப்போது இரவு நேரம். நடமாட்டம் இல்லாத நேரம். தெருவில் ஒரு பக்கமாக இறங்கிக்கொண்டு வாடகைக் காரை அனுப்பிவிட்டு, அந்தக் குறிப்பிட்ட வீட்டை அடைந்தான்.

அது பூட்டியே கிடந்தது!

சாந்திக்கு உரிமையான பழைய வீடு அது. அவள் அந்த வீட்டில் இருந்தபோதுதான் சினிமாவில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆகையால் பெரும் பணம் சேர்ந்த பின்பும் அந்த வீட்டை விடாமல், வாடகைக்கு இருந்த

அந்த வீட்டை விலைக்கு வாங்கிப் பூட்டி வைத்திருந்தாள். அவள் உபயோகப்படுத்தாத பழைய கார் ஒன்றும் கார்க் கூடத்தில் நின்றது. அந்தப் பழைய காரில் பணப் பெட்டியை மறைத்து வைத்தான் பெரியதம்பி. பிறகு ஒன்றும் தெரியாதவனைப் போல் நடந்தான். அவனுக்கு ஓர் ஐயம் வந்துவிட்டது உண்மையில் சாந்தி சொன்ன பழைய வீடு இதுதானோ, வேறு வீடோ? ஆகையால் எதற்கும் அவளிடம் பணம் வைத்திருக்கும் வீட்டைக் காண் பிக்க ஒரு காகிதத்தில் படம் வரைந்து, அதைத் தனது ஷூவில் மறைத்து வைத்துக்கொண்டு நடந்தான்.

சாந்தியின் திட்டப்படி, பணத்தை அவன் எளிதில் எடுத்துச் செல்லும் இடத்தில் வைத்தாகிவிட்டது. இனி எப்படியாவது அவளையும் தப்ப வைத்து இருவரும் வேறு எங்கேயாவது ஓர் ஊருக்கு ஓடிவிட வேண்டும். கொந்தளிப்பு அடங்கும் வரையில் இருவரும் மறைந்து வாழ வேண்டும்! அவன் மீண்டும் புலிக்கூண்டை நோக்கி நடப்பதைப்போல நடந்தான்!

வழியில் மருந்துக்கடை ஒன்றுக்குப்போய், சில தூக்க மாத்திரைகளை வாங்கி அவைகளையும் ஷூக்களில் மறைத்து வைத்துக்கொண்டு அவன் புறப்பட்டான்!

## 29

பெரியதம்பி மட்டும் திரும்பிவருவதைக் கண்ட நிலவள நம்பி சீற்றத்துடன், "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"செல்லையா, பணப்பெட்டியைக் கண்டதும் என்னைக் கொல்ல முயற்சி செய்தான். ஆனால் அவன் தோற்று விட்டான்! அவன் மயக்கமாகி விழுந்து விட்டான். நான் உண்மையை உங்களிடம் சொல்ல ஓடிவந்தேன்."

"பொய் சொல்லுகிறாய்! உன்னைக் கொல்லும்படி செல்லையாவுக்கு நான் கட்டளையிடவில்லை!" என்றார் நிலவளநம்பி.

''நீங்கள் கட்டளையிடவில்லை! அவன் பெட்டியுடன் ஓடிவிட எண்ணியிருப்பான்'' என்றான் பெரியதம்பி.

நிலவளநம்பி முத்தையாவை அனுப்பிப் பார்த்து வரச் சொன்னார். காருடன் திரும்பி வந்த முத்தையா, செல்லை யாவைக் காணவில்லை என்றும் கார் மட்டும்தான் இருந்தது என்றும் சொன்னான்.

நிலவளநம்பிக்குச் செல்லையா தன்னிடமிருந்து தப்பி ஓடி விட்டானோ என்ற ஐயம் வந்தது! பெரியதம்பி செல்லை யாவைக் கொன்று விட்டிருந்தால், பணப்பெட்டியுடன் ஓடி விட்டிருப்பான் அல்லவா! அவன் ஏன் திரும்பி வரப் போகி றான் என்று நம்பினார்.

"பணம் எங்கே" என்றார் அவர்.

''பணம் இப்போது கிடைக்காது! பங்களாவுக்கு ஆட்களை அனுப்பி நீங்கள் பணத்தைத் தேடும் பழக்கத்தை விடும்வரையில் உங்களுக்குப் பணம் கிடைக்காது'' என் றான் பெரியதம்பி.

நிலவளநம்பி சீறினார், சினந்தார் கொந்தளித்தார். என்றாலும் பணம் கிடைக்கும் வரையில் அவர்களைப் பக்குவமாக நடத்துவது என்று முடிவு செய்தார்.

அவர்மீது அவர்களுக்கு நம்பிக்கை வர இருவருக்கும் பங்களாவில் உள்ளே எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்று சலுகை கொடுத்தார். அந்தச் சலுகையைப் பயன் படுத்தித்தான் அன்று சாந்தி மெல்லத் தூக்க மாத்திரை களை தேநீரில் கலந்து விட்டாள். நிலவளநம்பியும் முத்தை யாவும் அந்தத் தேநீரை பருகிவிட்டு மயக்கமாக இருந்த அந்த நேரத்தில்தான், சாந்தியும் பெரியதம்பியும் நிலவள நம்பியின் காரில் தப்பிப் போக புறப்பட்டார்கள். இருவரும் காரில் வந்து உட்கார்ந்தார்கள். கார் புறப்படவில்லை. சாந்தி எவ்வளவோ முயன்றும் கார் புறப்படவில்லை காரில் ஏதோ கோளாறு!

"இறங்கிப் போய்விடலாம்!'' என்றான் பெரியதம்பி.

"சற்றுப் பொறுங்கள்'' என்றாள் சாந்தி, பிறகு அவள் காரின் பானெட்டைத் திறந்து ஏதோ பழுது பார்த்தாள். நீண்ட நேரம் கழித்துக் கார் புறப்பட்டு விட்டது.

ஆனால், அதே நேரத்தில் மயக்கம் சற்றுத் தெளிந்து நிலவளநம்பியும் முத்தையாவும் காரிலே வந்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் காரில் புறப்படுவதைக் கண்டதும், நிலவளநம்பி மற்றொரு காரில் அவர்களைத் துரத்தினார்.

இதனால் திட்டப்படி சாந்தி பணப்பெட்டியை எடுக்கப் பழைய வீட்டுக்கு, பெயர் இல்லாத தெருவுக்குப் போக முடியவில்லை. அவள் தப்பினால் போதும் என்று காரை மைசூர் போகும் சாலையில் விட்டாள்! மைசூரை நெருங்கிக் கொண்டிருந்தபோதுதான் அந்த இரண்டாவது விபத்து— மற்றொரு விபத்து நடந்தது.

லாரியில் மோதிய கார் வளைந்து வளைந்து ஓடியது. அவன்மீது சாய்ந்து விழுந்த சாந்தியைப் பின்சீட்டில் இழுத்துப் போட்டு விட்டு, பிரேக்கைப் போட்டான் பெரிய தம்பி. கார் அப்படியே உருண்டது.

## 30

முதல் விபத்துக்கும்; இரண்டாவது விபத்துக்கும் இடையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளும் பெரியதம்பிக்கு நினைவில் வந்தன! அதே நேரத்தில் நிலவளநம்பி இரகசிய மாகப் போலீஸாருக்கு உதவி செய்வதைப்போல், தன்னை யும் சாந்தியையும் போலீசார் இரகசியமாகத் தேடும்படி செய்துவிட்டார் என்பதும் நினைவில் வந்தது.

பெரியதம்பி தலையை இப்படியும் அப்படியும் ஆட்டி விட்டுச் சற்று நிமிர்ந்து பார்த்தான். எதிரே—

வஞ்சிக்கொடி நின்றிருந்தாள்.

அவளுக்குப் பின்னால், அவனை வானவில் ஓட்டலி லிருந்து கடத்திவந்த கொடியவர்கள் நின்றிருந்தார்கள்.

பெரியதம்பி மெல்ல எழுந்தான்.

வஞ்சிக்கொடி அவனைப் பார்த்துக்கேட்டாள்: "பணம் எங்கே? இப்போதாவது சொல்லு!"

பெரியதம்பி அவளை உற்றுப்பார்த்துவிட்டு, ''நிலவள நம்பியின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள் இல்லையா?" என்றான்.

அவள் பேசவில்லை.

"எனக்கு எல்லாம் நினைவு வந்து விட்டது. நானும் சாந்தியும் நிலவளநம்பியின் காரைத் திருடிச் சென்றபோது விபத்து நடந்தது. அந்தக் காரை நிலவளநம்பி தன் பெயரில் பதிவு செய்து வைத்திருக்கவில்லை. முத்தழகு என்னும் போலிப் பெயரில் பதிவு செய்து வைத்திருக்கிறார். விபத்தில் நான் சிக்கியதும் பணம் இருக்குமிடத்தைச் சொல்லிவிட்டால் போலீசாரிடமிருந்து என்னைத் தப்ப வைக்க உன்னை அனுப்பி வைத்திருக்கிறார்? இல்லையா!" என்றான் பெரியதம்பி.

''ஆமாம், நீ மருத்துவ விடுதியிலிருந்து தப்பிய பிறகும் கூட உன்னைத் தேடித்தான் இங்கு வந்து காத்திருந்தேன். எப்படியும் நீ பணத்திற்காக இந்தப் பங்களாவுக்கு வரு வாய் என்று காத்திருந்தேன். பணம் எங்கே? சொல்லிவிட்டு நீ தப்பிவிடு'' என்றாள் வஞ்சிக்கொடி.

"பணம் இருக்குமிடத்தை நான் சொல்ல முடியாது. கொடியவர்கள் வலையில் அந்தப் பணத்தைச் சேர்ப்பதை விட, போலீசாரிடம் அதைச் சேர்ப்பதே மேல். நான் செய்த குற்றத்துக்கு அவர்கள் எனக்குத் தண்டனை அளிக்கட்டும்" என்றான் பெரியதம்பி.

''போலீசார் உன்னைத் தூக்கில் போடுவார்கள். ஏன் தெரியுமா? புலிக்குட்டியை நீ கொன்றுவிட்டாய். அடுத்த

படியாக வல்லவனை நஞ்சு கலந்த ஊசியால் குத்திக் கொலை செய்துவிட்டாய். மூன்றாவதாக செல்லையானை யும் நீ கொன்று விட்டிருப்பாய் என்றே நம்புகிறோம். புரிகி றதா?" என்றாள் வஞ்சிக்கொடி.

பெரியதம்பி சிறிது நேரம் சிந்தித்தான். பிறகு, வஞ்சிக் கொடியிடம் தனியாகப் பேச விரும்புவதாகக் கூறி அவளை உள்ளே அழைத்துச் சென்றான். இருவரும் ஒருவருக் கொருவர் எதிராகப் பேச உட்கார்ந்தார்கள். அப்போது காலைச் சொரிவதைப்போல் காலணியில் செருகியிருந்த துப்பாக்கியை எடுத்தான். பெரியதம்பி துப்பாக்கியைச் சுட்டிக் காட்டியதும்—

வஞ்சிக்கொடி வீறிட்டாள்.

''கத்தாதே! பணத்தை நான் ஒளித்து வைத்திருக்கும் இடத்தை நான் ஒருவருக்கும் சொல்லப்போவதில்லை. நடந்ததைப் போலீசாரிடம் சொல்லி, பணத்தை அவர் களிடம் ஒப்படைக்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு, அந்த அறையில் இருந்த தொலைபேசியை எடுத்தான். போலீசாருக்கு டயல் செய்தான்.

சிறிது நேரத்தில் போலீஸ் வண்டிகள் அந்தப் பங்களா வைச் சூழ்ந்தன. வஞ்சிக்கொடியும், அவளுக்கு உதவியாக இருந்தவர்களும் போலீஸ் வண்டியில் ஏறினர்.

பெரியதம்பி கையில் விலங்குடன் போலீஸ் வண்டியில் ஏறினான்.

மேலும் மேலும் தொடர்ந்து அவனும் பல குற்றங்களை செய்ததற்குத் தண்டனை பெறாமல் தப்ப முடியாது என்பதை அவன் உணராமல் இல்லை. அந்த நேரத்தில், நிலவளநம்பியைப் பிடிக்க விரைந்து சென்ற ஜீப்பைக் கண்டு அவன் மனம் மகிழ்ந்தது.